Koviloor Digital Library

திருவரங்கக் கலம்பகம்

(தெளிவுரையுடன்)



ACC.No 25758
Q22.4/2

எம். நாராயண வேலுப்பிள்ளை

Koviloor Digital Library

Koviloor Digital Library

4/2

திருவரங்கக் கலம்பகம்

(மூலமும் – தெளிவுரையும்)

தெளிவுரை ஆசிரியர்

வித்துவான் எம். நாராயணவேலுப் பிள்ளை

பதிப்பாசிரியர்

பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை

KOVILOOR ANDAVAR

A. No. 25758

KOVILOOR

முல்லை நிலையம்

சென்னை

9, பாரதி நகர் முதல் தெரு,
தி.நகர், சென்னை–600 017.
தொலைபேசி எண்: 28342249

Koviloor Digital Library

முதல் பதிப்பு: 2009

முல்லை: 212

நூல் பற்றிய விவரங்கள்

நூற் பெயர்	:	திருவரங்கக் கலம்பகம்
ஆசிரியர்	:	வித்துவான் எம். நாராயணவேலுப்பிள்ளை
தாள்	:	11.6. கி.கிராம்.
நூலின் அளவு	:	18.5. செ.மீ. × 12.5 செ.மீ.
பக்கங்கள்	:	96
வெளியீடுவோர்	:	முல்லை நிலையம் 9, பாரதி நகர், முதல் தெரு, தி.நகர், சென்னை – 600 017.
விற்பனை உரிமை	:	பாரி நிலையம் 90. பிராட்வே, சென்னை – 108.
பொருள்	:	இலக்கியம்
கணிணி அச்சு	:	லதா கம்ப்யூட்டர் சென்னை–1.
அச்சிட்டோர்	:	பிரிண்ட் பார்க், சென்னை – 1.

விலை: 30.00

Koviloor Digital Library

4/2

முன்னுரை

அஷ்டப் பிரந்தம் பிற்காலத்து எழுந்த சிற்றிலக்கியத் தொகுதிகளுள் சிறந்து விளங்குகிறது. தமிழ் இலக்கியப் பயிற்சியில் புகும் முதற் படியினராலும் புலவர்களாலும் இப் பிரபந்தத் தொகுதி போற்றிக் கற்கப்படுகிறது. இதன் பயிற்சி தமிழ்ப் புலமைக்கு ஓர் அளவு கோலாகும். இது பற்றியே 'அஷ்டப் பிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்' என்று கூறுவர். அந்தாதிச் செய்யுட்களும், யமகம், திரிபு, சிலேடை முதலிய சொல்லணிகளும் இதில் பொதிந்துள்ளன.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் தோன்றிய பின்னர் வைணவச் சார்பாக எழுந்த பிரபந்தத் தொகுதி இதுவாகும். இதில் ஆழ்வார்களின் பிரபந்தக் கருத்துக்களும் சொற்களும் சொற்றொடர்களும் நிறைந்துள்ளன.

இதன் ஆசிரியராகிய பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் 'திவ்விய கவி' எனப் போற்றப்படுபவர். அழகிய மணவாளதாசர் என்பது இவருக்கு உரிய மற்றொரு பெயர். இவர் திருமங்கையில் தோன்றியவர் என்றும், கூரத்தாழ்வார் என்னும் ஆசாரியரின் குமாரரும் சீடருமான பட்டரிடம் பஞ்ச சமஸ்காரம் பெற்றவர் என்றும், பட்டரது அருளால் அருங்கலை பயின்றவர் என்றும் கூறுவர். இவரது காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு என்பர்.

இவர் தென்மொழி வடமொழிகளில் வல்லவர். தமது வாழ்நாளின் பெரும் பகுதியைத் திருவரங்கத்தில் கழித்தவர். திருமாலிடம் தீவிர பக்தி பூண்டவர்.

அஷ்டப் பிரபந்தம் என்ற பெயர் நூலாசிரியரால் சூட்டப்பட்டதன்று. எட்டுப் பிரபந்தங்களும் தனித்தனி யாகவே எழுதப்பட்டவை. பதிப்பாசிரியர்கள் இவற்றை ஒன்றாகத் திரட்டி, 'அஷ்டப் பிரபந்தம்' என்ற பெயரை வழங்கியிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

Koviloor Digital Library

அஷ்டப் பிரபந்தத்துள் அடங்கிய நூல்கள் எட்டும் திருப்பதிகளின் அடைவு கருதி இரு பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளன. முதல் பகுதியில் திருவரங்கம் தொடர்பான நான்கு பிரபந்தங்கள் வைக்கப்பட்டுள்ளன. இப் பகுதிப் பாடல் எண்ணிக்கை 363, இரண்டாம் பகுதியில், திருவேங்கடம் தொடர்பான இரு பிரபந்தங்களும், அழகர் அந்தாதியும், நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியும் ஆகிய பிரபந்தங்கள் இடம் பெறுகின்றன. இப்பகுதியில் 427 பாடல்கள் உள்ளன. ஆகவே அஷ்டப் பிரபந்தத்தின் மொத்தப் பாடல் தொகை 790 ஆகும்.

இந்நூலில் செய்யுட்களும், தெளிவுரையும் முக்கிய குறிப்புகளும் அடங்கியுள்ளன. இக்காலச் சந்ததியார் எளிதில் பொருளுணருமாறு செய்யுட்கள் சந்தி பிரித்தும் சீர் பிரித்தும் எழுதப்பட்டுள்ளன. தெளிவுரையும் கூடுமானவரை எளிமைப் படுத்தப்பட்டுள்ளது. கதைக் குறிப்புகளும் பாடல் பெற்ற திருப்பதிகள் உள்ள இடங்களும் குறிக்கப்பட்டுள்ளன. பலரும் படித்துப் பயன் பெறுவார்களாக.

எம். நாராயண வேலுப்பிள்ளை
ஓய்வு பெற்ற தமிழாசிரியர்

Koviloor Digital Library

திருவரங்கக் கலம்பகம்

சிறப்புப் பாயிரம்

(தனியன்கள்)

நேரிசை வெண்பா

ஆழ்வார், முன், பின்னவர்க்கும் ஆமறைதந் தார், தமிழால்
வாழ்வார் மணவாளர் மாண்பவருள், – தாழ்வாரும்
எம்போ லியர்க்கும் இரங்கி, அரங் கக்கலம்ப
கம்போதம் நல்கவைத்தார் காண். 1

முற்காலத்தில் நம்மாழ்வார் பிற்காலத்தில் உள்ளார்க்கு நல்லறிவைக் கொடுக்குமாறு திருவுளம் இரங்கிச் சிறந்த வடமொழி வேதத்தைத் தமிழ் மொழியில் திருவாய் மலர்ந்து அருளினார். பிற்காலத்தில் மாட்சிமையையுடையவர்களுள் வாழ்பவ்ராகிய அழகிய மணவாளதாசர் கீழ்மை பொருந்திய எம்மைப் போன்றவர்களுக்கும் திருவரங்கக் கலம்பகம் என்னும் திவ்வியப் பிரபந்தத்தைத் தமிழில் பாடிவைத்தார்.

கலம்பகமாவது ஒரு போகும் வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் முதற் கலியுறுப்பாக முதலிற் கூறி, புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் பதினெட்டு உறுப்புக்களும் இயையுமாறு மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், வஞ்சித்துறை, ஆரியத்துறை, வெண்டுறை முதலியவற்றால், இடை இடையே வெண்பாவும் கலித்துறையும் விரவிவர; மடக்குடைச் செய்யுளும் வண்ணம்,

Koviloor Digital Library

சந்தம் முதலியனவும் பொருந்த, அந்நாதித் தொடையால் முற்றுற இறுதியும் முதலும் மண்டலித்துப் பாடுங்கால் தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்று ஐந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சர்க்கு எழுபதும், வணிகர்க்கு ஐம்பதும், வேளாளர்க்கு முப்பதுமாகப் பாடுவதொரு பிரபந்தம், இக்கலம்பக இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், வச்சணந்திமாலை, இலக்கண விளக்கம் முதலியவற்றிற் காண்க.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

சொல்நோக்கும் பொருள்நோக்கும் தொடைநோக்கும்
நடைநோக்கும் துறையின் நோக்கோடு
எந்நோக்கும் காணஇலக் கியமாவ
தன்றிஇதில் ஈடு பட்டோர்
நல்நோக்கும் புத்தியும்பத் தியும்பெறுவர்
முத்தியுண்டாம் நானென் சொல்கேன்
பல்நோக்கு மணவாளர் பகர் அரங்கக்
கலம்பகத்தைப் பாரீர் பாரீர். 2

இந்நூலானது சொல்லழகும், பொருளழகும் தொடையழகும், நடையழகும், துறையின் அழகும் ஆகிய இவை முதலிய எல்லா அழகையும் காணுமாறு இலக்கியமா யிருத்தல் மாத்தரையேயன்றி இந்நூலில் அன்புடன் மிகப் பயின்றவர் நல்ல ஒழுக்கத்தையும் நல்ல அறிவையும் நல்ல பக்தியையும் அடைவர். அவர்களுக்குப் பரமபதம் உண்டாகும். ஆகையால் பலவகை ஞானத்தையுடைய அழகிய மணவாள தாசர் திருவாய் மலர்ந்தருளிய திருவரங்கக் கலம்பகத்தின் சிறப்பை யான் என்னவென்று எடுத்துச் சொல்லுவேன். ஆராய்ந்து நோக்குங்கள் நோக்குங்கள்.

Kovileor Digital Library

காப்பு

ஆழ்வார் பன்னிருவர்

கட்டளைக் கலித்துறை

வேதம் தொகுத்துத் தமிழ்ப்பாடல்
செய்த விமலன் பொய்கை
பூதன் மயிலையர்கோன் புகழ்ச்சேரன்
புத்தூரன் தொண்டர்
பாதம் தருந்துகள் மாமழி
சைக்குமன் பாணன்மங்கை
நாதன் மதுரகவி கோதை
பாதங்கள் நண்ணுதுமே. 3

வேதங்களின் பொருளைச் சுருக்கமாக அடக்கி, தமிழ்ப் பாசுரங்களாக அருளிச் செய்த நம்மாழ்வாரும், பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்வாரும், பேயாழ்வாரும், புகழினையுடைய குலசேகராழ்வாரும், பெரியாழ்வாரும் தொண்டர் அடிப்பொடியாழ்வாரும், பெருமை பொருந்திய திருமழிசையாழ்வாரும் திருப்பாணாழ்வாரும், திருமங்கையாழ்வாரும், மதுரகவியாழ்வாரும், ஆண்டாளும் என்னும் ஆழ்வார்கள் பன்னிருவர்களது திருவடிகளைச் சேருவோம்.

நம்மாழ்வார் துதி

மறைப்பாற் கடலை, திருநாவின்
மந்தரத் தால்கடைந்து;
துறைப்பால் படுத்தி; தமிழா
யிரத்தின் சுவையமிர்தம்
கறைப்பாம் பணைப்பள்ளி யான்அன்பர்
ஈட்டம் களித்தருந்த
நிறைப்பான் கழலன்றி, சன்ம
விடாய்க்கு நிழல் இல்லையே. 4

வேதமாகிய திருபாற்கடலைத் தமது சிறந்த நாக்காகிய மந்தர பருவதத்தால் கடைந்து துறைகளின் வகைகளோடு

Koviloor Digital Library

பொருந்தச் செய்து ஆயிரம் தமிழ்ப் பாசுரங்களாகிய இனிய சுவையினையுடைய அமிருதத்தை நஞ்சினையுடைய திருவனந்தாழ்வானாகிய திருவணையிற் பள்ளி கொள்ளுதலையுடைய திருமாலினது தொண்டர்களது கூட்டம் மனமகிழ்ந்து உண்ணும்படி நிறைத்தருளிய நம்மாழ்வாரது திருவடிகளேயல்லாமல் பிறவித் துன்பமாகிய தாபத்திற்கு வேறு நிழலாவது இல்லை.

இராமானுஜர் துதி

பிடிக்கும் பரசம யக்குல
வேழம் பிளிறவெகுண்(டு)
இடிக்கும் குரற்சிங்க ஏறனை
யான், எழு பாருமுய்யப்
படிக்கும் புகழ்எம் இராமா
னுசமுனி, பல்குணமும்
வடிக்கும் கருத்தினர்க் கேதிரு
மாமணி மண்டபமே. 5

தந்தமது சமயமே சிறந்ததாக மேற்கொள்ளுகின்ற வேறு மதத்தினராகிய சிறந்த யானைகள் அலறும்படி கோபித்துக் கர்ச்சிக்கின்ற ஒலியையுடைய ஆண் சிங்கத்தை போன்றவராகிய ஏழுலகத்தவரும் நற்கதியடையும்படி பாராயணம் செய்கின்ற கீர்த்தியையுடைய எம்பெருமானாரது பல குணங்களையும் சாரமாகத் தெளிந்து எடுத்துத் தியானிக்கின்ற மனத்தையுடையவர்களுக்கே பரம பதத்திலுள்ள முக்தி மண்டபம் வாய்க்கும்.

பட்டர் துதி

வானிட்ட கீர்த்தி வளர்கூரத்
தாழ்வான் மகிழவந்த
தேனிட்ட தார்நம் பெருமாள்
குமாரர் சிவனைஅயன்

Noolaham Digital Library

தானிட்ட சாபம் துடைத்தாள்
அரங்கர்சங் காழியும்
நானிட்டன் என்றருள் பட்டர்பொன்
தாள்கதி நந்தமக்கே. 6

தேவலோகத்திலும் பரவிய புகழானது மேன் மேல்மிக்கு வளரப் பெற்ற கூரத்தாழ்வான் என்னும் ஆசாரியர் திருவுள்ளம் உகக்கும்படி அவரது திருக்குமாரராய்த் திரு அவதரித்த தேன் துளிக்கின்றன மாலையையுடைய திருவரங்க நாதரது திருக்குமாரரும் சிவனுக்குப் பிரமன் கொடுத்த சாபத்தைப் போக்கிக் காத்தருளிய ரங்கநாதரது சின்னமாகிய சங்கு சக்கரங்களை என்னுடைய தோள்களில் அடியேனையும் ஓர் அன்பனாகக் கொண்டு திருஇலச்சனை யிட்டு அருளியவருமான ஸ்ரீ பராசர பட்டரது அழகிய திருவடிகள் நமக்கு அடைக்கலமாகும்.

நூல்

மயங்கிசை கொச்சகக் கலிப்பா

- தரவு

சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசின் வீற்றிருக்கும்
நீர்பூத்த திருமகளும், நிலமகளும், அடிவருடச்;
சிறைப்பறவை புறங்காப்ப; சேனையர்கோன் பணிகேட்ப;
நறைப் படலைத் துழாய்மார்பில், நாயிறுபோல் மணிவிளங்க;
அரியதா னவர்க்கடிந்த ஐம்படையும் புடைதயங்க;
கரியமால் வரைமுளரிக் காடீன்று கிடந்தாங்கு;
பாயிரநான் மறைபரவ, பாற்கடலுள் பருமணிச்சூட்(டு)
ஆயிரவாய்ப் பாம்பணைமேல் அறிதுயிலின் இனிதமர்ந்தோய்(1)

மண்ணகம் துயர்நீங்க, வானகம் தொழுதேத்த,
கண்ணகன் சோணாட்டுக் காவிரிவாய்ப் புளினத்து,
பம்புகதிர் விசும்பிரவி பசும்புரவி வழிவிலங்கு
செம்பொன்மதில் ஏழுடுத்த திருவரங்கப் பெருங்கோயில்,

Koviloor Digital Library

ஆணிப்பொன் தகடுரிஞ்சும் அணிக்கதவ நீள்வாயில்,
மாணிக்க வெயில்பரப்பும் வயிரமணி விமானத்துள்,
மின்னிலங்கு தொடிவலய வியன்வலக்கை கீழ்கொடுத்து,
தென்னிலங்கைத் திசைநோக்கி, திருநயனம் துயில்வோய்!கேள் (2)

தாழிசை

தேவராய், தேவர்க்கும் தெரியாத ஒளியுருவாய்
மூவராய், மூவர்க்குள் முதல்வனாய், நின்றாய், நீ! (1)

போற்றுவார் போற்றுவதுன் புகழ்ப்பொருளே; ஆதலினால்
வேற்றுவா சகமடியேன் விளம்புமா றறியேனால்! (2)

பணித்தடங்கா(து) இமையவர்க்கும், பங்கயத்தோன் முதலோர்க்கும்,
பணித்தடங்காப்புகழ்அடியேன் பணித்தடங்கற் பாலதோ? (3)

'யாம் கடவுள்' என்றிருக்கும் எவ்வுலகிற் கடவுளர்க்கும்
ஆம்கடவுள் நீயென்றால், அஃதுனக்கு வியப்பாமோ? (4)

அனைத்துலகும், அனைத்துயிரும், அமைத்தளித்து துடைப்பது நீ
நினைத்தவிளை யாட்டென்றால், நின்பெருமைக் களவாமோ?(5)

கருதரிய உயிர்க்குயிராய்க் கலந்தெங்கும் பரந்து, உறையும்
ஒருதனிநா யகமென்றால், உன்புகழ்க்கு வரம்பாமோ? (6)

அராகம்

உருவென அருவென உளனென இலனென
அருமறை இறுதியும் அறிவரு நிலைமையை (1)
இவரிவர் இறையவர் எனமன உறுதியோ(டு)
அவரவர் தொழஅறு சமயமும் அருளினை (2)

கடுவளி கனல்புனல் ககனமொ(டு) அகலிடம்
உடுபதி கதிரவன் உருவமும் அருளினை (3)

Koviloor Digital Library

கடிமலர் அடியிணை கருதினர் பெறுகென
அடிநடு முடிவற அருள்பர கதியினை (4)

தாழிசை

ஒருநாலு முகத்தவனோ(டு) உலகீன்றாய் என்பரதுன்
திருநாபி மலர்ந்ததல்லால் திருவுளத்தில் உணராயால் (1)

மேருகிரி உடலவுணன் மிடல்கெடுத்தாய் என்பரதுன்
கூருகிரே அறிந்ததல்லால் கோவேநீ அறியாயால். (2)

பன்றியாய்ப் படியெடுத்த பாழியாய் என்பரது
வென்றியார் உனதெயிற்றின் மென்துகள்போன் றிருந்ததால்(3)

அண்டமெலாம் உண்டையென்பர் அறியாதார் ஆங்கவை நீ
உண்டருளும் காலத்தில் ஒருதுற்றுக்கு ஆற்றாவால். (4)

நாற்சீர் ஈரடி அப்போதரங்கம்

நஞ்சமும் அமுதமும் நரகும் வீடுமாய்
வஞ்சமும் ஞானமும் மறப்பும் ஆயினை, (1)

இருவினைப் பகுதியும் இன்ப துன்பமும்
கருணையும் வெகுளியும் கருத்தும் ஆயினை. (2)

முச்சீர் ஓரடி அம்போதரங்கம்

அலைகடல் வயிறுக லக்கினை. (1)
அவுணரை மதுகைய டக்கினை. (2)
மலை கட களிறுவ தைத்தனை. (3)
மலை தலை கவிழ எடுத்தனை. (4)

இருசீர் ஓரடி அம்போதரங்கம்

மண்ணை விண்டனை. (1)

வெண்ணெய் உண்டனை. (2)

மருது இடந்தனை. (3)

Koviloor Digital Library

எருது அடர்ந்தனை. (4)

உள் நிறைந்தனை. (5)

என் இறந்தனை. (6)

ஒருமை ஆயினை. (7)

பெருமை மேயினை. (8)

(தனிச்சொல்)

-என வாங்கு,

ஆசிரியச் சுரிதகம்

மலர்தலை யுலகத்துப் புலமை சான்ற
பதின்மரும் பணித்த பாடல் ஓதையொடு
முதுமறை கறங்க முரசம் ஆர்ப்ப
வலம்புரி பிளிறும் பொலம்புரி கோயில்
ஆழியஞ் செல்வ! ஆதியம் பரம!
வாழி வாழி! மாயோய் வாழி!
நெடியோய் வாழி! நின்மாட்டு ஒன்றே
அடியேன் வேண்டுவது அஃதுநீ மறுக்கேல்;
பூவரும் அயன்முதல் யாவரும் அறியா
மூவுலகு அளந்த நின் சேவடி வாழ்த்தித்
தொழுதகை தொண்டர்தம் தொண்டருள் சேர்க்காது
எழுவகைத் தோற்றத்து இன்னாப் பிறப்பின்
என்பொழி யாக்கையுள் சேர்ப்பினும் அவர்பால்
அன்பு ஒழியாமை அருள்மதி எனக்கே.

(1) சீர் பூத்த.......... அமர்ந்தோய்.

சிறப்பு மிகச் செழுமையான செந்தாமரை மலராகிய சிறந்த ஆசனத்தில் எழுந்தருளி யிருப்பவளும், திருப்பாற் கடலில் திரு அவதரித்தவளுமான பெரிய பிராட்டியாரும் கடலாற் சூழப்பட்ட பூமிப் பிராட்டியாரும் தமது திருக்கைகளால் நினது திருவடிகளைத் தடவவும்,

Koviloor Digital Library

சிறகுகளையுடைய பெரிய திருவடியாகிய கருடன் நினது பக்கத்தே பாதுகாத்திருக்கவும், சேனை முதலியார் ஏவல் கேட்கவும், வாசனையுடைய திருத்துழாய் மாலையையுடைய திருமார்பில் (கௌஸ்துப) ரத்தினம் சூரியன் போலப் பிரகாசிக்கவும், வெல்லுதற்கரிய அசுரர்களை அழித்தருளிய பஞ்சாயுதங்களும் இருபக்கங்களிலும் நின்று விளங்கவும், முகவுரையையுடைய நான்கு வேதங்களும் புகழவும்; திருப்பாற்கடலின் நடுவில் பருத்த மாணிக்கத்தையுடைய உச்சியையுடைய ஆயிரந் தலைகளையுடைய ஆதிசேஷ சயனத்தில் கரிய பெரிய ஒரு மலை தாமரைக் காடு பூக்கப் பெற்று, படுதிருந்தாற் போல யோக நித்திரையில் இனிதாகப் பொருந்தி யிருக்கின்றவனே!

(2) மண்ணகம்.......... கேள்.

மண்ணுலகத்தில் உள்ளாரும் விண்ணகத்தில் உள்ளாரும் தத்தம் இம்மை மறுமைத் துன்பங்கள் நீங்குமாறு வணங்கித் துதி செய்யா நிற்க, இடமகன்ற சோழ நாட்டில் திருக் காவேரி நதியின் நடுவில மணல் திட்டையில், நெருங்கிய கிரணங்களை யுடையஆகாயத்தில் செல்லுகின்ற சூரியனது பச்சை நிறத்தையுடைய குதிரை தான் செல்லும் வழியினின்று விலகிப் போவதற்குக் காரணமாகிய சிவந்த பொன் மயமானஏழு திருமதில்களைச் சுற்றிலும் உடையதிருவரங்கம் பெரிய கோயிலில், சிறந்த பொன் தகடு பதித்த அழகிய கதவுகளை யுடைய நீண்ட திருவாயிலையுடைய மாணிக்கங் களின் ஒளியை வீசுகின்ற வயிரக் கற்கள் இழைத்த பிரணவாகார விமானத்தின் உள்ளே ஒளி விளங்குகின்ற தொடி என்னும் வளையையுடைய பெரிய வலத்திருக்கையை உனது திருமுடியின் கீழே வைத்துக்கொண்டு, தெற்குத் திக்கிலுள்ள இலங்காபுரியை நோக்கி, திருக்கண் வளர்ந்தருளுகின்றவனே! அடியேன் செய்யும் விண்ணப்பத்தைக் கேட்டருள் வாயாக.

Koviloor Digital Library

இவை இரண்டும் எட்டடித் தரவுகள்

(1) தேவராய்.................நீ

இந்திரன் முதலிய தேவர்களது சொரூபியாய், அந்தத் தேவர்களுக்கும் அறிக்கூடாத தேஜோரூபியாய், அயன், அரி, அரன் என்னும் திரி மூர்த்திகளாய் அந்த மும்மூர்த்திகள் உள்ளும் தலைவனாய் நின்ற தன்னையை உடையை.

(2) போற்றுவார்.................அறியேனால்.

துதிப்பவர்கள் துதிப்பது உனது புகழாகிய பொருளையே; ஆதலினால் அடியேன் அப்புகழையே யன்றி வேறு வார்த்தையை சொல்லுந் தன்மையை அறியாதவனாய் இருக்கின்றேன்.

(3) பணி.................பாலதோ?

பாம்பைக் குழையாக அணிந்த பெரிய காதுகளை யுடைய பரமசிவனுக்கும் பிரமன் முதலிய தேவர்களுக்கும் சொல்லி முடியாத உனது திருப்புகழ் அடியேன் சொல்லி முடியத்தக்க தன்மையை யுடையதோ?

(4) யாம்.................வியப்பாமோ?

நாமே பரதெய்வம் என்றெண்ணி இறுமாந்திருக்கின்ற எல்லா உலகத்திலும் உள்ள தெய்வங்களுக்கெல்லாம் தலைமை யாகிய கடவுள் நீ யென்று சொல்லிப் புகழ்ந்தால் அது உனக்கு ஓர் அதிசயமாகுமோ? ஆகாது என்றபடி.

(5) அனைத்து.................களவாமோ?

எல்லா உலகங்களையும் அவற்றிலுள்ள சராசரங் களாகிய எல்லா உயிர்களையும் படைத்து, காத்து, அழிப்பது நீ எண்ணிய மாத்திரத்திற் செய்கிற திருவிளையாடலாகும் என்றால் அது நினது மகிமைக்கு ஒருவரையாகுமோ?

(6) கருதரிய.................வரம்பாமோ?

நீ நினைத்தற்கும் அருமையான எல்லாச் சிவாத்மாக் களுக்கும் அந்தராத்மாவாய் மறைந்து எல்லா விடத்திலும்

Koviloor Digital Library

உள்ளும் புறமும் பரவித் தங்குகின்ற ஒப்பில்லாததொரு தலைமைப் பொருளாவாய் என்றால் அது உனது பெருங்கீர்த்திக்கு ஓர் எல்லையாகுமோ?

இவையாறும் ஈரடித்தாழிசைகள்

(1) உரு.................நிலைமையை.

நீ, உருவம் உடையவன் என்றும், உருவம் இல்லாதவன் என்றும் உள்ளவன் என்றும் இல்லாதவன் என்றும் ஒரு தலையாகத் துணிந்து அறிதற்கரிய வேதாந்தங்களும் அறிதற்கரிய தன்மையை உடையவனாய் இருக்கிறாய்.

(2) இவ.................அருளினை.

இந்த இந்தத்தேவர்கள் எங்களுக்குத் தலைவர்கள் என்று எண்ணி மனத் துணிவுடனே அந்தந்த மதத்தில் உள்ளவர்கள் வணங்கும்படி ஆறுவகைப்பட்ட மதங்களையும் கொடுத் தருளினாய்.

(3) கடு.................அருளினை

கடிய காற்றும் நெருப்பும் நீரும் ஆகாயமும் பரந்த பூமியும் நட்சத்திரங்களுக்குத் தலைவனாகிய சந்திரனும் சூரியனும் இயமானனும் ஆகிய இவற்றை வகுத்தருளினாய்.

(4) கடி.................கதியினை.

வாசனையையுடைய தாமரை மலர் போன்ற உபய திருவடிகளைத் தியானஞ் செய்தவர்கள் பெறுவார்களாக. என்று முதல் இடை கடை இல்லாமல் எப்பொழுதும் அவர்களுக்கு அருளுகின்ற பரம பதத்தை உடையவனாய் இருக்கிறாய்.

இவை நான்கும் ஈரடி அராகங்கள்

(1) ஒரு.................உணராயால்.

ஒப்பற்ற பிரமனுடனே எல்லா உலகங்களையும் படைத்தாய் என்று யாவரும் சொல்லுவர். அது உனது

Koviloor Digital Library

அழகிய உந்தித் தாமரை விரிந்தது அல்லாமல் நெஞ்சில் நினைத்தாயும் இல்லை.

(2) மேரு..................அறியாயால்.

மகா மேருமலை போன்ற உடம்பினையுடைய இரணியாசுரனது வலிமையை அழித்தாய் என்பர். அது உனது கூரிய நகமே அறிந்தது அல்லால் இறைவனே! நீ அறியாய்.

(3) பன்றி..................இருந்ததால்.

வராக அவதாரமாய் பூமியை எடுத்த வலிமையையுடையாய் என்பர். அப்பூமி வெற்றி பொருந்திய உனது கோட்டில் சிறிய துளியை ஒத்து இருந்தது.

(4) அண்ட..................காற்றாவால்.

உன் திறமையை நன்றாக அறியாதவர்கள் எல்லா அண்டங்களையும் புசித்தாய் என்று ஒரு பெருமையாகச் சொல்லுவர். அவ் அண்டங்கள் நீ உண்டருளும் காலத்தில் ஒரு கவளத்திற்கும் போதாவாம்.

இவை நான்கும் பெயர்த்தும் ஈரடித் தாழிசைகள்

1. நஞ்ச..................ஆயினை.

உயிரை முடித்தே விடுவதான விடமும், போன உயிரை மீட்க வல்லதான அமிருதமும், துக்க ஏதுவான நரகமும், பேரின்பத்துக்கு ஏதுவான மோட்சமும் ஆயபிறரை வஞ்சிக்கும் வஞ்சனையும் பொருள்களின் தன்மையை உள்ளபடி அறிய வல்ல அறிவும் அவ்விஷயத்தில் மறதியும் ஆனவனாய் இருக்கின்றாய்.

2. இருவினை..................ஆயினை,

சுக சாதனமாக நல்வினை, துக்க சாதனமாக தீவினையின் பிரிவுகளும் அவற்றால் உண்டாகும் சுக துக்கங்களும் தேற்றம் அடியாக வரும் அருளும், கலக்கம் அடியாக வரும் கோபமும் எண்ணமும் ஆயினை.

Koviloor Digital Library

இவை இரண்டும் நாற்சீர் ஈரடி அம்போதரங்கங்கள்.

1. அலைகின்ற கடலினது நடுவிடத்தை கலங்கச் செய்தாய்.
2. அசுரர்களை வலிமை கெடச் செய்தாய்.
3. எதிர்த்துப் போர் செய்யவந்த குவலயா பீடமென்னும் மதயானையைக் கொன்றாய்.
4. கோவர்த்தன கிரியைத் தலைகீழாம்படி, குடையாக எடுத்துப் பிடித்தாய்.

இவை நான்கும் முச்சீர் ஓரடி அம்போதரங்கள்.

1. வராக அவதாரத்திற் பூமியைக் கோட்டாற் குத்தி எடுத்தாய்.
2. கிருஷ்ணாவதாரத்தில் இடையர்கள் வீட்டில் வெண்ணெயைப் புசித்தாய்.
3. மருதமரங்களை முறித்தாய்.
4. ஏழு எருதுகளோடு பொருது அவற்றின் வலி அடக்கினாய்.
5. எல்லாப் பொருள்கள் உள்ளும் வியாபித்திருக்கின்றாய்.
6. யாவரது எண்ணத்தையும் கடந்திருக்கின்றாய்.
7. ஒப்பற்றவனாய் இருக்கின்றாய்.
8. எல்லா மகிமைகளும் பொருந்தியிருக்கின்றாய்.

இவை எட்டும் இருசீர் ஓரடி அம்போதரங்கள்.

எனவாங்கு-அசைநிலை. இது, தனிச்சொல்.

மலர்................. எனக்கே.

பரந்த இடத்தையுடைய நிலவுலகத்தில் அறிவு மிகுந்த ஆழ்வார்கள் பத்துப் பேரும் திருவாய் மலர்ந்தருளிய பாசுரங்களாகிய தமிழ் வேதங்களினது கோஷத்துடன் பழைய வடமொழி வேதங்களும் உத்கோஷிக்கவும் பேரிகைகள் ஆரவாரஞ் செய்யவும் வலம்புரிச் சங்குகள் ஒலிக்கின்ற பொன்னாலாகிய திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற திருவாழியும் திருக்கையும் சேர்ந்த சேர்த்தியால் உண்டான அழகைச் செல்வமாக உடையவனே!

Koviloor Digital Library

ஆதி மூலமாகிய பரம் பொருளானவனே! வாழ்வாயாக! வாழ்வாயாக! மாயவனே வாழி. நீண்டு வளர்ந்தவனே வாழி உன்னிடத்தில் அடியேன் வேண்டிக் கேட்பது ஒரு வரமே யாகும். அதனை நீ மறுக்காதே. அது யாதெனில் நினது நாபித் தாமரை மலரில் தோன்றிய பிரமன் முதலாக எல்லாத் தேவர்களும் அறிய முடியாத மூன்று லோகங்களையும் அளத்தல் செய்த உனது சிவந்த திருவடிகளை வாழ்த்தி வணங்குகின்ற தன்மையை யுடைய அடியார்களது அடியார்களுள் அடியேனையும் ஒருவனாகச் சேர்த்திடாமல் எழுவகைப்பட்ட தோன்றற் பாட்டையுடைய துன்பம் தருவதாகிய பிறவிகளுள் எலும்பில்லாத புழுவுடம்பில் சேர்ந்து பிறக்கச் செய்தாலும் அவ்வடியார் அடியார் பக்கல் பக்தி நீங்காதபடி எனக்குக் கருணை செய்வாயாக.

பதின்மர் - கீழ் முதற்காப்புச் செய்யுளிற் கூறிய பன்னிருவருள் மதுர கவியும் கோதையும் தவிர்ந்த மற்றையர்.

குறிப்பு:- இந்த உரைநூலில் கீழ்-முன்பு, மேல்-இனி வருகிற என்று பொருள் கொள்க. இது பழைய வழக்கு.

இது பதினான்கடி நிலைமண்டில ஆசிரியச் சுரிதகம்

இப்பாட்டு, தரவும், தாழிசையும் அராகமும் பெயர்த்தும் தாழிசையும் அம்போதரங்கங்களும், தனிச் சொல்லும், சுரிதகமும் பெற்றுவந்த மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

நேரிசை வெண்பா

எனக்கே திருவரங்க னேபிரான் எம்மான்
தனக்கே அடிமை தமியேன் — புனக்கேழ்
மருத்துளவோன் மேலன்றி மற்றொருவர் மேலென்
கருத்துளவோ ஆராயுங் கால்? 8

ஆராய்ந்து பார்க்கும் அளவில் எனக்கு ஸ்ரீரங்க நாதனே தலைவன்; அவ் எம் பெருமானுக்கே தனியனாகிய யான் அடியவன் ஆகையால் எனது எண்ணம் வனத்திலுள்ள

Koviloor Digital Library

ஒளியையும் வாசனையையும் உடைய திருத்துழாய் மாலையையுடைய அவ் எம்பெருமான் மேல் அல்லாமல் வேறோருதேவர் மேல் உள்ளனவாமோ? ஆகா என்றபடி.

கட்டளைக் கலித்துறை

காலா யிரம்முடி யாயிரம்
ஆயிரம் கைபரப்பி
மேலா யிரந்தலை நாகம்
கவிப்பவிண் பூத்தகஞ்சம்
போலா யிரங்கண் வளரும்
பிரான்பொன் அரங்கனென்றே
மாலாய் இரங்கவல் லார்க்கெய்த
லாந்திரு வைகுந்தமே. 9

ஆயிரம் திருவடிகளையும் ஆயிரம் திருமுடிகளையும் ஆயிரம் திருக்கைகளையும் பரப்பிக்கொண்டு ஆயிரம் தலைகளையுடைய திருவனந்தாழ்வான் மேலே கவிந்திருப்ப கரிய ஆகாயத்தே மலர்ந்த செந்தாமரை மலர் போல ஆயிரம் திருக்கண்கள் அறிதுயில் செய்யப்பெற்ற எம்பெருமான் அழகிய அரங்கநாதன் என்று எண்ணி அன்புடையவர்களாய் நெஞ்சுருக வல்லவர்கட்கு வைகுண்டத்தை எளிதில் எய்த முடியும்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

வைகலந்த மூவிலைவேல் ஈசற்கும்
வாசவற்கும் வாசப் பூமேல்
மெய்கலந்த நால்வேத விரிஞ்சனுக்கும்
மேலாவீற் றிருப்பர் மாதோ
பைகலந்த பாம்பணைமேல் திருவரங்கப்
பெருநகருள் பள்ளி கொள்ளும்
கை கலந்த நேமியான் திருநாமத்
தொருநாமம் கற்றார் தாமே. 10

Koviloor Digital Library

திருவரங்கம் பெரிய கோயிலில் படம் பொருந்திய சேஷ சயனத்தின் மீது பள்ளி கொண்டருளுகின்ற கையிற் பொருந்திய திருவாழியையுடைய எம்பெருமானது ஆயிரந் திரு நாமங்களுள் ஒரு திரு நாமத்தை உச்சரித்தவர்கள் கூர்மை பொருந்திய மூன்று இலை வடிவமான தலையையுடைய சூலாயுதத்தையுடைய பரமசிவனுக்கும் தேவேந்திரனுக்கும் வாசனையையுடைய தாமரை மலரில் தோன்றிய உண்மை பொருந்திய நான்கு வேதங்களையும் உடைய பிரம தேவனுக்கும் மேன்மையாக பரம பதத்தில் மகிழ்ந்திருப் பார்கள்.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

கற்றார் எனினும் பதினால் உலகும்
கண்டார் எனினும் தண்டா மிகுபற்று
அற்றார் எனினும் திருமால் அடியார்
அல்லா தவர்வீ டில்லா தவரே
பொற்றா மரையாள் கணவன் துயிலும்
பொற்கோ யிலையே புகழ்வார் பணிவார்
மற்றார் எனினும் பெற்றார் அவரே
வானோர் திருமா மணிமண் டபமே. 11

கற்றற்கு உரிய நூல்களை எல்லாம் கற்றவர்களே யாயினும் பதினான்கு உலகங்களையும் கண்டவர்களே யாயினும் நீங்குதல் அரிய மிகுந்த இருவகைப் பற்றுக்களும் நீங்கியவர்களேயாயினும் எம்பெருமானது அடியவர்கள் அல்லாதவர்கள் மோட்சம் இல்லாதவர்களே யாவர்; பொற்றாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகளது கணவனாகிய அவ் எம்பெருமான் பள்ளி கொண்டருளுகின்ற அழகிய திருவரங்கத்தையே துதித்து வணங்குபவர்கள் மற்றவர்களேயாயினும் அவரே நித்திய சூரிகள் உறையும் இடமான முத்தி மண்டபத்தை அடைந்தவராவர்.

Koviloor Digital Library

எழுசீர் ஆசிரியச் சந்த விருத்தம்

மண்டலமும் விண்டலமும் நின்றவட குன்றமும்
வளைந்தமலை யுங்க டலுமூ
தண்டமும் அண்டமும் அயின்றவர் துயின்றருள்
அரும்பதி விரும்பி வினவின்
கொண்டல்குமு றுங்குடகி ழிந்துமத குந்தியகில்
கொண்டுநுரை மண்டி வருநீர்
தெண்டிரைதொ றுந்தரள முங்கனக முஞ்சிதறு
தென்திருவ ரங்க நகரே. 12

மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தினிடையே நின்ற மகாமேரு மலையையும் அதனைச் சூழ்ந்து நின்ற மற்றை மலைகளையும் கடல்களையும் இவை எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிய பல்பழய அண்டங்களையும் அவற்றிலுள்ள சராசரங்கள் எல்லாவற்றையும் பிரளய காலத்தில் அமுது செய்தருளிய எம்பெருமான் பள்ளி கொண்டருளுகின்ற அடைதற்கரிய திவ்விய தேசம் எதுவென்று அறிய விரும்பிக் கேட்டால், மேகங்கள் படிந்து முழங்கப் பெற்ற குடகு மலையினின்று பெருகி நீர்மதகுகளைத் தள்ளிக் கொண்டு அகிற்கட்டைகளை வாரிக் கொண்டு நுரைமிகுந்து வருகின்ற காவேரி நீரானது தெளிந்த அலைகள் தோறும் முத்துக்களையும் பொன்னையும் சிந்துகின்ற அழகிய ஸ்ரீரங்கமென்னும் நகரமேயாகும். இதில் சொல்லணி உள்ளது.

புயவகுப்பு

நாற்பத்தெண்சீர் ஆசிரிய வண்ண விருத்தம்

13. நகுகதிர் வழங்கு தகடுபடு செம்பொன்
நவமணி குயின்ற தொடியணி யணிந்து
ககனவில் இடுநீல வெற்பொத் திருந்தன
நறியபுது மன்றல் திசைமுழுதும் அண்ட
நறவுகுதி கொண்ட துளவணி அலங்கல்
மதுகரம் ஒருகோடி சுற்றப் புனைந்தன

Koviloor Digital Library

நளினமட மங்கை குவலய மடந்தை
சனகன தணங்கு பொதுவர் மகள்என்றிவ்
வனிதையர் தனபாரம் மொத்தக் குழைந்தன
நதிபதி சுழன்று கதறிரை சிந்த
அரவக டுரிஞ்சி அலற அலமந்து
வடவரை உடல்தேய நட்டுக் கடைந்தன.
இகலியிரு குன்றில் இருசுடர் எழுந்து
பொருவதென விம்ப மதிமுகம் இலங்கும்
இருகுழை இருபாடு அலைப்பச் சிறந்தன
இணையற நிமிர்ந்து வலியொடு திரண்டு
புகழொடு பரந்து புழுகொடும் அளைந்து
கலவையின் அணிசேறு துற்றுக் சூழ்ந்தன
எதிரொருவர் இன்றி அகிலவுல குந்தன்
அடிதொழ இருந்த இரணியன் மடங்க
முரணிய வரைமார்பம் ஒற்றிப் பிளந்தன
எறிகடல் கலங்கி முறையிட வெகுண்டு
நிசிசரர் இலங்கை அரசொடு மலங்க
ஒருசிலை இருகால் வளைத்துச் சிவந்தன.

மிகுகளவின் நின்ற விளவுகனி சிந்தி
மடியவிடு கன்று குணிலென எறிந்து
பறையின் அகல்வாய் கிழித்துப் பகிர்ந்தன
வெறிபடு குருந்தை முறிபட அடர்ந்து
குடநடம் மகிழ்ந்து குரவைகள் பிணைந்து
பொருதொழில் எருதேழு செற்றுத் தணிந்தன
வெடிபட முழங்கி யெழுமுகிலும் அண்டர்
ஒடுநிரை தியங்க எறிதிவலை கண்டு
தடவரை குடையா எடுத்துச் சுமந்தன
விழிவடவை பொங்க எதிர்பொர நடந்த
களிறுகாம் வெருண்டு பிளிறிட முனிந்து
புகர்முக இருகோடு பற்றிப் பிடுங்கின.

Noolaham Digital Library

அகலிடமும் உம்பர் உலகமும் நடுங்கி
அபயமடி யெங்கள் அபயம் எனவந்து
விழுதொறும் இடையூறு அகற்றிப் புரந்தன
அருகுற விளங்கும் எறிதிகிரி சங்கம்
வெயிலொரு மருங்கும் நிலவொரு மருங்கும்
எதிரெதிர் கதிர்வீச விட்டுப் பொலிந்தன

அருமறை துணிந்த பொருள்முடிவை இன்சொல்
அமுதொழுகு கின்ற தமிழினில் விளம்பி
அருளிய சடகோபர் சொற்பொற் றுயர்ந்தன
அரவணை விரும்பி அறிதுயில் அமர்ந்த
அணிதிரு அரங்கர் மணிதிகழ் முகுந்தர்
அழகிய மணவாளர் கொற்றப் புயங்களே.

முதல் பகுதி: விளங்குகின்ற ஒளியை வீசுகின்ற செம்பொன் மயமான தகட்டினாற் செய்யப்பட்டு நவரத்தினங் களும் இழைத்துள்ள தொடியென்னும் ஆபரணத்தைத் தரித்து ஆகாயத்தே தோன்றுகின்ற இந்திரவில் இடப்பட்ட கரியமலைகளை ஒத்து இருந்தன. நல்ல புதிய வாசனையானது திக்குகளில் எல்லாம் சேர்ந்து பரவும்படி தேன் பருகுதலைத் தன்னிடத்தே கொண்ட திருத்துழாயினால் ஆகிய அழகிய மாலையை மிகப்பல வண்டுகள் சூழ்ந்து மொய்க்கும்படி சூடின; தாமரை மலரில் வீற்றிருக்கின்ற அழகிய பெரிய பிராட்டியும், பூமிப்பிராட்டியும் ஜானகிப் பிராட்டியும் நப்பின்னைப் பிராட்டியும் என்று சிறப்பித்துச் சொல்லப் படுகின்ற இந்தத் தேவியரது பருத்த கொங்கைகள் தம் மேல் நெருக்குதலால் நெகிழ்ந்தன. திருப்பாற் கடலானது சுழற்சியடைந்து பேரொலி செய்து நுரைகளைச் சிந்தவும் வாசுகியானது உடல் தேய்ந்து கதறவும் மந்தரமலை வருந்தி உடம்பு தேய்வடையவும் நாட்டிக் கடைந்தன.

இரண்டாம் பகுதி: சந்திர சூரியர்கள் தம்முள்ளே மாறுபட்டு, இரண்டு மலைகளில் தோன்றி போர் செய்வது போல சந்திர பிம்பம் போன்ற முகத்தின் இருபக்கங்களிலும்

Koviloor Digital Library

விளங்குகின்ற இரண்டு குண்டலங்களும் இரண்டு பக்கங்களில் அசையும்படி சிறந்தன. ஒப்பில்லாமல் உயர்ந்து வலிமையுடனே திரட்சி பெற்று, கீர்த்தியுடனே பரவிப் புழுகுடன் கலந்து, அழகிய கலவைச் சந்தனச் சேறு மிகுதியாகப் பூசப்பெற்று நறுமணம் வீசின. தனக்கு ஒருவரும் எதிரில்லாமல் எல்லா உலகங்களும் தனது பாதங்களையே வணங்கும்படி இறுமாந்திருந்த இரணியாசுரன் அழியும்படி அவனது வலிய மலை போலும் மார்பை நகங்களினால் இடந்து கீண்டன. அலை எறிகின்ற கடல் கலங்கி முறையிடவும் இராக்கதர்கள் இலங்கைக்குத் தலைவனாகிய இராவணனுடனே கலங்கவும் கோபித்து ஒப்பற்ற கோதண்டத்தை இரண்டு தரம் வளைத்துச் சிவந்தன.

மூன்றாம் பகுதி: மிக்க வஞ்சனையுடனே தன்னைக் கொல்லும்படி நின்ற விளாமரமானது தனது பழங்களைச் சிதறி மடிந்து விழும்படி கம்சனால் ஏவப்பட்ட மாயக் கன்றைக் குறுந்தடியாகக் கொண்டு அதன்மேல் வீசி, பகாசுரனது அகன்ற வாயை இரண்டு படும்படி, கிழித்துப் பிளந்தன. வாசனை வீசுகின்ற மலர்களையுடைய குருந்த மரத்தை முறித்து விழும்படி அழித்து மனமகிழ்ந்து குடக்கூத்தாடி, குரவைக் கூத்தாடி, போர் செய்கின்ற தொழிலையுடைய ஏழ் எருதுகளைத் தழுவியழித்து சினந் தணிந்தன. ஏழு மேகங்களும் பேரொலியுண்டாகும்படி இடித்து பசுக்களும் அவற்றைக் காக்கின்ற இடையர்களும் திகைக்கும்படி வீசிப்பெய்த நீர்த்துளிகளைக் கண்டு பெரிய கோவர்த்தன கிரியைக் கொற்றக்குடையாக எடுத்துத் தரித்தன. கண்களில் வடவா முகாக்கினி போலும் தீப்பொறி பறக்கும்படி எதிரில் தன்னோடு பொருதற்கு வந்த குவலயா பீடம் என்னும் கம்சனது பட்டத்து யானை மனம் கோபித்துப் பேரொலி செய்யக் கோபித்து, செம்புள்ளிகளையுடைய அதனது முகத்தின் கண்ணேயுள்ள இரண்டு தந்தங்களையும் பிடித்துப் பறித்தன.

நான்காம் பகுதி: அகன்ற நிலவுலகத்தவரும், தேவலோகத்தவரும் பயந்து அடியவராகிய யாங்கள் அடைக்கலம் அடைக்கலம் என்று சொல்லி வந்து விழுந்து

Koviloor Digital Library

வணங்கும் போதெல்லாம், அவர்களது துன்பத்தைப் போக்கி அவர்களைப் பாதுகாத்தன. இரண்டு பக்கங்களிலும் மிக்கு விளங்குகின்ற பகைவர் மீது வீசி எறியப்படுகின்ற சக்கரமும் சங்கமும் வெயில் ஒரு பக்கத்திலும், நிலவு ஒரு பக்கத்திலுமாக எதிருக்கெதிரே ஒளியை வீசும்படி ஒளிவிட்டு விளங்கின. அறிதற்கரிய வடமொழி வேதங்களில் நிச்சயித்துச் சொல்லப்பட்ட தத்துவார்த்தங்களின் சித்தாந்தத்தை இனிய சொற்களையுடைய அமிர்தம் போன்ற இனிமை மிக்க செந்தமிழ் மொழியில் திருவாய் மலர்ந்தருளிய நம்மாழ்வாரது பாசுரங்களைப் பெற்று உயர்ந்தன, எவை என்றால் ஆதிசேஷ சயனத்தில் விரும்பி யோக நித்திரை செய்தருளுகின்ற அழகிய ஸ்ரீரங்கநாதரும் நீல மணிபோல விளங்குகின்ற முகுந்தன் என்னும் திருநாமம் உடையவருமாகிய அழகிய மணவாளரது வெற்றியையுடைய திருத்தோள்களாம்.

பிரபந்தத் தலைவனது தோள்களைப் பலபடியாக வருணித்துக் கூறுதல் புயவகுப்பாம்.

நேரிசை வெண்பா

புயம்நான் குடையானைப் பொன்னரங்கத் தானை
அயனாம் திருவுந்தி யானை — வியனாம்
பரகதிக்குக் காதலாய்ப் பாடினேன் கண்டீர்
நரகதிக்குக் காணாமல் நான். 14

நான்கு திருக்கைகளை யுடையவனும் பிரமதேவன் தோன்றிய அழகிய நாபியை உடையவனுமாகிய அழகயி திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவனை பெருமை பொருந்திய பரமபதத்தை அடைவதற்கு விருப்பங் கொண்டு நரகத்தின் திசையையும் காண ஒண்ணாதபடி நான் பாடல் பாடித் துதித்தேன். இது திரிபு என்னும் சொல்லணி.

கட்டளைக் கலித்துறை

நானந்த வைகுந்த நாடெய்தி
வாழிலென் ஞாலத்தன்றி
ஈனம் தவாத நிரயத்து
வீழிலென் யானடைந்தேன்

Koviloor Digital Library

கோனந்தன் மைந்தனை நான்முகன்
தந்தையைக் கோயில்அச்சு
தானந் தனையெனக் காரா
அமுதை அரங்கனையே. 15

இடையர் தலைவராகிய நந்த கோபரது திருமகனும் பிரம தேவனது தாதையும் திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற அச்சுதன் அநந்தன் என்னும் திருநாமங்களை யுடையவனும் எனக்குத் தெவிட்டாத அமிருதம் போன்றவனுமாகிய அரங்கனை யான் வேறு புகலிடமின்றித் தஞ்சமாக அடைந்தேன். இனி நான் அந்த ஸ்ரீவைகுண்ட லோகத்தை அடைந்து வாழ்ந்து பேரின்ப மடைந்தால் என்ன? இவ்வுலகத்தில் அல்லாமல் இழிவு நீங்காத (மிக்க இழிவுடைய) நரக லோகத்தில் விழுந்து பெருந்துன்பம். அடைந்தால் என்ன?

இச்செய்யுளிலும் திரிபு காண்க.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

அரவில் நடித்தானும் உரவில் ஒடித்தானும்
அடவி கடந்தானும் புடவி இடந்தானும்
குரவை பிணைத்தானும் பரவை அணைத்தானும்
கோசலை பெற்றானும் வீசலை உற்றானும்
முரனை அறுத்தானும் கரனை ஒறுத்தானும்
முத்தி அளித்தானும் அத்தி விளித்தானும்
பரம பதத்தானும் சரம விதத்தானும்
பாயல் வடத்தானும் கோயில் இடத்தானே. 16

காளியன் என்னும் நாகத்தின்மேல் நர்த்தனம் செய்தவனும், வலிமை பொருந்திய சிவனது வில்லை ஒடித்தவனும், காட்டை நடந்து கடந்தவனும், பூமியைக் கோட்டாற் குத்தி எடுத்தவனும், குரவைக் கூத்தாடினவனும், கடலை அணை கட்டியவனும் கௌசல்யையால் பெறப்பட்டவனும், வீசுகின்ற திருப்பாற்கடலின் அலையிற் பொருந்தியவனும், முரன் என்னும் அரக்கனை அழித்தவனும், கரன் என்னும் அரக்கனை ஒழித்தவனும் தன் அடியார்கட்கு

Koviloor Digital Library

மோட்சம் அருளுகின்றவனும், கஜேந்திர ஆழ்வானால் ஆதிமூலமே என்று கூவி அழைக்கப்பட்டவனும், பரம பதத்தில் எழுந்தருளியிருப்பவனும், சரமோ பாயத்தை அதாவது பிரபத்தியைத் தன்னை அடையும் வழியாக உடையவனும், ஆலிலையைச் சயனமாகக் கொண்டவனும், திருவரங்கத்தை இடமாகவுடைய எம்பெருமானே யாவன்.

இச் செய்யுளில் மடக்கு என்னும் சொல்லணி உள்ளது.

கட்டளைக் கலித்துறை

தானே தனக்கொத்த தாள்தா
மரைக்குச் சரண்புகுந்தாள்
ஆனேன் இனியுன் அருளறி
யேன்என தாருயிரே
தேனேஎன் தீவினைக் கோர்மருந்
தேபெருந் தேவர்க்கெல்லாம்
கோனே அரங்கத் தரவணை
மேற்பள்ளி கொண்டவனே. 17

எனது அரிய உயிருக்கு ஒப்பானவனே! தேனுக்கு ஒப்பானவனே! எனது பாவத்தைப் போக்குவதற்கு ஒரு மருந்து போல்பவனே! பெரிய தேவர்களுக்கெல்லாம் தலைவனே! அரங்கத்து அரவணைமேல் பள்ளி கொண்டவனே! யான் வேறு உவமை இல்லாமையால் தனக்குத் தானே நிகராகிய உனது திருவடித் தாமரைகளுக்கு அடைக்கலம் அடைந்து அடிமையாயினேன், இனிமேல் உனது திருவருள் இருந்து நடத்தும்படியை இன்ன தென்று அறிகின்றிலேன்.

மேக விடு தூது

நேரிசை வெண்பா

கொண்டல்காள் உம்மைக் குறித்தே தொழுகின்றேன்
அண்டர்கா ணாஅரங்கத் தம்மானைக் – கண்டு
மனத்துள்அவத் தைப்படுமென் மையல்எல்லாம்
புனத்துளவத் தைக்கொணரீர் போய். (சொல்லிப் 18

Koviloor Digital Library

கோனந்தன் மைந்தனை நான்முகன்
தந்தையைக் கோயில்அச்சு
தானந் தனையெனக் காரா
அமுதை அரங்கனையே. 15

இடையர் தலைவராகிய நந்த கோபரது திருமகனும் பிரம தேவனது தாதையும் திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற அச்சுதன் அநந்தன் என்னும் திருநாமங்களை யுடையவனும் எனக்குத் தெவிட்டாத அமிருதம் போன்றவனுமாகிய அரங்கனை யான் வேறு புகலிடமின்றித் தஞ்சமாக அடைந்தேன். இனி நான் அந்த ஸ்ரீவைகுண்ட லோகத்தை அடைந்து வாழ்ந்து பேரின்ப மடைந்தால் என்ன? இவ்வுலகத்தில் அல்லாமல் இழிவு நீங்காத (மிக்க இழிவுடைய) நரக லோகத்தில் விழுந்து பெருந்துன்பம். அடைந்தால் என்ன?

இச்செய்யுளிலும் திரிபு காண்க.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

அரவில் நடித்தானும் உரவில் ஒடித்தானும்
அடவி கடந்தானும் புடவி இடந்தானும்
குரவை பிணைத்தானும் பரவை அணைத்தானும்
கோசலை பெற்றானும் வீசலை உற்றானும்
முரனை அறுத்தானும் கரனை ஒறுத்தானும்
முத்தி அளித்தானும் அத்தி விளித்தானும்
பரம பதத்தானும் சரம விதத்தானும்
பாயல் வடத்தானும் கோயில் இடத்தானே. 16

காளியன் என்னும் நாகத்தின்மேல் நர்த்தனம் செய்தவனும், வலிமை பொருந்திய சிவனது வில்லை ஒடித்தவனும், காட்டை நடந்து கடந்தவனும், பூமியைக் கோட்டாற் குத்தி எடுத்தவனும், குரவைக் கூத்தாடினவனும், கடலை அணை கட்டியவனும் கௌசல்யையால் பெறப்பட்டவனும், வீசுகின்ற திருப்பாற்கடலின் அலையிற் பொருந்தியவனும், முரன் என்னும் அரக்கனை அழித்தவனும், கரன் என்னும் அரக்கனை ஒழித்தவனும் தன் அடியார்கட்கு

Koviloor Digital Library

மோட்சம் அருளுகின்றவனும், கஜேந்திர ஆழ்வானால் ஆதிமூலமே என்று கூவி அழைக்கப்பட்டவனும், பரம பதத்தில் எழுந்தருளியிருப்பவனும், சரமோ பாயத்தை அதாவது பிரபத்தியைத் தன்னை அடையும் வழியாக உடையவனும், ஆலிலையைச் சயனமாகக் கொண்டவனும், திருவரங்கத்தை இடமாகவுடைய எம்பெருமானே யாவன்.

இச் செய்யுளில் மடக்கு என்னும் சொல்லணி உள்ளது.

கட்டளைக் கலித்துறை

தானே தனக்கொத்த தாள்தா
மரைக்குச் சரண்புகுந்தாள்
ஆனேன் இனியுன் அருளறி
யேன்என தாருயிரே
தேனேஎன் தீவினைக் கோர்மருந்
தேபெருந் தேவர்க்கெல்லாம்
கோனே அரங்கத் தரவணை
மேற்பள்ளி கொண்டவனே. 17

எனது அரிய உயிருக்கு ஒப்பானவனே! தேனுக்கு ஒப்பானவனே! எனது பாவத்தைப் போக்குவதற்கு ஒரு மருந்து போல்பவனே! பெரிய தேவர்களுக்கெல்லாம் தலைவனே! அரங்கத்து அரவணைமேல் பள்ளி கொண்டவனே! யான் வேறு உவமை இல்லாமையால் தனக்குத் தானே நிகராகிய உனது திருவடித் தாமரைகளுக்கு அடைக்கலம் அடைந்து அடிமையாயினேன், இனிமேல் உனது திருவருள் இருந்து நடத்தும்படியை இன்ன தென்று அறிகின்றிலேன்.

மேக விடு தூது

நேரிசை வெண்பா

கொண்டல்காள் உம்மைக் குறித்தே தொழுகின்றேன்
அண்டர்கா ணாஅரங்கத் தம்மானைக் – கண்டு
மனத்துள்அவத் தைப்படுமென் மையல்எல்லாம்
புனத்துளவத் தைக்கொணரீர் போய். (சொல்லிப் 18

Koviloor Digital Library

நீர் கொண்ட காளமேகங்களே! உம்மைக் குறித்தே வணங்குகின்றேன். தேவர்களும் காணுதற்கரிய திருவரங்கத்தில் போய் எம்பெருமானைக் கண்டு, மனத்தில் துன்பப்படுகின்ற எனது வேட்கை மயக்கத்தை யெல்லாம் சொல்லி வனத்தில் வளர்கின்ற திருத்துழாய் மாலையை வாங்கிக் கொண்டு வாருங்கள்.

பின் இரண்டடி திரிபணியாம்.

கலி விருத்தம்

போயவனி யிற்சில புறச்சமயம் நாடும்
பேயறிவை விட்டெழு பிறப்பையும் அறுப்பீர்
ஆயனை அனந்தனை அனந்தசய னத்தெம்
மாயனை அரங்கனை வணங்கிமரு வீரே. 19

திருவாய்ப்பாடியில் இடையர் மனையில் வளர்ந்தவனும், அனந்தனென்னும் திருநாமம் உடையவனும், திருவனந்தாழ்வானாகிய திருவணையிற் பள்ளி கொண்டருளுகின்ற எமது மாயவனாகிய ஸ்ரீ ரங்கநாதனைச் சேர்ந்து வணங்குங்கள். அங்ஙனம் வணங்குவீராயின் உலகத்தில் போய் வேறுசில மதங்களைத் தேடித்திரிகின்ற பேய்த் தன்மையான கெட்ட அறிவை விட்டு எழுவகைப் பிறவிகளையும் போக்குவீர்.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

மருவு தந்தையும் குருவும் எந்தையும்
மருள்கெ டுப்பதும் அருள்கொ டுப்பதும்
உருகு நெஞ்சமும் பெருகு தஞ்சமும்
உரிய ஞானமும் பெரிய வானமும்
திருவ ரங்கனார் இருவர் அங்கனார்
செங்கண் மாயனார் எங்கள் ஆயனார்
அருள்மு குந்தனார் திருவை குந்தனார்
அமல நாதனார் கமல பாதமே. 20

விரும்பி வளர்க்கின்ற தந்தையும் ஆசிரியனும் எமது தெய்வமும் அஞ்ஞானத்தைக் கெடுக்கும் தன்னையுடையதும் கருணையை அளிக்கும் தன்மையுடையதும், அன்பினால் கரைந்து உருகுகின்ற மனமும், சிறந்ததாகிய பற்றுக் கோடும்,

Koviloor Digital Library

பேரின்பம் அடைதற்கு உரிய தத்துவ ஞானமும் சிறந்த பரமபதமும் எல்லாம் பிரம ருத்திரர்களைத் தமது அங்கத்தில் உடையவரும் சிவந்த திருக்கண்களை யுடைய மாயவரும் எங்களது ஆயனாரும் அருளையுடைய முகுந்தன் என்னும் திருநாமம் உடைய வரும் ஸ்ரீவைகுண்ட நாதரும் குற்றமற்ற தலைவருமாகிய ஸ்ரீ ரங்கநாதரது தாமரை மலர் போலும் திருவடிகளே.

வேறு

பாதியாய் அழுகியகால் கைய ரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்
'ஆதியாய் அரவணையாய்' என்பா ராகில்
அவரன்றோ யாம்வணங்கும் அடிகள் ஆவார்
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதில்நான் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே. 21

பாதியளவினதாய்க் குறைந்து அழுகிப்போன கால்களையும் கைகளையும் உடையவரே யாயினும் பழிக்கப் படுகின்ற செய்கைகளையும் இழிந்த குலத்தையும் உடையவர் களே யாயினும் எல்லாப் பொருளுக்கும் முதன்மையானவனே. சேஷ சயனம் உடையவனே என்று ஒரு கால் சொல்லத் துதிப்பாராயின் அவர்களன்றே யாம் எல்லாம் வணங்கும் தன்மையையுடைய பெரியோராவர். குலத்தாலும் அக் குலத்துக்குரிய ஒழுக்கங்களாலும் உயர்ந்தவரேயாயினும் நான்கு வேதங்களாலும் யாகங்களாலும் சிறந்தவரே யாயினும் தாமரை மலரில் தோன்றிய பிரமன் வணங்கும்படி கண் வளர்ந்தருளுபவனது திருவரங்கத்தை வணங்கித் துதியாத வர்கள் கர்ம சண்டாளரே யாவர்.

கட்டளைக் கலித்துறை

புலையாம் பிறவி பிறந்தென்செய்
தோம்பொன்னி பொன்கொழிக்கும்
அலையார் திருவரங் கத்தெம்பி
ரான்நம தன்னையொடும்

Koviloor Digital Library

தொலையாத கானம் கடந்தஅந்
நாள்தடந் தோறும்புல்லாய்ச்
சிலையாய்க் கிடந்தில மேநெஞ்ச
மேகழல் தீண்டுகைக்கே. 22

மனமே! இழிகுணம் உடையதாகிய இப்பிறப்பில் தோன்றி யாது பயன் அடைந்தோம்? காவேரி நதி பொன்னை அலைத்துத் தள்ளுகின்ற அலைகள் வந்து புரளுகின்ற ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியுள்ள நம் பெருமாள் ஸ்ரீ இராமாவதார காலத்தில் நமது தாயாகிய சீதா பிராட்டியுடனே கடப்பதற்கரிய கர்ட்டை நடந்து கடந்த அப்பொழுது அக்காட்டு வழிகளில் எல்லாம் அவரது திருவடிகள் மேற்படும்படி புல்லாகியும் கல்லாகியும் கிடவாமற் போனோமே!

அறுசீர் ஆசிரிய விருத்தம்

தீண்டா வழும்பும் செந்நீரும்
சீயும் நரம்பும் செறிதசையும்
வேண்டா நாற்றம் மிகுமுடலை
வினை சுமந்து மெலிவேனோ?
நீண்டாய் தூண்டா விளக்கொளியாய்
நின்றாய் ஒன்றாய் அடியாரை
ஆண்டாய் காண்டா வனமெரித்த
அரங்கா அடியேற்கு இரங்காயே! 23

தொடப்படாத அசுத்தமான நிணமும் இரத்தமும் சீயும் நரம்பும் நெருங்கிய சதையும் விரும்பப்படாத துர்க்கந்தமும் மிகுந்திருக்கின்ற இக்கடைப்பட்ட உடலைப் பயனில்லாமல் தரித்து வருந்துவேனோ? திருவிக்கிரம அவதாரத்தில் உயர்ந்து வளர்ந்தவனே! தூண்டுதல் வேண்டாமல் தானே எரிகின்ற தீபத்தினது ஒளி போன்றவனே! ஒப்பற்றதொரு பரம் பொருளாக நின்றவனே! தொண்டர்களை அடிமை கொண்டவனே! காண்டவ வனத்தை எரிக்கச் செய்த அரங்கா! அடியேனுக்குத் திருவுள்ளம் இரங்கியருள வேண்டும்.

Koviloor Digital Library

தவம்

கலிநிலைத்துறை

காயிலை தின்னும் கானில் உறைந்தும் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்தும் திரிவீர்காள்
தாயினும் அன்பன் பூமகள் நண்பன் தடநாகப்
பாயல் முகுந்தன் கோயில் அரங்கம் பணிவீரே. 24

பழங்களையும் சருகுகளையும் உண்டு வனத்தில் வசிஞ் செய்தும் பஞ்சாக்கினி மத்தியில் பொருந்தியும் பூமிப் பிரதட்சணம் செய்தும் நற்கதியடைய விரும்பி, தவஞ்செய்து திரிபவர்களே! இனி அவ்வாறு தவம் செய்ய வேண்டா. உயிர்களிடத்துப் பெற்றதாயினும் அன்புடையவனும் திருமகளுக்கும் நிலமகளுக்கும் கணவனும் பெரிய சர்ப்ப சயனத்தையுடையவனுமாகிய எம்பெருமானது திருவரங்கம் பெரிய கோயிலை வணங்குங்கள்.

இதுவுமது

கட்டளைத் கலித்துறை

வீரரங் காகிய ஐவரை
மாற்றி விடஅரவின்
போரரங் காக நடித்தபொற்
றாள்பற்றிப் பொன்னிநன்னீர்ச்
சீரரங்கா நின்தொழும் பன்என்றே
சிந்தை செய்யில்அது
கூரரங் காண் நெஞ்சமே
மாயக் கொடுவினைக்கே. 25

வலிமை யுள்ளவரான ஐம்பொறிகளை அடக்கி, போர் செய்யும் தன்மையையுடைய விஷத்தையுடைய காளியன் என்னும் நாகத்தை இனிய நடன சாலையாகக் கொண்டு அதன் படத்தின் மேலேறிக் கூத்தாடியருளிய நம் பெருமானது

Koviloor Digital Library

அழகிய திருவடிகளைச் சரணமாக அடைந்து காவேரி நதியினது நல்ல நீரால் சூழப்பட்ட ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருப்பவனே! யான் உனது அடியேன் என்று மனத்தில் நினைத்தால் அந்நினைப்புத் தானே மனமே! மிக்க வஞ்சனையையுடைய கொடிய இருவினைகளை அறுப்பதற்குக் கூரிய வாளாகும். இதனை நீ அறிவாயாக.

நேரிசை வெண்பா

கேசவனையே செவிகள் கேட்க; திருவரங்கத்து
ஈசனையே சென்னி இறைஞ்சிடுக -- நேசமுடன்
கண்ணனையே காண்கஇரு கண்இணர்கொள் காயாம்பூ
வண்ணனையே வாழ்த்துகஎன் வாய். 26

எனது காதுகள் கேசவனையே கேட்பனவாக; முடி ஸ்ரீரங்க நாதனையே வணங்குவதாக. இரண்டு கண்களும் பக்தியுடனே கண்ணனையே காண்பனவாக. வாய் கொத்தாக மலர்ந்த காயா மலர் போலும் திருநிறமுடையவனையே வாழ்த்துவதாக

தலைவனைப் பிரிந்த தலைவி கடலை நோக்கி இரங்கிக் கூறுதல்

அறுசீர் ஆசிரியச் சந்த விருத்தம்

வாயின் இரங்கினை ஆரம் எறிந்தனை
வால்வளை சிந்தினைதண்
பாயலை யுந்தினை மாலை அடைந்தனை
பாரில் உறங்கிலையால்
கோயில் அரங்கனை மாக னகந்திகழ்
கோகன கம்பொலியும்
ஆயிழை நண்பனை நீயும் விரும்பினை
ஆகும் நெடுங்கடலே! 27

பெரிய சமுத்திரமே! நீ என்போலவே வாயினால் இரங்குகின்றாய். ஆரத்தை எறிகின்றாய். வெள்ளிய

Koviloor Digital Library

வளைகளைச் சிந்துகின்றாய். தண்பாயலை உந்தினை, மாலை அடைந்தனை பூமியில் உறங்குகின்றாய் இல்லை. ஆகையால் நீயும் பெருமை பொருந்திய பொன் மயமாகி விளங்குகின்ற செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற ஆராயந்து எடுத்தணிந்த ஆபரணங்களையுடைய திருமகளது கணவனாகிய கோயில் அரங்கனை விரும்பினையாக வேண்டும்.

பிரிவாற்றாமையால் வருந்திய தலைமகள் இரங்கல்

கலிநிலை வண்ணத் துறை

கடல்வழி விடநிசி சரர்பொடி படஇரு கண்சீறி
வடகயி லையின்எழு விடைதழு வியதும் மறந்தாரோ
அடல் அரவு அமளியில் அறிதுயில் அமரும் அரங்கேசர்
இடர்கெட வருகிலர் முருகலர் துளவும் இரங்காரே. 28

வலிமை பொருந்திய சேஷசயனத்தில் யோக நித்திரை கொண்டருளுகின்ற அரங்கேசர் எனது விரகவேதனை திரும்படி வந்து அணைந்தாரில்லை. அதன்றியும் வசானை வீசுகின்ற திருத்துழாய் மாலையையும் இரங்கித் தந்தாரும் இல்லை. ஆகையால் முன்பு இராமாவதாரத்தில் சிதைக்காகக் கடல் அஞ்சி வழியை விடவும், இராவணன் முதலிய அரக்கர்கள் பொடியாகவும் தனது இரண்டு கண்களும் சிவக்கும்படி சீற்றங்கொண்டு, கிருஷ்ணாவதாரத்தில் நப்பின்னைக்காக வடக்கின்கண் உள்ள கைலாசமலை போன்ற ஏழு காளைகளையும் தழுவி நெரித்ததை மறந்து விட்டாரோ?

நேரிசை வெண்பா

இரங்கத் தனித்தனியே எய்துகின்ற துன்பத்
தரங்கத்தை ஏதால் தடுப்பீர் – அரங்கர்க்குக்
கஞ்சம் திருப்பாதம் கார்மேனி என்றவர்பால்
நெஞ்சம் திருப்பாத நீர்? 29

அரங்கர்க்குத் திருவடிகள் தாமரை மலர் போலும்; திருமேனி கார்மேகம் போலும் என்று அந்த அந்த பெருமாள்

Koviloor Digital Library

பக்கல் மனத்தைத் தீ நெறிக்கண் செல்ல வொண்ணாது திருப்பிச் செலுத்தாத நீங்கள் இந்த சம்சார சாகரத்தில் தளர்ந்து வருந்தும்படி ஒன்றன் மேல் ஒன்றாக ஓயாமல் ஓடிவந்து அடைகின்ற துன்பங்களாகிய அலைகளை வேறு எதனைப் புணையாகக் கொண்டு தடை செய்து கடந்து உய்வீர்.

தான் தூதுவிட்ட நெஞ்சு திரும்பி வராமைக்குத் தலைமகள் இரங்குதல்

பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்

நீரி ருக்கமட மங்கைமீர் கிளிகள்
தாமி ருக்க மதுகரமெலாம்
நிறைந்தி ருக்க மட அன்னம் முன்னம் நிரை
யாயி ருக்கவுரை யாமல்யான்
ஆரி ருக்கினும்என் நெஞ்சம் அல்லதொரு
வஞ்சம் அற்றதுணை இல்லை என்று
ஆதரத்தினொடு தூது விட்டபிழை
ஆரிடத்துரைசெய்து ஆறுவேன்?
சீரி ருக்குமறை முடிவு தேடரிய
திருவ ரங்கரை வணங்கியே
திருத்து ழாய்தரில் விரும்பியே கொடு
திரும்பி யே வருதல் இன்றியே
வாரி ருக்குமுலை மலர்ம டந்தையுறை
மார்பி லே பெரிய தோளிலே
மயங்கி இன்புற முயங்கி என்னையும்
மறந்து தன்னையும் மறந்ததே. 30

பேதைமைக் குணத்தையுடைய தோழிகளே! எதிரில் நீங்கள் எல்லோரும் இருக்கவும், கிளிகள் எல்லாம் இருக்கவும் வண்டுகள் எல்லாம் திரளாக இருக்கவும் இவர்கள் ஒருவரையும் நம்பித் தூதாகச் சொல்லியனுப்பாமல் யான் வேறே யார் இருந்தாலும் எனது மனத்தை யன்றி வஞ்சனை யில்லாததொரு வேறுதுணை இல்லை என்றெண்ணி

Koviloor Digital Library

அன்போடு அம்மனத்தைத் திருவரங்க நாதர் பக்கல் தூதாக அனுப்பியதனால் உண்டான தவற்றை யாரிடத்து சொல்லி மனம் தணிவேன். அம்மனம் என் செய்தது. என்னில், சிறப்புப் பொருந்திய வேதாந்தங்களும் தேடிக் கண்டறிய ஒண்ணாத திருவரங்கரைக் கண்டு வணங்கி என்குறையைச் சொல்லி அவர் திருவுள்ளம் உவந்து திருத்துழாய் மாலையைத் தந்தருளினால் அதனை வாங்கிக் கொண்டு திரும்பி வருதல் இல்லாமல், கச்சுப் பொருந்திய தனங்களையுடைய தாமரை மலரில் வாழும் பெரிய பிராட்டியார் வீற்றிருக்கின்ற திருமார்பிலும் பெரிய திருத்தோள்களிலும் வேட்கை மிகுதியால் மயக்கங் கொண்டு இன்ப முண்டாகத் தழுவிக் கொண்டு என்னையும் மறந்து தூதாகப்போன தன்னையும் மறந்து விட்டது.

வண்டு

நேரிசை வெண்பா

மறக்குமோ காவின் மது வருந்தி அப்பாற்
பறக்குமோ சன்னிதிமுன் பாமோ – சிறக்கத்
தருவரங்கள் கேட்குமோ தாழ்க்குமோ நெஞ்சே!
திருவரங்கர் பாற்போன தேன். 31

நெஞ்சே! திருவரங்க நாதரிடத்து தூது சென்ற வண்டு இடையிலுள்ள சோலைகளில் தங்கி, அங்குள்ள தேனைப் பருகி என்னை மறந்து விடுமோ? அன்றி அச்சோலைக்கு அப்புறத்தே பறந்து செல்லுமோ? அங்ஙனம் சென்று கோயிலின் முன்னே சேருமோ? சேர்ந்து எனக்குச் சிறப்புண்டாக அவர் அருளுகின்ற வரங்களைக் கேட்குமோ? அன்றி தாமதித்து நிற்குமோ? அறியேன்.

அம்மானை

கலித்தாழிசை

தேனமரும் சோலைத் திருவரங்கர் எப்பொருளும்
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலர்காண் அம்மானை!

Koviloor Digital Library

ஆனவர்தாம் ஆண்பெண் அலியலரே யாமாகில்
சானகியைக் கொள்வாரோ தாரமாய் அம்மானை
தாரமாய் கொண்டதுமோர் சாபத்தால் அம்மானை. 32

மூன்று மங்கையர் அம்மானையாடும் போது பிரபந்தத் தலைவனது தன்மையை வார்த்தையாடுவது அம்மானை யென்னும் உறுப்பின் இலக்கணம்.

வண்டுகள் விரும்பி நெருங்குகின்ற சோலைகளை யுடைய திருவரங்கர் எல்லாப் பொருள்களும் ஆனவரே. ஆயினும் ஆணும் பெண்ணும் அலியும் அல்லாதவரே! அம்மானை. அங்ஙனம் எல்லாப் பொருள்களும் ஆகிய அவர் ஆணும் பெண்ணும் அலியும் அல்லாதவரே ஆவரானால், சீதையை மனைவியாகக் கொள்வாரோ? அம்மானை! அங்ஙனம் மனைவியாகக் கொண்டதும் ஒரு சாபத்தினால் அம்மானை.

சாபம் - சபிப்பு; வில்.

பிரிவாற்றாத தலைவியைக் கண்ட நற்றாய் இரங்கல்

பதினான்கு சீர் ஆசிரியவிருத்தம்

மானை எய்தவர் இன்னம் என்மட
மானை எய்திலர் நேமியால்
மாலை தந்தவர் பைந்து ழாய்மது
மாலை தந்திலர் இந்திரன்
சோனை மாரி விலக்கி விட்டவர்
சொரிகண் மாரிவி லக்கிலார்
சுரர்க ளுக்குஅ முதம்கொ டுத்தவர்
சேதி வாய்அ முதங்கொடார்
தானை ஐவர் கொடிக்கு அளித்தவர்
தானை கொண்டது அளிக்கிலார்
சங்க ரற்கு இரவைத் தடுத்தவர்
தையலுக்கு இரவைத் தடார்

Noolaham Digital Library

ஆனை முன்வரும் அன்பு ளார்முலை
யானை முன்வரும் அன்பிலார்
அணிஅ ரங்கர் நடத்தும் நீதி
அநீதி யாக இருந்ததே. 33

முன்பு சீதைக்காக மாயையால் வந்த மாரீசனாகிய மானை அம்பினால் எய்தவர் இன்னமும் எனது இளையமான் போன்ற பார்வையையுடைய மகளை அடைந்தாரில்லை. முன்பு பாரத யுத்தத்தில் சக்கரத்தால் சூரியனை மறைத்து அந்திப் பொழுதைச் செய்தவர் என் மகளுக்குத் தேனினை யுடைய பசிய திருத்துழாய் மாலையைத் தந்தாரில்லை. முன்பு கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்து இந்திரனால் விடாது பெய்விக்கப்பட்ட பெருமழையைத் தடுதருளியவர் என் மகள் கண்களினின்றும் பெய்கின்ற கண்ணீர் மழையைத் தடுத்தாரில்லை. முன்பு பாற்கடல் கடைந்து தேவர்களுக்கு அமிருதத்தைக் கொடுத்தவர் என் மகளுக்கு ஒளிபொருந்திய தமது திருவாய் மலரிடத்து உளதாகிய அதர அமிருதத்தைக் கொடுத்தாரில்லை.

துரியோதனன் தம்பியால் துகில் உரியப்பட்ட பாண்டவர் மனைவியாகிய திரௌபதிக்குத் துகிலை மேன்மேல் வளரும்படி அருளியவர், என் மகளுக்குத் தாம் கொண்ட துகிலைக் கொடுத்தருளினார் இல்லை. உருத்திரனுக்குப் பிச்சை எடுத்தலைப் போக்கியருளியவர், எம்மகளுக்கு நெடிது ஊழி காலமாய்த் தோன்றி வளர்கின்ற இராப்பொழுதை அங்ஙனம் வளரவொட்டாது தடுத்தாரில்லை. கஜேந்திர ஆழ்வானுக்கு எதிரில் வந்து பாதுகாத்து அருளிய அன்புடையவர் என்மகளது தனங்களாகிய யானைகளுக்கு முன்னே வந்து தோன்றுகின்ற அன்பில்லாதவராய் இருந்தார். ஆகையால் அழகிய ரங்கநாதர் நடத்துகின்ற முறைமையெல்லாம் முறைமை அல்லாததாக இருந்தது. அடிதோறும் வந்த சொற்களே மீண்டும் வந்ததனால் மடக்கு. இது முரண் தொடை.

Koviloor Digital Library

எண்சீர் ஆசிரிய விருத்தம்

இருளினும் வெளியினும் மருளினும் தெருளினும்
இன்பமே அடையினும் துன்பமே மிடையினும்
ஒருவர்முன் புகழினும் இருவர்பின்பு இகழினும்
ஊனிறந்து அழியினும் யான்மறந்து ஒழிவனோ
சுருதிநின் றோலிடும் கரதலம் நாலொடும்
துவளுநூல் மார்பமும் பவளவாய் மூரலும்
திருவரங் கேசர்தம் சுருள்கருங் கேசமும்
செய்யநீள் முடியும்அத் துய்யசே வடியுமே. 34

இருட்பொழுதிலும் பகற்பொழுதிலும் மாயை வசத்தால் மயங்குங் காலத்தும் அங்ஙனம் மயங்காமல் தெளிந்திருக்கும் காலத்தும். இன்பந்தானே வந்து சேர்ந்தாலும் துன்பம் தானே மிக்கு நெருங்கி வந்தாலும், ஒருத்தர் முன்னே வந்து நின்று புகழ்ந்தாலும் பலர் பின்னே நின்று இகழ்ந்தாலும், உடம்பு அழிந்து ஒழிந்தாலும் யான் திருவரங்க நாதரது நான்கு வேதங்களும் புகழ்ந்து நின்று முறையிடுகின்ற நான்கு திருக்கைகளையும் முப்புரி நூல் அசைந்து விளங்குகின்ற திருமார்பையும் பவழம் போலச் சிவந்த திருவாய் மலரினது புன் சிரிப்பையும் சுருண்ட கரிய மயிர் முடியையும் செவ்விதாகிய அழகிய நீண்ட திருமுடியையும் தூய்மையான சிவந்த திருவடிகளையும் மறந்து போவேனோ? மறவேன்.

நேரிசை வெண்பா

சேவடியால் மூவடிமண் தென்னரங்கத் தம்மான்நீ
மாவலிபால் வாங்கியநாள் மண்ணுலகோ—மூவுலகும்
வீசுங்கா லோவலிய வெவ்வினையேன் நெஞ்சமோ
பேசுங்கால் ஏதோ பெரிது? 35

அழகிய ரங்கநாதனே! நீ சிவந்த திருவடிகளால் மூன்றடி நிலத்தை மகாபலி சக்கரவர்த்தி பக்கல் வேண்டியிரந்து உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி அளந்த பொழுது

Koviloor Digital Library

நிலவுலகமோ, மூன்று உலகத்திலும் பரவிய திருவடியோ அத் திருவடிகளைத் தன்னுள் அடக்கிய வன்மையாகிய கொடிய வினைகளையுடையது எனது மனமோ சொல்லுமிடத்து எதுவோ பெரியது?

நாரைவிடுதூது

கட்டளைக் கலித்துறை

பெருவரம் கேசவன் அல்லாது
அருள்செய்யும் பேரிலைவேறு
ஒருவர்அங் கேசற்றும் ஓதார்என்
காதலை ஓடியெங்கும்
கருஅரங் கேசலிக் கத்திரி
வோர்க்குக் கருணைசெய்யும்
திருஅரங் கேசற்கு நீசொல்ல
வேண்டும் செழுங்குருகே. 36

செழுமையான நாரையே! பெரிய வரங்களைக் கொடுத்தருளுகின்றவர் கேசவனேயல்லாமல் வேறு ஒருவரும் இல்லை. அவ் எம்பெருமானிடத்தே விரைந்து சென்று எனது விருப்பத்தை வேறு ஒருவர் சிறிதும் சொல்லார். ஆகையால் எவ்விடத்தும் எல்லாப் பிறப்புக்களிலும் கருப்பத்தினிடத்தே துன்பம் உண்டாக மாறிமாறிப் பிறந்து இறந்து அலைபவர் களுக்கு அருள் செய்கின்ற திருவரங்கேசற்கு நீ விரைந்து சென்று என் காதலைச் சொல்ல வேண்டும். இது திரிபு என்னும் சொல்லணி. வேறு மத்திம தீபம்.

இரங்கல்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

குருகிறங்கு கானலே கருநிறங்கொள் பானலே
கொடியிருண்ட ஞாழலே நெடியகண்டல் நீழலே
பொருதரங்க வேலையே நிருதர் அங்க மாலையே
போதயின்ற கம்புளே ஏதையின்று இயம்புகேன்

 Koviloor Digital Library

திருவரங்கர் இணையிலா ஒருபுயங்க அணையிலே
திகழ்வலக்கை கீழதா முகிழ்மலர்க்கண் வளர்வதோர்
கருணைநம்பு வதனமும் அருணவிம்ப அதரமும்
காவிகொண்ட மேனியும் ஆவிகொண்டு போனவே.37

நாரைகள் தங்குவதற்கு இடமாகிய கடற்கரைச் சோலையே! கரிய நிறத்தைக் கொண்ட கருங்குவளையே! கொடிகளால் இருண்டிருக்கின்ற குங்கும மரமே! நீண்ட தாழையின் நிழலே! மோதுகின்ற அலைகளையுடைய கடலே! அரக்கரது உருவம் போன்ற கருநிறத்தையுடைய அந்திப் பொழுதே! மலர்களை உணவாகக் கொண்டு உண்கின்ற நீர்வாழ் பறவையே! இப்போது யான் என்னவென்று எடுத்துச் சொல்லப் போகிறேன். திருவரங்கநாதர் ஒப்பில்லாத ஒரு சேஷசயனத்தில் விளங்குகின்ற வலத்திருக்கையைத் தலைன் கீழ் இடத்ததாகக் கொண்டு அரும்பி மலர்ந்த தாமரை போன்ற திருக்கண்கள் அறிதுயில் செய்யப் பெற்ற ஒப்பில்லாத அருளால் விரும்பப்படுகின்ற திருமுக மண்டலமும் சிவந்த கொவ்வைப் பழம் போன்ற திரு அதரமும் கருங்குவளை மலர் போன்ற திருமேனியும் எனது உயிரைக் கொள்ளை கொண்டு போயின.

அரங்கன் பெருமை

பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

போனகம் பதினாலு புவனம் திருப்பள்ளி
பொறியரவ ணைப்பாற்கடல்
பூமடந் தையும் நில மடந்தையும் தேவியர்
புராதன மறைக்குமெட்டா
வானகம் பேரின்ப முடன்வீற் றிருக்குமிடம்
வாகனம் வயினதேயன்
மலர்வந்த வான்முகன் திருமைந்தன் அவன்மைந்தன்
மதிசூடி வாசவன்முதல்
தேனகும் கொடைமௌலி முப்பத்து முக்கோடி
தேவருனது ஏவல் செய்வோர்
திங்களும் பரிதியும் சங்கமும் திகிரியும்
திரிவனமும் நிற்பனவுமாம்

Koviloor Digital Library

ஏனைமன் னுயிர்முழுதும் விளையாட நீவகுத்
திட்டபல மாயை அதனால்
எழிலரங் கந்துயிலும் எம்பிரான் நின்பெருமை
யாவரே வாழ்த்துவாரே? 38

திருவரங்கத்தே பள்ளி கொள்கின்ற எமது தலைவனே! உனக்கு உணவு பதினான்கு உலகங்கள். அழகிய சயனம் புள்ளிகளையுடைய ஆதிசேஷனாகிய சயனத்தையுடைய திருப்பாற்கடல். மனைவியர் பூமடந்தையும் நிலமடந்தையும்; பேரின்பமுடன் எழுந்தருளியிருக்கின்ற இடம் பழமையாகிய வேதங்களும் அறியவெண்ணாத பரமபதம், வாகனம் கருடன்; அழகிய குமாரன் நாபிக்கமலத்தில் தோன்றிய பிரமதேவன், அப் பிரம தேவனது மகன் பிறையை முடியிற் சூடிய உருத்திரன்.

உனது குற்றேவல்களைச் செய்பவர்கள் இந்திரன் முதலிய தேனோடு மலர்கின்ற பூமாலையைச் சூடிய முடியையுடைய் முப்பத்து மூன்று கோடி தேவர்கள். சங்கு சக்கரங்கள் சந்திர சூரியர்கள். நீ விளையாட்டாக ஏற்படுத்திய பலவாகிய மாயைப் பொருட்கள் சஞ்சரிப்பனவும் நிலையாக நிற்பவை களும் ஆகிய மற்றை நிலை பொருந்திய உயிர்கள் எல்லாம். ஆகையால் உனது பெருமையை எவர்தாம் வாழ்த்தவல்லவர்? எவர்க்கும் வாழ்த்தல் அரிது.

பிரிவாற்றாது வருந்தும் தலைவி இரங்கல் அவயவம் எழுதரிது எனல்

பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

வாழும் மவுலித் துழாய்மணமும்
மகரக் குழைதோய் விழியருளும்
மலர்ந்த பவளத் திருநகையும்
மார்பில் அணிந்த மணிச்சுடரும்
தாழும் முளரித் திருநாபித்
தடத்துள் அடங்கும் அனைத்துயிரும்

Koviloor Digital Library

சரண கமலத்து உமைகேள்வன்
சடையிற் புனலும் காணேனால்
ஆழ முடைய கருங்கடலின்
அகடு கிழியச் சுழித்தோடி
அலைக்கும் குடகா விரிநாப்பண்
ஐவாய் அரவில் துயிலமுதை
ஏழு பிறப்பில் அடியவரை
எழுதாப் பெரிய பெருமானை
எழுத அரிய பெருமானென்று
எண்ணாது எழுதி இருந்தேனே! **39**

திவ்விய மங்கள சொரூபமாக வாழ்கின்ற திருமுடியிற் சூடிய திருத்துழாயில் நறுநாற்றத்தையும், காதிலணிந்த மகர குண்டலங்களை அளாவுகின்ற திருக்கண்களில் திருவருளையும், பவளம் போலச் சிறந்த திருவாய் மலரில் அழகிய புன்சிரிப்பையும் திருமார்பில் சாத்திய கௌஸ்துப மணியின் ஒளியையும், ஆழ்ந்த அழகிய நாபிக்கமலத்தின் இடத்தில் அடங்கியிருக்கின்ற எல்லா உயிர்களையும், திருவடித் தாமரை மலர்களில் பார்வதியின் கணவனாகிய பரமசிவனது சடையில் தங்குகின்ற கங்கை நீரையும் காண்கின்றேன் இல்லை.

ஆகையால் ஆழமுடைய கரிய கடலினது நடுவிடம் பிளவுறும்படி, சுழித்துக் கொண்டு விசையாக ஓடி அலைக்கின்ற மேற்றிசையினின்றும் வருகின்ற காவேரி நதியினது நடுவில் ஐந்தலை நாகத்தில் கண்வளர்கின்ற அமிர்தம் போல் இனியவனும் தன்னடியார்களை ஏழுலகைப் பிறவித் தொகையுள் எழுதாத பெரிய பெருமாளுமாகிய அரங்கநாதனை எழுதுதற்கரிய கட்டழகுடைய எம் பெருமான் என்று நினையாமல் என் பேதைமைத் தன்மையால் சித்திரத்தில் தீட்டி வாளா போயினேன்.

இது எழுதரிது என்னும் துறை.

Koviloor Digital Library

இதுவும் அது
தலைவி மாலையை வேண்டி இரங்குதல்
எண்சீர் ஆசிரிய விருத்தம்

இருங்குங்கு மத்தோள் அரங்கேசர் முன்னாள்
இலங்கா புரங்கா வலன்காலி னால்வீழ்
கருங்குன்று போல்மண் முகங்குத்தி வீழக்
கண்டார் எனக்கின்று தண்தார் அளித்தால்
மருங்கெங்கும் வம்புஓது வார்வாய் அடங்கும்
வாடைக்கும் நிலமங்கை ஆடைக்கும் நோகேன்
நெருங்கும் தனம்சந் தனம் பூசல் ஆகும்
நீளாது இரா மையல் மீளாது இராதே. 40

முற்காலத்தில் இராமாவதாரத்தில் இலங்கை நகருக்கு அரசனாகிய இராவணன் பெருங்காற்றினால் விழுகின்ற கரிய பெரிய மலைபோல் மண்ணை முகத்தாற் குத்தி (தலை கவிழ்ந்து) விழும்படி செய்தவராகிய குங்குமம் அணிந்த பெரிய தோள்களையுடைய அரங்கேசர் இன்றைக்கு எனக்குக் குளிர்ந்த திருத்துழாய் மாலையை அருள் செய்வாராயின் சுற்றுப்பக்கங்கள் எல்லாம் இருந்து வம்பு அளக்கின்ற மகளிரது வாய் அடங்கும், வாடைக் காற்றுக்கும் நிலமகளது ஆடையாகிய கடலுக்கும் வருந்தேன். நெருங்கிய கொங்கைகளில் சந்தனம் பூசல் ஆகும். இராப்பொழுது நீடியாது. காதல் நோயும் நீங்காமல் இராது (நீங்கும்.)

நெஞ்சொடு கிளத்தல்
அறுசீர் ஆசிரிய விருத்தம்

தேடு கின்றனை ஐம்பொறி களுக்குஇரை
தேடியும் கிடையாமல்
வாடு கின்றனை வீடுசென்று என்றினி
மருவுடை மடநெஞ்சே!

 Koviloor Digital Library

ஆடு கின்றிலை அழுகிலை தொழுகிலை
அரங்கனைக் கரம்கூப்பிப்
பாடு கின்றிலை நினைகிலை பதின்மர்தம்
பாடலின் படியாயே. 41

அறியாமையையுடை மனனே! அரங்கனைக் கைகூப்பி வணங்குகின்றாய் இல்லை. அங்ஙனம் வணங்கிப் பேரானந்தத்தால் நர்த்தனம் செய்கின்றாய் இல்லை; கண்ணீர் விட்டு அழுகிறா இல்லை. ஆழ்வார்கள் பதின்மரது பாசுரத்தின் படியே பாடித் துதிக்கின்றாய் இல்லை. தியானம் செய்கின்றாயும் இல்லை. இவையேயும் அன்றி பஞ்சேந்திரியங்களுக்கும் உணவைத் தேடுகின்றாய் அவ்வாறு தேடியும் இரை அகப்படாமையால் வருந்துகின்றாய். ஆகையால் நீ இனி என்றைக்குப் பரமபதம் போய்ச் சேர்வாய்.

செவியறிவுறூஉ - உலகிற்கு அறிவுறுத்தல்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

ஆயினை மனையைச் சேயினைப் பிதாவை
அனத்தினைத் தனத்தினை விரும்பும்
பேயினை மறந்து நோயினை மூப்பைப்
பிறப்பினை இறப்பினைத் துடைப்பீர்
ஆயனை முளரி வாயனை எங்கள்
அமலனைக் கமலனைப் பயந்த
தாயனை நெடிய மாயனை வடபால்
தரங்கனை அரங்கனைத் தொழுமே. 42

தாயையும் மனைவியையும் மக்களையும் தந்தையையும் சோற்றையும் பொருளையும் விரும்புகின்ற அறியாமைக் குணத்தை விட்டொழிந்து வியாதியையும் கிழத்தனத்தையும் பிறப்பையும் இறப்பையும் ஒழிக்க விரும்புபவர்களே! திருவாய்ப்பாடியில் வளர்ந்தவனும் செந்தாமரை மலர் போன்ற திருவாயையுடையவனும் குற்றமற்றவனும் நாபிக்கமலத்துப் பிரமதேவனைப் பெற்ற தாயானவனும்

Koviloor Digital Library

மிகுந்த மாயையையுடையவனும் ஆலிலையிலும் பாற்கடலிலும் பள்ளிகொள்பவனுமாகிய எங்கள் அரங்கனை வணங்குங்கள்.

இறுதி மடக்கு

கட்டளைக் கலிப்பா

தொழப்பெ றாதந்த வாரணத் தந்தமே
    தொட்டி றுத்ததும் வாரணத் தந்தமே
வழுத்து தாள்முன் புவனங் கடந்ததே
    மலர்ந்த உந்தி புவனங் கடந்ததே
ஒழித்த தும்குழைச் சங்கரன் சாபமே
    ஒசித்த தும்குழைச் சரங்கரன் சாபமே
அழித்த தும்பொரு தானவர் அங்கமே
    அரிதன் ஊர்இனிது ஆன அரங்கமே. 43

எம்பெருமானை வணங்கி அவன் பெருமையை இவ் அளவிற்று என்று முற்றும் அறிய மாட்டாதது அப்படிப் பட்ட வேதாந்தமே. கையால் தொட்டு முறிக்கப்பட்டதுவும் குவலயா பீடமென்னும் யானையின்கோடுகளே. யாவராலும் புகழப்படுகின்ற திருவடி முன்காலத்தில் இராமாவதாரத்தில் காட்டை நடந்து கடந்தது. மலர்ந்த நாபிக் கமலம் எல்லா உலகங்களையும் படைத்தது. போக்கியருளப்பட்டதும் சங்கினாலாகிய குண்டலத்தையுடைய சிவனது சாபமே முறித்ததும் வளையும் தன்மையுடைய சிவனது வில்லே அழிக்கப்பட்டதும் போர் செய்கிற அசுரரது உடம்பே அப்பெருமானது திருப்பதி இனிதான அரங்கமே.

உயிர் வருக்க மோனை

திருநாம மகிமை

நேரிசை ஆசிரியப்பா

அரங்க மாளிகைக் கருங்கடல் வண்ணனை
ஆலிமா முகிலை வாலி காலனை
இந்த ளூருறை எந்தைபெம் மானை
ஈசன் நான்முகன் வாசவன் தலைவனை

Acc-No. 25758
Koviloor Digital Library

உள்ளுவார் உள்ளத்து உள்ளுறை சோதியை
ஊரகம் நின்றருள் நிரகத்து அடிகளை
எவ்வுள் மாயனைத் தெய்வநா யகனை
ஏர்மலி சிகரத்து நீர்மலை ஆதியை
ஐவாய் அரவில் அறிதுயில் அமலனை
ஒருகால் மொழியினும் ஒழிகுவை நெஞ்சே!
ஓதநீர் ஞாலத்து உழலும்
ஔவியப் பிறப்பில் அழுந்தி வாடுவதே. 44

நெஞ்சே! திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளி யிருக்கின்ற கரிய கடல் போலும் திருநிறமுடையவனை, திருவாலியில் எழுந்தருளியிருக்கிற கரிய மேகம் போன்ற வனை, வாலிக்கு யமனாயிருந்தவனை, திரு இந்தளூரில் எழுந்தருளியிருக்கின்ற எம் தந்தையாகிய பெருமானை, சிவன், பிரமன், இந்திரன் இவர்களுக்கு இறைவன் ஆனவனை, அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின் கண் தங்குகிற ஒளி உருவம் ஆனவனை, திருவூரகத்திலும் திருநீரகத்திலும் எழுந்தருளியிருக்கின்ற சுவாமியை, திருஎவ்வுளூரில் எழுந்தருளியிருக்கின்ற மாயனை, தேவர் தலைவனை, அழகுமிக்க சிகரத்தையுடைய திருநீர் மலையில் எழுந்தருளி யிருக்கின்ற முதல்வனை, ஐந்தலை நாகத்தில் யோக நித்திரை செய்தருளுகின்ற குற்றமற்றவனை, நீ ஒரு திருநாமத்தைச் சொல்லித் துதித்தாலும் குளிர்ச்சியையுடைய கடலாற் சூழப் பட்ட நிலவுலகத்தில் அலைந்து வருந்துகின்ற பொறாமையை யுடைய பிறவிக்கடலில் முழுகி வாட்டமடைவதை நீங்குவாய்.

திருஎவ்வுளூர் இப்போது திருவள்ளூர் என வழங்குகிறது.

தோழி இரங்கல்

பதினான்குசீர் ஆசிரியவிருத்தம்

வாடி ஓட வனசம் அன்ன
இருகண் வெள்ளம் அருவிபோல்
மருவி யோட மதனன் வாளி
உருவியோட வாடையூடு

Koviloor Digital Library

ஆடி ஓட அன்றில் ஓசை
செவியில் ஓட வண்துழாய்
ஆசை யோடும் எங்கள் பேதை
ஆவி ஓடல் நீதியோ?
மோடி ஓட அங்கி வெப்பு
மங்கி யோட ஐங்கரன்
முடுகியோட முருகன் ஓட
முக்கண் ஈசன் மக்களைத்
தேடி யோட வாணன் ஆயி
ரம்பு யங்கள் குருதிநீர்
சிந்தி யோட நேமி தொட்ட
திருவ ரங்க ராசரே! 45

துர்க்கை ஓடவும், அக்கினியும் காய்ச்சலும் வலியிழந்து ஓடவும், ஐந்து கைகளையுடைய விநாயகன் விரைந்து ஓடவும்; அவன் தம்பியாகிய சுப்பிரமணியன் ஓடவும், மூன்று கண்களையுடைய சிவன் தன் பிள்ளைகளைத் தேடிக் கொண்டு ஓடவும், பாணாசுரனது ஆயிரங்கைகளும் ரத்த வெள்ளத்தில் சிதறியோடவும் சக்கரத்தைப் பிரயோகித்த திருவரங்க நாதரே!

தாமரை மலர் போன்ற இரண்டு கண்களும் வாடிப் போகவும், கண்ணீர்பெருக்கு மலையருவிபோல வழிந் தோடவும், மன்மதனது புஷ்ப பாணங்கள் உள்ளே தைத்து ஊடுருவிச் செல்லவும், வாடைக் காற்று இடையே நுழைந்து செல்லவும், அன்றிற் பறவை கூவுகின்ற ஒலி காதுகளின் உட்புகவும், வளப்பம் பொருந்திய திருத்துழாய் மாலையின் இடத்துள்ள ஆசையுடனே எங்கள் பெண்ணாகிய இவள் உயிர்நீங்கப் பெறுதல் உமக்கு நீதியாகுமோ? ஆகாது என்றபடி.

ஊர் உரைத்தல்

எண்சீர் ஆசிரியச் சந்தவிருத்தம்

சருகு அருந்திஜம் பொறிவ ருந்துஅருந்
தவர்கள் அண்டர் குஞ்சர முகன்குகன்
பரிதி சந்திரன் சிவன்அ யன்புரந்
தரன்நி ரந்தரம் பரவும் எந்தையூர்

Koviloor Digital Library

குருகை தஞ்சைதென் கணபு ரங்குறுங்
குடிகு டந்தைவண் துவரை இந்தளூர்
திருவை குந்தம்அஞ் சனசி லம்புஅயிந்
திரபு ரம்செழுந் திருவ ரங்கமே. 46

உலர்ந்த இலைகளைப் புசித்து, பஞ்சேந்திரியங்களும் வருந்துகின்ற பிறரால் செய்தற்கரிய தவத்தையுடைய முனிவர்களும், தேவர்களும், யானை முகத்தையுடைய விநாயகனும், முருகனும், சூரியனும் சந்திரனும் சிவனும் பிரமனும் இந்திரனும் இடைவிடாமல் புகழ்ந்து வணங்கு கின்ற எம்பெருமானது திருப்பதி - திருக்குருகூரும், திருத்தஞ்சை நகரும், அழகிய திருக்கண்ணபுரமும் திருக்குறுங்குடியும், திருக்குடந்தையும், வளப்பம் பொருந்திய திருத்துவாரகையும், திருஇந்தளூரும், ஸ்ரீவைகுண்டமும், திருவேங்கட மலையும், திருவயிந்திரபுரமும், செழுமையான திருவரங்கமேயாம்.

இறுதி மடக்கு

தரவு கொச்சகக் கலிப்பா

திருவரங்கம் திருக்கோயில்
சேர்ந்துஉமது திருக்குலயில்
தருவர் என்றும் வைகும்தம்
தயங்கு ஒளிசேர் வைகுந்தம்
ஒருமருங்கில் நந்துஉடையார்
ஒழிந்தோர்சன னம்துடையார்
மருவமறம் திருப்பீரே
வணங்கமறந்து இருப்பீரே. 47

எம்பெருமானை வணங்குவதற்கு மறந்திருப்பவர்களே! நீங்கள் திருவரங்கம் பெரிய கோயிலை அடைந்து உங்களது மாறுபாடு ஒழிந்தால், இடது பக்கத்தில் சங்கத்தையுடைய அரங்கநாதர் எந்நாளும் தாம் வீற்றிருக்கின்ற தமது விளங்கு கின்ற ஒளி பொருந்திய பரமபதத்தைக் கொடுத்தருளுவர். அவர் ஒழிந்த மற்றைத் தேவர்கள் பிறப்பைப் போக்க

Koviloor Digital Library

மாட்டார்கள். ஆகையால் அந்த எம்பெருமானையே சேரும்படி உங்கள் மாறுபாட்டை மாற்றுங்கள்.

சித்து

கட்டளைக் கலிப்பா

திருப்பொற் பாவைக்குக் கஞ்சம்பொன் னாக்கிய
சித்த ரேம்சுத்தக் காயா மலரென
உருபொற் பான திருவரங் கேசனார்
ஊர கத்துநின் றார்சென்றி றைஞ்சினோம்
இருப்புப் பாடகம் காட்டினார் யாமவர்க்கு
இரும்பை ஆடகம் ஆக்கினோம் ஈயத்தை
நருக்கி வெள்ளிய தாகவு ருக்குவோம்
நமது வித்தைக்கு அமுதே அருமையே. 48

அழகிய பொற்பதுமை செய்ததற்கு (அழகிய திருமகளுக்கு வெண்கலத்தைப் பொன்னாகச் செய்து கொடுத்த (பொற்றாமரை மலரைச் செய்து கொடுத்த) சித்தர்கள் யாங்கள், தூயதாகிய காயாம் பூப்போல வடிவழகு பொலிவு பெற்ற திருவரங்கேசனார் ஊரினிடத்தில் நின்றார். (திருவூரகமென்னும் திருப்பதியில் நின்ற திருக்கோலமாய் எழுந்தருளியிருந்தார்) அங்குச் சென்று அவரை வணங்கினோம். அப்போது அவர் இரும்பினாலாகியதொரு பாடகம் என்னும் காலணியைக் காண்பித்தார். (பாடகம் என்னும் திருப்பதியைத்தாம் வீற்றிருக்கும் இடமாகத் தெரிவித்தார்.) யாம் அவர்க்கு இரும்பைப் பொன்னாகச் செய்து தந்தோம். பெரிய காளியன் என்னும் பாம்பின் படத்தை நடிக்கும் இடமாகச் செய்ததோம். ஈயத்தை நருக்கி வெள்ளியாக (வெண்மையை உடையதாக) உருக்குவோம். (இதுவெல்லாம் அருமையன்று.) நமது வித்தைக்கு உணவு (முத்தியுலகம்) கிடைத்தற்கு அரியதாமோ? (அரிய தன்று என்பதாம்.)

ஊரகம்-உலகளந்த பெருமாள் கோவில், காஞ்சிபுரம்.

பாடகம் - பாண்டவர்தூதர் சந்நிதி, காஞ்சிபுரம்.

Koviloor Digital Library

இதுவும் அது
கட்டளைக் கலித்துறை

அரும்பித் தளையவிழ் நாள்மாலை
மார்பன் அரங்கன்னெங்கள்
பெரும்பித் தளையும் பிறப்பறுத்
தாண்டபி ரான்சித்தரேம்
தரும்பித் தளையும் தராவும்பொன்
னாக்கித் தருவெம்அப்பா
திரும்பித் தளையினும் நெய்பால்
அமுதினும் சிந்தனையே. 49

முன்னர் அரும்பாகி, பின்பு முறுக்கு விரிந்து மலர்ந்த அன்றலர்ந்த பூமாலையை யணிந்த திருமார்பை உடையவனும் எங்களது பெரு மயக்கம் பொருந்திய பிறவியைப் போக்கி அடிமை கொண்ட தலைவனுமாகிய அரங்கநாதனது சித்தர்கள் யாங்கள்; தரப்பட்ட பித்தளையையும் திருமாலுக்குப் பித்துத் தருகின்ற திருமகளையும், தராவையும் (பூமி தேவியையும்) பொன்னாக்கிச் செய்து கொடுப்போம். அப்பா! (அங்ஙனமாகவும் எங்களுக்கு) மனம் வெண்ணெயிலும் நெய்யிலும் பால் தயிர்களிலும் திரும்பிற்று.

இச்செய்யுளில் சிலேடையென்னும் பொருளணியோடு திரிபு என்னும் சொல்லணியும் அமைந்திருத்தல் காண்க.

அறுசுவைப் பெயரும் மாலையாய் அமைந்த பாடல்
நேரிசை வெண்பா

சிந்திக்கத் தித்திக்கும் செவ்வாய் துவர்த்துப்பூஆம்
புந்திக்கு ளேயின் புளிமேவும் – நந்தம்
கருவரங்கம் கைத்தழலும் காவிரியின் ஊடே
திருவரங்கத் தேவளரும் தேன். 50

Koviloor Digital Library

திருக் காவேரியின் நடுவில் திருவரங்கத்து திருக்கண் வளர்ந்தருளுகின்ற இன்பஞ் செய்தலால் தேன் போன்ற கடவுளை மனத்தினால் நினைத்துத் தியானம் செய்யும் பொழுது இனித்திருக்கும். மிகச் சிவந்த பவழம் போன்ற வாயோடு கூடியிருக்கும் அறிவினுள்ளே நினைக்க நினைக்க இன்பந்தந்து பொருந்தும். நமது கர்ப்பமாகிய சிறுவீட்டைக் கோபித்து ஒழிக்கும்.

இதில் தித்திப்பு, துவர்ப்பு, உப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு என்னும் அறுசுவைகளின் பெயர்கள் அடுக்கி வந்துள்ள நயம் அறிக.

இது அரதன மாலை யணி. பின் இரண்டடி திரிபு என்னும் சொல்லணியாம்.

கட்டளைக் கலித்துறை

தேனந்து சோலை அரங்கேசர்
சேவடி மேல்விசயன்
தானந்த நாளையிற் சாத்திய
மாலையும் தாள்விளக்கும்
வானந்த ருங்கங்கை நன்னீரும்
சென்னியில் வைக்கப்பெற்ற
ஆனந்தந் தானல்ல வோமுக்க
ணான்மன்றுள் ஆடுவதே? 51

தேன் மிக்குப் பெருகுகின்ற பூஞ்சோலைகளையுடைய ரங்கநாதரது சிவந்த திருவடிகளின் மேல் அருச்சுனன் பதினான்காம் நாட் பாரதப் போரில் அருச்சனை செய்த பூமாலையையும் உலகளந்த காலத்துப் பிரமன் தனது கைக் கமண்டல தீர்த்தத்தால் ஸ்ரீபாதத்தை விளக்கிச் சேர்த்த ஆகாச கங்கையின் புண்ணிய தீர்த்தத்தையும் தனது முடியில் தரிக்கப் பெற்ற பெரு மகிழ்ச்சியாலன்றோ திரிநேத்திரனாகிய பரமசிவன் சபையில் நடனஞ் செய்வது.

இது ஏதுத்தற்குறிப்பேற்ற அணி.

Koviloor Digital Library

தலைமகளது உருவெளிப்பாடு கண்ட தலைமகன் இரங்கல்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

ஆடும் படநா கணைமேல் அணையும்
அமலன் கமலத் தவனும் சிவனும்
நாடும் திருமால் துயில்கோ யிலின்வாய்
நறைவார் பொழிலூ டுறைவார் அளகக்
காடும் குழையைச் சாடும் குவளைக்
கண்ணும் குதலைப் பண்ணும் கரியின்
கோடும் தரளத் தோடும் புருவக்
கோதண் டமுமே மூதண் டமுமே. 52

எடுத்தாடுகின்ற படங்களையுடைய் சேஷசயனத்தின் மேல் பள்ளிகொண்டருளுகின்ற குற்றமற்றவனாகிய, பிரமனும் சிவனும் எந்நாளும் ஆராய்ந்து வணங்குகின்ற, எம்பெருமான் திருக்கண் வளர்கின்ற திருவரங்கம் பெரிய கோயிலில் தேன் ஒழுகுகின்ற சோலையினிடத்தில் தங்குகின்ற மாதராது கூந்தற் கற்றையும், காதை மோதுகின்ற கருங்குவளை மலர் போன்ற கண்களும், இசைப்பாட்டுப் போலினிய மழலைச் சொல்லும், யானைத்தந்தம் போன்ற தனங்களும் முத்தினாலாகிய தோடென்னும் காதணியும், வில்லுப் போன்ற வளைந்த புருவங்களுமாகிய இவையே பழமையான அண்டகோளம் முழுவதும் காணப்படுகின்றன.

கைக்கிளை - ஒரு தலைக் காமம்

எழுசீர் ஆசிரியச் சந்த விருத்தம்

அண்டமுழு துண்டவர் உமிழ்த்தவர் இடந்தவர்
அளந்தவர் வளர்ந்த ருளுமா
சண்டபண ஐந்தலை அனந்தசய னம்திகழ்
தருந்திருவ ரங்கர் வரைமேல்
கண்ட தொரு கொம்பதில் இரண்டுமக ரங்கள்ஒரு
கஞ்சம்இரு வெஞ்சி லைமணாம்

Koviloor Digital Library

கொண்டதொரு கொண்டல்இரு கெண்டைஒரு
(தொண்டை இரு
கும்பம்ஒரு செம்ப ணிலமே. **53**

எல்லா அண்டங்களையும் பிரளய காலத்தில் திருவயிற்றில் கொண்டவரும், பிரளயம் நீங்கிய பின்பு மீண்டும் வெளிப்படுத்தியவரும், வராக அவதாரத்தில் கோட்டால் குத்தி எடுத்தவரும், திருவிக்கிரம அவதாரத்தில் அளந்தருளிய வருமாகிய பெரிய கொடிய படங்களை யுடைய ஐந்து முடிகளையுடைய திரு அனந்தாழ்வானாகிய திருப்பள்ளி மெத்தையில் திருக்கண் வளர்ந்தருளுகின்ற திருவரங்க நாதரது மலையின் மேல் காணப்பட்டதாகிய இளவஞ்சிக் கொம்பொன்று உண்டு. அதில் இரண்டு மகரங்களும் ஒரு தாமரை மலரும் இரண்டு வளைந்த விற்களும் வாசனை கொண்டதாகிய ஒரு நீர் கொண்ட மேகமும் இரண்டு கெண்டை மீன்களும் ஒரு கொவ்வைக் கனியும் இரண்டு குடங்களும் அழகிய தொரு சங்கமும் உண்டு. கழுத்து சங்காக உருவகிக்கப்பட்டுள்ளது.

இது தலைவன் தலைவியைக் கண்டு அவளது எழிலை வியந்துரைத்தது. இது உருவக உயர்வு நவிற்சியணி.

ஒரு கொம்பு - தலைமகளின் உருவத்துக்கும்,
இரண்டு மகரங்கள் - இரண்டு குண்டலங்களுக்கும்,
ஒரு கஞ்சம் - முகத்துக்கும்
இருவெஞ்சிலை - இரண்டு புருவங்களுக்கும்,
கொண்டல் - கூந்தலுக்கும்,
இருகெண்டை - இரண்டு கண்களுக்கும்,
தொண்டை - அதரத்துக்கும்,
இருகும்பம் - இரண்டு தனங்களுக்கும்,
செம்பணிலம் - சிவந்த கழுத்துக்கும்,

உவமையாதல் காண்க.

Koviloor Digital Library

தலைவி இரங்கல்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

செம்பொன்அ ரங்கத் தரங்கநீர்ச்
சீதள சந்திர வாவிசூழ்
கம்புளு டன்பயில் நாரைகாள்
காதலை என்சொலி ஆறுவேன்
வெம்பனி வந்தது வந்தபின்
வேனிலும் வந்தது வேனில்போய்ப்
பைம்புயல் வந்தது சென்ற நம்
பாதகர் வந்திலர் காணுமே! 54

சிவந்த பொன் மயமாகிய திருவரங்கத்திலுள்ள அலைகளோடு கூடிய நிரையுடைய குளிர்ந்த சந்திர புஷ்கரணியில் திரண்டுள்ள நீலப்பறவைகளுடன் பழகுகின்ற நாரைகளே! என் காமநோயை என்னவென்று சொல்லித் தணிவேன்? கொடிய பனிக்காலம் வந்தது. அது கழிந்த பின்பு வெயிற் காலமும் வந்தது. வெயிற் காலம் கழிந்த பின் பசிய கார் காலம் வந்தது. அங்ஙனம் வந்த பின்பும் விட்டுப் பிரிந்து போன நமது பாதகர் வந்தாரில்லை காணும் - முன்னிலைப் பன்மை அசைச் சொல். பாதகர் - தீவினையுடையவர். இரக்கஞ் சிறிதுமின்றிப் பிரிந்து போனதேயும் அன்றி குறிப்பிட்ட காலத்தே மீண்டும் வாராமை பற்றிப் பாதகரென்றார்.

சம்பிரதம் – ஜாலவித்தை

பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

காணாத புதுமைபல காட்டுவன் கட்செவிகள்
எட்டையம் எடுத்தாட்டுவன்
கடல் பருகு வன்பெரிய கனகவரை யைச்சிறிய
கடுகினில் அடைத்து வைப்பன்
வீணார வாரம்மு தண்டமுற விளைவிப்பன்
இரவுபகல் மாறாடுவன்

Kovilgal Digital Library

விண்ணையும் மறைப்பன் எழுமண்ணையும் எடுப்பனிவை
விளையாடும் வித்தையன்றால்
நீணாக ணைப்பள்ளி யில் திருஅ ரங்கத்து
நெடிதூழி துயிலும்பிரான்
நெற்றிக்கண் ஆனவனை நான்முகனை வாசவனை
நிமிருமிரு சுடரைமுதலாச்
சேணாடர் யாவரையும் அடிமை கொண்டு அவரவர்
சிரத்திற் பொறித்துவிட்ட
திருச்சக்க ரம்பொறிஇ லாதஒரு கடவுளைத்
தேடியினி முன்விடுவேனே. 55

குறிப்பு:- இந்திர ஜாலம் முதலிய மாயவித்தை வல்லவர் தமது சிறப்பைத் தாமே எடுத்துக் கூறுவதாகச் செய்யுள் செய்வது சம்பிரதம் என்னும் உறுப்பாம்.

இதுவரையிலும் கண்டிராத பல அற்புதச் செய்கை களைக் காண்பிப்பேன். அஷ்ட நாகங்களையும் படம் எடுத்து ஆடச் செய்வேன். ஏழு கடல்களையும் குடிப்பேன். பெரிய பொன்மயமான மேருமலையைச் சிறிய கடுகினுள்ளே அடங்கும்படி சேர்த்து வைப்பேன். வீணான பேரொலியைப் பழைய அண்டங்களில் எல்லாம் பொருந்தும்படி உண்டாக்குவேன். இரவைப் பகலாகவும் பகைல இரவாகவும் மாறச் செய்வேன். ஆகாயமுழுவதையும் மறைப்பேன்.

ஏழு உலகங்களையும் எடுப்பேன். இவைகள் எல்லாம் விளையாட்டாகச் செய்யும் சிறந்ததொரு ஜாலவித்தையல்ல. இனி திருவரங்கத்து நீண்ட ஆதிசேஷனாகிய திருப்பள்ளி மெத்தையின் மேல் நெடிய பல ஊழி காலமாய்த் திருக்கண் வளர்கின்ற எம்பெருமான் நெற்றியில் நெருப்புக் கண்ணையுடைய சிவனையும் பிரமனையும் இந்திரனையும் விளங்குகின்ற சந்திர சூரியர்களையும் முதலான தேவர்கள் அனைவ்ரையும் தமக்கு அடிமையாகக் கொண்டு அவ்வத் தேவர்களது தலைகளில் அடையாளம் செய்துவைத்த அழகிய சக்கர முத்திரை உடைத்தாகாத ஒரு தெய்வத்தைத் தேடிக்கொண்டு வந்து முன்னே விடுவேன். (அத்தகைய தெய்வம் வேறு எங்கும் இல்லை என்பர்.)

Koviloor Digital Library

இடம் அணித்து என்றல்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

முன்னம்ஏழ் புரவியார் இரவிகாய் வெயிலினால்
முத்தரும் பியகலா முழுமதித் திருமுகத்து
அன்னமே! இன்னம் ஓர் காவதம் போதுமேல்
அகலும்இப் பாலைஅப் பால்அரைக் காவதம்
என்னையாள் உடையவன் துயிர்அரா அமளியும்
இலகுபொற் கோயிலும் இந்துவின் பொய்கையும்
புன்னைவாய் நீழலும் புரிசையும் மதுகரம்
பூவிரித் துறையும்அக் காவிரித் துறையுமே. 56

எதிரில் ஏழு குதிரைகள் பூண்ட தேரினை யுடைய சூரியன் எரிக்கின்ற வெயிலினால் முத்துப் போலும் வேர்வை பொடித்த கலைகள் நிறைந்த பூர்ண சந்திரன் போன்ற அழகிய முகத்தையுடைய (நடையால்) அன்னம் போன்றவளே! இன்னம் ஒரு காத தூர வழிபோவோமாயின் இந்தப் பாலை நிலம் நீங்கும்: அது நீங்கின பின்பு என்னை அடிமையாகக் கொண்ட எம்பெருமான் அறிதுயில் அமர்கின்ற சர்ப்ப சயனமும் விளங்குகின்ற பொன் மயமான திருக்கோயிலும் சந்திர புஷ்கரணியும் புன்னை மரத்தினது வாய்ப்பாகிய நிழலும் மதில்களும் வண்டுகள் மலர்களை விரித்துப் படிந்துதேன் உண்ணுகின்ற அந்தக் காவேரி தீரமும் அரைக்காத தூரமே.

முன்னங்காய் வெயில்-எதிர் வெயில்.

தோழி தலைமகனது இரவுக்குறி விலக்கல்

கட்டளைக் கலித்துறை

துறைமதி யாமல்இக் கான்யாறு
நீந்திச் சுரங்கடத்தல்
நிறைமதி யாளர்க்கு ஒழுக்கம்அன்
றால்நெடு மால்அரங்கத்து

Koviloor Digital Library

இறைமதி யாவரும் ஆரா
அமிர்தன்ன இந்துநுதல்
குறைமதி யாள்பொருட் டால்கங்குல்
வாரல் கொற்றவனே! 57

எமது தலைவனே! செல்லும் வழியை நன்றாக ஆராயாமல் இக் காட்டாற்றை நீந்திக் கடந்து கொடிய காடுகளைத் தாண்டி வருதல் நிறைந்த அறிவினை யாளும் தன்மையுடையார்க்கு நல்லொழுக்கம் அன்று. ஆகையால் அரங்கநாதராகிய நீண்டதிருமால் திருப்பாற்கடலைத் தேவர்களோடும் கடையாமல் தோன்றின தெவிட்டாத அமிருதத்தை யொத்த பிறைச்சந்திரன் போன்ற நெற்றியை யுடைய இவள் நிமித்தமாக இராத்திரியில் வருதலை இனி ஒழிவாயாக.

வாரல் - வாராதே. எதிர்மறை வியங்கோள் வினை முற்று. திரிபணி.

மறம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

கொற்றவன்தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா!
குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய்?
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழன்
அவதரித்த திருக்குலமென்று அறியாய் போலும்!
மற்றதுதான் திருமுகமே ஆனால் அந்த
வாய்செவிகண் மூக்கெங்கே மன்னர் மன்னன்
பெற்றஇள அரசானால் ஆலின் கொம்பைப்
பிறந்தகுல துக்கேற்பப் பேசு வாயே. 58

வெற்றியையுடைய வேந்தனது திருமுகத்தைக் கொண்டு வந்த தூதனே! முகமில்லாத முண்டத்துக்கோ வேடர்களாகிய எங்களது பூங்கொம்பை (மணஞ் செய்து தரும்படி) கேட்டாய். எங்கள் குலம் இருவகைப் பற்று மற்று முற்றத் துறந்த முனிவர்கள் எல்லாம் அடைக்கலம் அடைகின்ற

Koviloor Digital Library

திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கின்ற நம் பெருமானது நண்பனாகிய குகப் பெருமாள் திரு அவதாரஞ் செய்த மேன்மையான குலமென்று நீ அறிந்திலை போலும்; நீ கொணர்ந்தது திருமுகமே ஆனால் அதன் உறுப்பாகிய வாய், செவி, கண், மூக்கு எங்கே? அரசர்க்கு அரசனாகிய சக்கரவர்த்தி பெற்ற இளைய அரசானால் அது தான் பிறந்த குலத்திற்குப் பொருந்த ஆலமரத்தின் கொம்பை மணம் பேசுவாயாக.

ஓலையைத் திருமுகம் என்பது குழூஉக்குறி. கொம்பு- மரத்தின் கொம்பு; பூங் கொம்பு போன்ற பெண். இளஅரசு - இளைய அரச மரம்; இளவரசன்.

இதுவும் அது
பதினான்கு சீர் ஆசிரியவிருத்தம்

பேச வந்த தூத செல்ல
ரித்த ஒலை செல்லுமோ?
பெருவ ரங்கள் அருள ரங்கர்
பின்னை கேள்வர் தாளிலே
பாசம் வைத்த மறவர் பெண்ணை
நேசம் வைத்து முன்னமே
பட்ட மன்னர் பட்ட தெங்கள்
பதிபு குந்து பாரடா!
வாச லுக்கு இடும்ப டல்க
வித்து வந்த கவிகைமா
மகுட கோடி திரைய ளக்க
வைத்த காலும் நாழியும்
வீசு சாம ரங்கு டில்தொ
குத்த கற்றை கற்றிலும்
வேலி யிட்டது அவர்கள் இட்ட
வில்லும் வாளும் வேலுமே 59

எங்கள் பெண்ணை மணம் பேசுவதற்கு வந்த தூதனே! செல்லினால் அரிக்கப்பட்ட ஓலை செல்லுமோ? பெரிய வரங்களைத் தம் அடியார்கட்கு அருளுகின்ற திருவரங்க

Kovilloor Digital Library

நாதரும் நப்பின்னையின் கணவருமாகிய நம் பெருமாளது திருவடிகளில் அன்பு வைத்த வேடர்களாகிய எங்களது மகளை விரும்பி முன்னாட்களில் பட்டந்தரித்த அரசர்கள் பட்ட பாடுகளை எங்கள் ஊரினுள் வந்து பார் அடா; எங்கள் வீட்டு வாசலில் வைத்து மூடும் படல் அவர்கள் பிடித்து வந்த குடைகளாம். தினை அரிசிகளை அளக்கும் படியாக வைத்த மரக்கால்களும் படியும் முதலிய அளவு கருவிகள் அவர்கள் தரித்துவந்த பெரிய கிரீடங்களின் கூட்டமாம். எங்கள் குடிசைக்குமேல் மூடுகின்ற கற்றை அவர்களுக்கு வீசி வந்த சாமரங்களாம். எங்கள் வீட்டின் நாற்புறத்திலும் வேலியாகப் போடப்பட்டுள்ளது அவர்கள் தோல்வியடைந்து போட்டுவிட்டுச் சென்ற வில்லும் வாளும் வேலுமே ஆகும்.

நேரிசை வெண்பா

வேலையுல கிற்பிறக்கும் வேலையொழிந் தோமில்லை
மாலையரங் கேசனைநாம் மாலையினும் – காலையினும்
உன்னிநைந்தோம் இல்லை உடலெடுத்த அன்றுமுதல்
என்னினைந்தோம் நெஞ்சே இருந்து? 60

நெஞ்சே! நாம் கடல் சூழ்ந்த நிலவுலகத்தில் பிறக்கும் தொழிலை நீங்கிற்றிலோம், ரங்கநாதனாகிய திருமாலைக் காலையும் மாலையும் தியானித்து மனம் நெகிழ்கிற்றிலோம். இவ்வுடம்பு எடுத்த அந்நாள் முதல் வேறு என்ன பெரிய காரியத்தை எண்ணியிருந்தோம்?

இது மடக்கு என்னும் சொல்லணி.

இயலிடம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

இரும்புவனம் விரும்புவனம் அணி யரங்கர்
பணியரங்கர் இமய நண்ப!
வருங்கொடியின் மருங்கொடியின் மனங்குழைக்கும்
கனங்குழைக்கும் அனங்கன் சாபக்

Koviloor Digital Library

கரும்புருவம் பொரும்புருவம் முத்தநகை
யொத்தனகை காந்தள் பூந்தேன்
மருங்குழலும் கருங்குழலும் முருகுவளை
இருகுவளை மழைக்கண் தாமே. 61

பெரிய உலகங்கள் முழுவதையும் உணவாக விரும்பி அமுது செய்த, வனமாலையை அணிந்த அரங்க நாதரும் ஆதிசேஷனைப் பள்ளிகொள்ளும் இடமாக உடையவரு மாகிய நம் பெருமாளது, இமயமலை போன்ற மலையினிடத் துள்ள தோழனே! யான்க ...ட கனமாகிய காதணியையுடைய பெண்ணுக்கு வளர்கின்ற பூங்கொடி போன்ற இடையானது தான் ஒல்கினால் ஆடவர்களது நெஞ்சத்தைத் தளரச் செய்யும், புருவங்கள் மன்மதனது வில்லாகிய கரும்பினது வடிவத்தோடு போர் செய்யும், (ஒத்து இருக்கும் என்றபடி), பற்கள் முத்துக்களைப் போன்றனவாகும். கைகள் காந்தள் மலர் போலும், கரிய கூந்தல் மலர்களில் மொய்க்கின்ற வண்டுகள் பக்கங்களிற் சுழலப் பெறும், குளிர்ச்சியையுடைய கண்கள் வாசனை மிக்குப் பொருந்திய இரண்டு நீலோற்பல மலரை யொப்பன.

இயலிடங் கூறல் என்பது பாங்கற் கூடத்திலுள்ள ஒரு துறை கலந்து பிரிந்த தலைவன் தன் பாங்கற்கு "என்னாற் காணப்பட்ட வடிவுக்கு இயல் இவை" என்று கூறுதல்.

இதுவும் அது

பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்

மழைபிறை சிலைவேல் வள்ளைஎள் இலவின்
மலர்முல்லை மதிவேலை கழையாழ்
வாரிசம் கெளிறு தத்தைவாய் கலசம்
மணிவட பத்திரம் எறும்பூர்
அழகுநீர்த் தரங்கம் துடிசுழி அரவம்
அரம்பைசெ்ஞண் டிளவரால் ஆமை
அணிதராசு இணைகந் துகந்துகிர் தரளம்
அம்புயம் அரங்கநா டனையார்

Koviloor Digital Library

குழல்நுதல் புருவம் வேசோசனம் காது
நாசிவாய் நகைமுகம் கண்டம்
குல்வுதோள் முன்கை அங்கைமெல் விரல்கள்
கூருகிர் கொங்கைகண் வயிறு
விழைதரும் உரோமம் வரையிடை உந்தி
விரும்பும்அல்.குல்தொடை முழந்தாள்
மிளிர்கணைக் கால்கள் புறவடி பரடு
மென்குதி விரல்நகந் தாளே. 62

இதனுள் கேசாதிபாத பரியந்தம் முப்பத்திரண்டு அவயவங்களும் அவற்றின் உபமானங்களோடு காண்க.

இது பெயர்ப்பயனிலையும் எழுவாயுமாக வந்த முறை நிரல் நிறைப் பொருள் கோள்.

திருவரங்கமாகிய திருநாட்டையொக்கின்ற யான் கண்ட மாதரது கூந்தலும், நெற்றியும், புருவங்களும், கண்களும்; காதுகளும், மூக்கும், வாயும், பற்களும், முகமும், கழுத்தும், வளைந்த தோள்களும், முன்னங்கைகளும் அகங்கைகளும், மெல்லிய விரல்களும், கூரிய நகங்களும் தனங்களும், முலைக் கண்களும், வயிறும், விரும்பப்படுகின்ற மயிரொழுக்கும், வயிற்றின் மடிப்புக்களும், இடுப்பும், நாபியும், விரும்பப் படுகின்ற அல்குலும் தொடைகளும், முழங்கால்களும் ஒளி செய்கின்ற கணைக்கால்களும், புறங்கால்களும், காற்பரடு களும், மெல்லிய குதிகால்களும், விரல்களும், நகங்களும், பாதங்களும், (ஆகிய இவ் அவயவங்கள் முறையே.)

மேகமும், பிறைச் சந்திரனும், விற்களும், வேல்களும், வள்ளை இலைகளும், எள்ளுப்பூக்களும், இலவம் பூக்களும், முல்லைப் பூக்களும், பூர்ண சந்திரனும், சங்கமும், மூங்கில்களும், வீணையும், தாமரைமலர்களும், கெளிறு என்னும் மீன்களும், கிளியின் வாய்களும், குடங்களும், நீலமணியும், ஆலிலையும், எறும்பும் ஊருகின்ற ஒழுங்கும், நீரின் அலைகளும், உடுக்கையும், நீர்ச்சுழியும், பாம்பின்

Koviloor Digital Library

படமும், வாழைமரங்களும், நண்டுகளும், இளைய வரால் மீன்களும், ஆமைகளும், அழகிய இரண்டு தராசு தட்டுகளும், பந்துகளும், பவழங்களும், முத்துக்களும், தாமர மலர்களும் (ஆகிய இவற்றை ஒக்கும்)

கைக்கிளை

வியனிலை மருட்பா

தாளிரண்டும் பாரொன்றும் தார்வாடும் வேர்வாடும்
வாளிரண்டுங் காதிரண்டில் வந்திமைக்கும் கோளிரண்டும்
ஐவகைப் பூதம் அமைத்தருள ரங்கர்
மைவளர் சோலை மலையில்
தெய்வம் அல்லளித் திருவுரு வினளே. 63

இது முதல் மூன்று அடிகளும் வெண்பா அடிகளாய், மற்றைய இரண்டும் ஆசிரிய அடிகளாய், அவற்றுள்ளும் ஈற்றயலடி. முச்சீராய் வந்து துணிதலை நுதலிய ஒருதலைக் காமம் உணர்த்தியதனால் கைக்கிளை மருட்பா.

இரண்டு கால்களும் பூமியிற் பொருந்தும்; பூமாலை வாடும்; வியர்வை அரும்பும், வாள்போலும் இரண்டு கண்களும் இரண்டு காதுகளிலும் சென்று மீண்டு வந்து இமைக்கும், ஆகையால் இராகு கேதுக்கள் என்னும் கிரகங்களையும், நிலம், நீர், தீ, காற்று விசும் பென்னும் பஞ்சபூதங்களையும் படைத்துக் காக்கின்ற அரங்கநாதரது மேகங்கள் தவழ்கின்ற சோலைகளையுடைய மலையி விடத்தேயுள்ளவளாகிய அழகிய வடிவத்தையுடைய இம்மகள் தெய்வமகள் அல்லள், மானுட மகளே.

இது, தெளிதல் என்னும் துறையாம். இது, தலைவன் தலைவியர்களுள் ஒருவர் உள்ளக் கருத்தை ஒருவர் அறியாத ஒருதலைக் காம மாதலால் கைக்கிளை யாயிற்று.

Koviloor Digital Library

ஊசல்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

உருமாறிப் பலபிறப்பும் பிறந்துஞ் செத்தும்
ஊசலா டுவதடியேன் ஒழியும் வண்ணம்,
கருமாயத்து என்நெஞ்சைப் பலகை யாக்கிக்
கருணையெனும் பாசத்தைக் கயிறாப் பூட்டி
மருமாலைத் துளவசைய ஆடிர் ஊசல்
மணிமகரக் குழையசைய ஆடிர் ஊசல்
திருமாது புவிமாதோடு ஆடிர் ஊசல்
திருவரங்க ராசரே ஆடிர் ஊசல். 64

உருவம் மாறிமாறிப் பலவகைப்பட்ட பிறவிகளிலும் பிறந்தும் இறந்தும் ஊஞ்சல்போல அலைவதனை அடியேன் நீங்கும்படி மிக்க வஞ்சனையையுடைய என் மனத்தை ஊசற் பலகையாகக் கொண்டு, நினது அருள் என்கிற பாசத்தை ஊஞ்சற் கயிறாக மாட்டி, வாசனையையுடைய திருத்துழாய் மாலை அசையும்படி ஊசல் ஆடுவீராக. இரத்தினத்தாலாகிய மகர குண்டலங்கள் அசைய ஊசல் ஆடிர். பெரிய பிராட்டியாரோடும் பூமிப்பிராட்டியாரோடும் ஊசல் ஆடிர், திருவரங்கராசரே ஊசல் ஆடிர்.

கலிநிலைத்துறை

ஊசல் வடம்போல் ஊர்சக டம்போல் ஒழியாமே
நாச உடம்போடு ஆவி சுழன்றே நலிவேனோ?
வாசவ னும்போது ஆசன னும்கூர் மழுவோனும்
நேசமு டன்சூழ் கோயில் அரங்கா நெடியானே! 65

இந்திரனும் தாமரை மலரைத் தங்கும் இடமாகவுடைய பிரமனும் கூர்மையான மழு ஆயுதத்தையுடைய உருத்திரனும் பக்தியுடனே சூழ்ந்து வழிபடுகின்ற திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற நெடியானே! அடியேன் ஊஞ்சற் கயிறு போலவும் செல்லுகின்ற வண்டியின் உருளை போலவும் ஓய்வு இல்லாதபடி அழியும் தன்மையையுடைய உடம்புடனே உயிர் அலையப் பெற்றே வருந்தக் கடவேனா?

Koviloor Digital Library

கையுறை-தழை

கட்டளைக் கலித்துறை

நேசத்(து) அழைக்கும் மதயானை
முன்புநின் றோன்அரங்கம்
பேசத் தழைக்கும்என் அன்பனை
யாய்பெருங் கற்பகத்தின்
வாசத் தழைக்கும் நறுந்தழை
காணிது மந்தத்தென்றல்
விசத் தழைக்கும் தழைபோல்
கெடாது விலையில்லையே. 66

அன்பினால் ஆதிமூலமே என்று அழைத்த மதத்தை யுடைய கஜேந்திராழ்வான் முன்னே வந்துநின்று காத்தருளின எம்பெருமானது திருவரங்கத்தைச் சொல்லுந்தோறும் சொல்லுந்தோறும் மகிழ்கின்ற எனது அன்பை ஒத்திருப் பளே! இத்தனை பெரிய கற்பக மரத்தினது வாசனையை யுடைய தழையினும் மணமுள்ள தழையே காண், இது இளந்தென்றற் காற்று வீசுதலால் நழைகின்ற மற்றை மரங்களின் தழையைப் போல வாடிப் போகாது. அதுவேயும் அன்றி, இத்தழைக்கு இவ்வளவென்று ஓர் அறுதி இல்லை ஆதலால் நீ ஏற்றுக் கொள்வாயாக.

கையுறை-முத்தம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

விலையானது இலையென்று நீதந்த முத்தம்
வேய்தந்த முத்தாகில் வெற்பா! வியப்பால்
இலையார் புனற்பள்ளி நாராய ணன்பால்
எந்தாய்! அரங்கா!இ ரங்காய் எனப்போய்த்
தலையால் இரக்கும் பணிப்பாய் சுமக்கும்
தன்தாதை அவர்தாம ரைத்தாள் விளக்கும்
அலையாறு குடும்பு ராணங்கள் பாடும்
ஆடும்பொ டிப்பூசி ஆனந்த மாயே. 67

Noolaham Digital Library

மலைநாடனே! இதற்கு விலையில்லையென்று சொல்லி நீ கொடுத்த முத்தானது மூங்கில் பெற்ற முத்தானால் அது அதிசயிக்கும்படி வடபத்திரத்தில் நிறைந்த பிரளய நீரில் பள்ளி கொண்டு அருளுதலையுடைய ஸ்ரீமந் நாராயண னிடத்தில் போய், எனது தலைவனே! அரங்கா இரங்கியருள வேண்டும் என்று பிரார்த்தித்து, பிரம கபாலத்தைக் கொண்டு பிச்சையெடுக்கும்; அந்நாராயணனது பாயாகிய பாம்பைச் சுமந்து கொண்டிருக்கும்; தன்னுடைய தகப்பனாகிய பிரமன் அந்நாராயணனது திருவடித் தாமரைகளைத் திருமஞ்சனம் செய்ததனால் உண்டான ஸ்ரீபாத தீர்த்தமாகிய அலைகின்ற கங்கை நதியைத் தலை மேல் தரிக்கும்; புராணங்களைப் பாடும்; நர்த்தனம் செய்யும்.

இது முத்தைக் கையுறையாகக் கொண்டு சென்ற தலைமகனைத் தோழி தன் சாதுரியத்தால் அதன் சிறப்பின்மை கூறி மறுத்தது.

தவம்

கட்டளைக் கலித்துறை

ஆனந்த மாயரங் கற்கே
உயிர்கள் அடிமையென்னும்
ஞானந்த னால்லும் பொறிவாசல்
சாத்திநற் றாளைப்பற்றி
ஈனம் தரும்பற்றும் அற்றென்றும்
யானென தென்னும் அபி
மானம் தவிர்ந்திருப் பார்க்கிது
போலில்லை மாதவமே. 68

திருவரங்க நாதனுக்கே எல்லா ஆத்துமாக்களும் அடிமையென்று அறிகின்ற தத்துவ ஞானமாகிய கதவினால் பஞ்சேந்திரியங்களாகிய வாயில்களை அடைத்து (மனத்தை அடக்கி வைத்து) அவனது நல்ல திருவடிகளை, சரணமாக அடைந்து, இழிவைத் தருகின்ற ஆசைகளும் நீங்கப்பெற்று, அகங்கார மமகாரங்கள் நீங்கப்பெற்று, எந்நாளும் பேரானந்தமடைந்து இருப்பவர்களுக்கு இங்ஙனம் இருத்தல் போன்ற பெரியதவம் வேறு இல்லை.

Koviloor Digital Library

தவத்தை விலக்கிப் பகவத் தியானத்தை வற்புறுத்துதல் தவம் என்னும் உறுப்பின் இலக்கணம். அபிமானம் செருக்கு.

இதுவும் அது
எண்சீர் ஆசிரிய விருத்தம்

மாத வங்கள்என் றோது அவங்களின்
மருவு சீவன்என் றொருவன் நீபெரும்
பூதம் அல்லை இந்திரியம் அல்லைஐம்
புலனும் அல்லை நற்புத்தி அல்லைகாண்
சீத ரன்பரந் தாமன் வாமனன்
திருவ ரங்கனுக்கு அடிமை நீஉனக்கு
ஏதும் இல்லை என்றறி அறிந்தபின்
ஈதின் மாதவம் இல்லை எங்குமே. 69

பெரிய தவங்கள் என்று சொல்லப்படுகின்ற வீண் தொழில்களில் பொருந்துகின்ற ஆத்துமா என்கின்ற ஒருத்தனே! நீ பெரிய பஞ்சபூதங்களும் அல்லாய். பஞ்சேந்திரங்களும் அல்லாய், பஞ்ச தன்மாத்திரைகளும் அல்லாய், நல்ல அறிவும் அல்லாய் காண். பின்னை என்னை யென்றால், நீ திருமகளைத் திருமார்பில் தரிப்பவனும், பரமபதத்தையுடையவனும், மாவலியின் செருக்கை அடக்குவதற்கு வாமன அவதாரம் செய்தவனுமாகிய திருவரங்கனுக்கு அடியவன்; உனக்கு யாதொரு சுவதந்திரமும் இல்லை என்று அறி: அங்ஙனம் அறிந்தால் இது போன்ற மாதவம் எங்கும் இல்லை.

தலைவி இரங்கல்
கட்டளைக் கலித்துறை

எங்காந்தள் அங்கைநல் வீர்என்செய்
கேன்இரண் டேந்திழையார்
தங்காந்தன் என்றறிந் தாலும்நில்
லாதுதரைக் கும்நெய்க்கும்

Koviloor Digital Library

அங்காந்த செம்பவ ளத்தெம்
பிரான்அரங் கன்புயங்கள்
செங்காந்த மால்வரை யோஇரும்
போஎன்தன் சிந்தனையே! 70

எமது தோழியராகிய காந்தள் மலர்போலும் அழகிய கைகளையுடைய நல்ல மகளிரே! தரித்த ஆபரணங்களை யுடைய திருமகள் நிலமகள் என்னும் இரண்டு பிராட்டிமார் களிடத்து ஆசைகொண்ட கணவனென்று அறிந்தாலும், என் மனம் விரும்பிப் பின் செல்லாமல் தரித்து நிற்காது. யான் என்ன செய்கேன்? உலகங்களை உண்ணுதற்கும் நெய்யைப் பருகுவதற்கும் திறந்த சிவந்த பவழம் போன்ற திருவாயை யுடைய எமது பெருமானாகிய ரங்கநாதனது திருத்தோள்கள் அழகிய காந்தத்தாலாகிய பெரிய மலைகளோ? எனது மனம் இரும்போ?

இது ஐயத் தற்குறிப்பேற்ற உவமை.

களி

பதிநான்குசீர் ஆசிரிய விருத்தம்

சிந்தை யிற்குடி கொண்டி ருந்து
திருக்க றுத்தடி மைக்கொளும்
திருவ ரங்கர் பொருப்பு உயர்ந்த
திருப்பு யாம்புகழ் களியரேம்
புந்தி மிக்கது வந்து புக்கது
போத மாதர்கள் எழுவர்தம்
பூசை யேமக பூசை என்றது
புதுமை யன்றிது புத்தர்காள்
அந்த ரத்திமை யோர்அ ருந்தும்
மருந்தும் வெள்ளையது அன்றியே
அரிய சாதி கொளாத மானிடர்
அகலி டத்தினில் இல்லையே

Koviloor Digital Library

மந்தி ரத்தில் நிலாத தேவதை
வான கத்தினில் இல்லையே
வடிவி லாதவை அண்ட கோளம்
வளைந்த வைப்பதில் இல்லையே 71

கட்குடியர் அக்கள்ளைச் சிறப்பித்துக் கூறுவதாகச் செய்யுள் செய்வது களியென்னும் உறுப்புக்கு இலக்கணமாம்.

புத்தர்களே! நாங்கள் அன்பால் நினைவாரது உள்ளத்தில் சென்று நீங்காது தங்கியருந்து அவர்களது குற்றங்களைப் போக்கி, ஆட்கொள்ளுகின்ற திருவரங்கநாதரது மலைபோல உயர்ந்த திருத்தோள்களைத் துதிக்கின்ற கட்டிகுடியராவோம்.

மனம் மிக மகிழ்தற்குக் காரணமாகிய களிப்பு மிகுதியால் வந்து நேர்ந்தது. சப்த மாதர்களுடைய பூஜைதானே யாகத்திற் செய்யப்படும் பூஜை என்ற இத்தன்மை புதியது ஒன்றன்று. சுவர்க்கலோகத்திலுள்ள தேவர்கள் பருகுகின்ற அமிருதமும் வெள்ளை தான். அதுவும் அல்லாமல் அருமையான சாதிகளை உடைத்தாகாத மனிதர்கள் பரந்த பூமியில் எங்கும் இல்லையே. மந்திரத்துக்கு வசப்படாத தெய்வம் தேவலோகத் திலும் இல்லையே; உருவம் இல்லாத பொருள்கள் அண்ட கோளத்துக்கு உட்பட்ட இடத்தில் இல்லையே.

புத்த சமயத்தார் கட்குடியை விலக்குதலை முக்கிய தருமமாகக் கொண்டவராதலால் அவர்களை விளித்துக் கூறுகின்றார். கட்குடியர் துர்க்க பூசை செய்தல் இயல்பாதலின் அதனைப் பெருமைப்படுத்திக் கூறினார்.

மாதர்கள் எழுவர்

1. அபிராமி, 2. மாயேசுவரி, 3. கௌமாரி, 4. நாராயணி, 5. வராகி, 6. இந்திராணி, 7. காளி.

குறளடி வஞ்சிப்பா

இல்லறமெனத் துறவறமெனச்
சொல்லறம்பிற துணையன்றெனப்
பவக்கடலுள் துவக்கறுப்பான்

Koviloor Digital Library

காவிரியிடைப் பூவிரிபொழில்
சிலமந்திகள் சினைதாவப்
பலதெங்கின் பழக்குலையுதிர
அடர்கமுகின் மிடறொடிதரத்
தேமாங்கனி சிதறுபுவிழ
முடப்பலவின் குடக்கனியுக
அரம்பைக்கனி வரம்பிற்புக
வயல்மருங்கின் மலர்ப்பொய்கையுள்
துயில் வலம்புரி துண்ணெனவுறத்
தாஅள்தா அமரைத் தவிசுறைதரு
கூஉட்டோதிமம் பேஎட்டுடனெழ
மயிற்சேவல் மனங்களிப்பக்
குயிற்பேடைக் குலமொளிப்ப
மழைமுகிலென முழவதிர்தரு
திருவரங்கப் பெருநகருள்
அரவணைமிசை அறிதுயிலமர்ந்து
அருள்புரி
திருநாரணனைச் சேர்ந்தனம்
சரணார விந்தம் தஞ்சமென் றிரந்தே.

இல்லறமென்றும் துறவறம் என்றும் இருவகையாகச் சொல்லப்படுகின்ற அறமும் மற்றைப் பொருள் இன்பங்களும் துணையல்ல வென்று எண்ணி, பிறவிக் கடலினுள்ளே கட்டுப்பட்டிருத்தலை நீக்கும் பொருட்டு உபய காவேரி மத்தியில் மலர்கள் அலர்கின்ற சோலைகளில் சில பெண்குரங்குகள் மரக்கிளைகளில் தாவிப்பாய, அதனால் பல தென்னை மரங்களில் முதிர்ந்த காய்களின் குலைகள் உதிரவும், நெருங்கின கமுகு மரங்களினது கண்டம் ஒடியவும், தேன் மாம்பழங்கள் சிதறி விழவும், வளைந்த பலா மரத்தினது குடம் போன்ற பழங்கள் சிந்தவும்; வாழைப் பழங்கள் வயல்

Koviloor Digital Library

வரப்புகளில் விழவும், கழனிகளின் அருகிலுள்ள பூக்கள் நிறைந்த தடாகத்தில் தூங்குகின்ற வலம்புரிச் சங்கங்கள் திடுக்கிட்டு அலறவும்-

நாளத்தையுடைய தாமரை மலராகிய இருப்பிடத்தில் தங்குகின்ற உச்சியையுடைய அன்னப் பறவைகள் தம் தமது பேடைகளுடன் எழுந்திருப்பவும், பெண் மயில்களும் ஆண் மயில்களும் மனமகிழந்து கூத்தாடவும், ஆண் குயில்கள் பெண் குயில்களின் கூட்டம் மனம் வருந்தி மறையவும், மழைபெய்கின்ற மேகம் போல வாத்தியங்கள் ஒலிக்கின்ற திருவரங்கம் என்கிற பெரிய திரு நகரத்தில் சேஷ சயனத்தில் மேல் யோக நித்திரை செய்தருளுகின்ற ஸ்ரீமந் நாராயணனை அவனது திருவடித் தாமரைகளே அடைக்கலமென்று சொல்லிப் பிரார்த்தித்து அடைந்தோம்.

இது மயக்க அணி.

எழுசீர் ஆசிரிய விருத்தம்

இரவியை இரவில் மதியினை மதியுள்
இறையினை இறையும்எண் ணரிய
கரவனைக் கரவின் முனிவனை முனிவர்
கருத்தனை கருத்தனைத் துடைத்தாள்
பரமனைப் பரம பதத்தனைத் பதத்துள்
பாரனைப் பாரநத்து ஊதும்
அரவனை அரவின் அரங்கனை அரங்கத்
தடிகளை அடிகள் சேவியுமே. 73

சூரியன் ஆனவனை, இராத்திரியில் விளங்குகின்ற சந்திரன் ஆனவனை, அறிவில் உறைகின்ற தலைவனை, சிறிதும் நினைத்தற்கும் அரிய மாயையை யுடையவனை, கபடமில்லாத முனிவனாய் இருப்பவனை, முனிவர்களது உள்ளத்தில் உறைபவனை, தன்னை அடைந்தவர்களது பிறப்பைப் போக்கியருளுகின்ற உயர்ந்தவனை, பரம

Koviloor Digital Library

பதத்தையுடையவனை, திருவடியினின்றும் பூமியை உண்டாக்கியவனை, பெரிய பாஞ்ச சன்னியத்தை ஊதுகின்ற ஓசையை உடையவனை, பாம்பை இடமாக உடையவனை, திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கின்ற சுவாமியைத் திருவடி தொழுங்கள்.

தலைவி இரங்கல்

கட்டளைக் கலித்துறை

சேவிக்க வாழ்விக்கும் எங்கோன்
அரங்கன் திருக்கோயில் சூழ்
காவிற் கலந்தாசை தந்தேகி
னார்நெஞ்சு கல்நெஞ்சமோ
வாவிப் புறத்தன்ன மே இன்னம்
ஏதோ வரக்கண்டிலேன்
பாவிக்கு அநேகம் தனிக்காலம்
இந்தப் பனிக்காலமே. 74

தடாகங்களினிடத்தே சஞ்சரிக்கின்ற அன்னப் பறவையே! தன்னைக் கண்டு வணங்க, அவர்களை இம்மை மறுமை வீடுகளிற் சிறந்து வாழச் செய்கின்ற எமது தலைவனாகிய ரங்கநாதனது அழகிய கோயிலைச் சூழ்ந்த சோலையில் கூடியிருந்து ஆசை காட்டிச் சென்றவரது மனம் கல்லினாலாகிய நெஞ்சோ? இன்னமும் (பனிக்காலம் வந்த பின்னும்) என்ன காரணத்தாலோ மீண்டு வரக் கண்டேன் இல்லை. தீவினையேனாகிய எனக்கு இந்தப் பனிக்காலம் தனியே யிருக்கின்ற நெடுங்காலமாக ஆயிற்று.

இது, தலைமகன் புணர்ந்து தணந்து வர நீட்டித்த நிலைமைக்கண் தலைமகள் நெய்தல் நிலத்து அன்னத்தோடு கூறி இரங்கியது.

குறம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

காலம்உ ணர்ந்த குறத்திநான்
கருதினை ஒன்றது சொல்லுவேன்
பாலகன் உச்சியில் எண்ணெய்வார்
பழகிய தோர்கலை கொண்டுவா
கோலம லர்க்கையின் மங்கைநின்
கொங்கை முகக்குறி நன்றுகாண்!
ஞாலம்உ வந்திட நாளையே
நண்ணுவை நம்பெரு மானையே. 75

தலைவனைக் கண்டு காமுற்று மயங்கி நிற்குந் நிலைமைக்கண் தன்னிடம் வந்த குறிகண்டறிந்து கூற வல்ல குறத்தியாகிய கட்டுவிச்சியைத் தலைவி குறி வினவக்குறத்தி குறி தேர்ந்து நல்வரவு கூறுவதாகச் செய்யுள் செய்வது குறம் என்னும் உறுப்பின் இலக்கணமாம்.

நான் முக்காலத்து விருத்தாந்தங்களையும் அறிந்து சொல்ல வல்ல குறவர்மகள். நீ மனத்தில் யாதொன்று நினைத் தாயோ அதனைச் சொல்லுவேன். என் சிறுகுழந்தையது தலையில் எண்ணெய் வாரு. பழையதொரு சீலையைக் கொண்டுவந்து கொடு. அழகிய மலர் போலும் கைகளை யுடைய பெண்ணே! உன்னுடைய முலைக் கண்களின் குறியானது நன்றாயிருக்கிறது. ஆகையால் உலகம் முழுவதும் மகிழும்படி நாளைக்கே நம் பெருமாளைச் சேர்வாய்.

மேக விடு தூது

கட்டளைக் கலித்துறை

பெருமாலை யார்க்குரைப் பேன்உமக்
கேவிண்டு பேசின்அல்லால்
கருமாலை யாயெழுங் கார்க்குலங்
காள்தொண்டர் காற்பொடிதன்

Koviloor Digital Library

திருமாலை கொண்ட திருமால்
அரங்கர்தம் தெய்வத்துழாய்
மருமாலை வாங்கிவம் மின்அந்தி
மாலை வருமுன்னமே. 76

கரிய தொரு வரிசையாய் ஆகாயத்தே எழுகின்ற மேகங்களது கூட்டங்களே! எனது பெரிய மயக்கத்தை உங்களுக்கே விவரித்துச் சொன்னால் அல்லாமல் வேறே யாவர்க்கு எடுத்துச் சொல்லுவேன்; நீங்கள் போய்த் தொண்டர் அடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த திருமாலை யென்னும் திவ்வியப் பிரபந்தமாகிய மாலையைக் கொண்டருளிய திருமாலாகிய ர்ங்கநாதரது திவ்வியமான நறுமணம் பொருந்திய திருத்துழாய் மாலையை அந்திப் பொழுது வருவதற்கு முன்னே வாங்கிக் கொண்டு வாருங்கள்.

தலைவனைப் பிரிந்து தனித்து வருந்தும் தலைவி, இங்ஙனம் சொல்லித் தலைவனிடத்து மேகங்களைத் தூது செல்லுமாறு வேண்டுகின்றாள்.

நேரிசை வெண்பா

முன்னம் பிறந்த பிறப்போ முடிவில்லை
இன்னம் பிறப்பிக்க எண்ணாதே – தென்னரங்கம்
மேவிக் கிடந்தானே! வீற்றிருக்கும் நின்பதத்தென்
ஆவிக்கு இடந்தான் அருள். 77

அழகிய திருவரங்கத்தில் திருவுள்ளம் உவந்து திருப்பள்ளி கொண்டருளுபவனே! யான் முன்னே பிறந்த பிறவிகளுக்கோ என்றால், இவ்வளவென்று ஓர் அளவு இல்லை. ஆகையால் இனிமேலும் பிறவியெடுக்கும்படி திருவுள்ளத்திற் கொள்ளாமல் ஒப்பில்லாத சிறப்போடு இருக்கின்ற உனது பரமபதத்தில் எனது உயிருக்கு இடத்தைத் தந்தருள்வாய்.

தலைவி இரங்கல் – மடக்கு

பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

அரும்புன் னாகத் தடங்காவே
அவாவென் ஆகத்து அடங்காவே
அம்போ ருகக்கண் பொருந்தேனே
அழுநீர் உகக்கண் பொருந்தேனே
பரம்விங் கடலூர் நாவாயே
பாவிக் கடல்ஊர் நாவாயே
பார்மீ துயர மறியலையே
படுமென் துயரம் அறியலையே
கருங்கண் கயலே மாகுறவே
கரைவேற் கயலே மாகுறவே
கண்டற் போதுகு வாலுகமே
கங்குற் போதுகு வால்உகமே
குரும்பை தழைக்கும் கரும்பனையே
குயில்வந் தழைக்கும் கரும்பனையே
குருகீர் நந்தம ரங்கரையே
கொணரீர் நந்தம் அரங்கரையே. 78

இது, பிரிந்து உறைகின்ற நெய்தல் நிலத்துத் தலைமகள் ஆங்குள்ள பொருள்களை நோக்கித் தான்படும் வருத்தங் கூறி இரங்கியது.

அரிய பெரிய புன்னை மரச் சோலையே! ஆசை எனது மனத்தில் அடங்குகிறதில்லை. தாமரை மலரினிடத்துப் பொருந்திய வண்டே! அழுகின்ற கண்ணீர் அறாது ஒழுகக் கண் உறங்குகின்றேன் இல்லை. பரவிய கடலில் ஓடுகின்ற மரக்கலமே! பாவியேனுக்கு அலர் தூற்றுகின்ற ஊரார து நாவும் வாயும் பகைமையாகும். கரையின் மேல் உயர்ந்து மடங்கி விழுகின்ற அலையே! யான் படுகின்ற துன்பத்தைக் கண்டறிகின்றாய் அல்லை!

Koviloor Digital Library

கண்களையுடைய கயல்மீனே! பெரிய சுறா மீனே! இங்ஙனம் வருந்துகின்ற எனக்கு, குற்றமுள்ள உறவினரும் அயலாரே யாவர். தாழைமலர்கள் சிந்துகின்ற வெண்மணற் குன்றே! இராப்பொழுது திரண்ட அநேகம் யுகங்களே யாகும். குரும்பைகள் தழைக்கின்ற கரிய பனைமரமே! குயிலானது வந்து கருப்புவில்லையுடைய மன்மதனை அழையா நின்றது. நாரைகளே! சங்குகள் பொருந்திய அழகிய கரையே! நமது அரங்கநாதரைக் கொண்டுவாருங்கள்.

நேரிசை ஆசிரியப்பா

79. கரைபொருது ஒழுகும் காவிரி யாறே
ஆற்றிடைக் கிடப்பதோர் ஐந்தலை அரவே
அரவம் சுமப்பதோர் அஞ்சன மலையே
அம்மலை பூத்ததோர் அரவிந்த வனமே
அரவிந்த மலர்தொறும் அதிசயம் உளவே!
கடல்விளிம்பு உடுத்த கண்ணகல் ஞாலம்
உடன்முழுது அளந்தது ஒருதா மரையே
வகிரிளம்பிறையான் வார்சடை தேங்கப்
பகிரதி கான்றதோர் பங்கே ருகமே
யாவையும் யாரையும் படைக்க நான்முகக்
கோவை ஈன்றதோர் கோக னகமே
திருமகட்கு இனிய திருமனை யாகிப்
பருமணி யிமைப்பதோர் பதும மலரே
சடைத்தலை தாழ்த்துச் சங்கரன் இரப்ப
முடைத்தலை தவிர்த்ததோர் முளரிமா மலரே
ஆங்குமண் டோதரி அணிந்தமங் கலநாண்
வாங்கவில் வாங்கிய வனசமும் ஒன்றே
விரிந்தபுகழ் இலங்கை வேந்தற்குத் தென்திசை
புரிந்தருள் மலர்ந்ததோர் புண்ட ரீகமே
மதிணி ஞாலமும் வானமும் உட்பட

Koviloor Digital Library

அண்டமுண்டு உமிழ்ந்ததோர் அம்போ ருகமே
கடைசிவந்து அகன்று கருமணி விளங்கி
இடைசில அரிபரந்து இனியவாய் நெடியவாய்
இன்பந் தழீஇய இருபெருங் கமலம்
துன்பந் தழீஇய தொண்ட னேனையும்

உவப்புடன் ஒருகால் நோக்கிப்
பவக்கடல் கடக்கும் பரிசுபண் ணினவே.

அரவிந்தம், தாமரை, பங்கேருகம், கோகனகம், பதுமமலர், முளரி, வனசம், புண்டரீகம், அம்போருகம், கமலம் என்ற தாமரையின் பரியாய மொழிகளாகப் பத்துப் பதங்கள் வந்திருப்பது பொருட்பின் வரு நிலையணி.

இருகரைகளையும் மோதிப் பெருகுகின்ற காவேரிநதி ஒன்று உண்டு. அவ் ஆற்றினிடையே பொருந்தியிருப்பதாகிய ஐந்து தலைகளையுடைய தொரு நாகம் உண்டு. அத்திருவனந்தாழ்வான் தாங்குவதாகிய மைம்மலையொன்று (நம்பெருமாள்) உண்டு. அந்த நீல மலையினிடத்து மலர்ந்ததாகிய ஒரு தாமரை மலர்க்காடு (திரு அவயவங்கள்) உண்டு. அத் தாமரை மலர்கள் தோறும் ஒவ்வொரு வியப்பு உண்டு.

அஃது என்னவெனில் ஒரு தாமரை மலர் (இடத்திருவடி) கடலாற் சுற்றிலும் சூழப்பட்ட இடமகன்ற பூமி முழுவதையும் ஒரு சேர அளந்தது. ஒரு தாமரை மலர் (வலத்திருவடி) துண்டமாகிய இளம்பிறைச் சந்திரனை முடியிலுடைய உருத்திரனது நீண்ட சடையில் நிறைந்து தங்கும்படி கங்கை நதியை வெளியுமிழ்ந்தது.

ஒரு தாமரை மலர் திருநாபி எல்லா அஃறிணைப் பொருள்களையும் எல்லா உயர்திணைப் பொருள்களையும் படைக்கும்படி பிரமதேவனை உண்டாக்கிற்று. ஒரு தாமரைப்பூ திருமார்பு பெரிய பிராட்டிக்கு வசித்தற்கு இனிதான அழகிய இடமாய்ப் பருத்த கௌஸ்துப ரத்தினம் விளங்கப் பெற்றது.

Koviloor Digital Library

ஓர் அழகிய தாமரை மலர் (வலத்திருக்கை) சிவபிரான் சடையினையுடைய தலையினால் வணங்கி யாசிக்க அவன் கையில் ஒட்டிய முடைநாற்றத்தையுடைய கபாலத்தை ஒழித்தது. ஒரு தாமரைமலர் (இடத்திருக்கை) அவ்விடத்தில் (இலங்கையில்) மண்டோதரி யென்பவள் கழுத்தில் தரித்திருந்த மாங்கல்யத்தை இழக்கும்படி கோதண்டத்தை வளைத்தது.

ஒரு தாமரை மலர் (திருமுக மண்டலம்) பரவிய கீர்த்தியையுடைய இலங்கைக்கு அரசனாகிய விபீஷண ஆழ்வானுக்காகத் தெற்கு திக்கை நோக்கி எப்பொழுதும் அருளோடு மலர்ந்திருந்தது. ஒரு தாமரை மலர் (திருப்பவளம்) மண்ணுலகமாகிய பூமியும் தேவலோகமும் அடங்கும்படி அண்ட முழுவதையும் பிரளய காலத்தில் உட்கொண்டு, மீண்டும் பிரளயம் நீங்கியவுடன் வெளியே உமிழ்ந்தது.

நுனி சிவந்தனவாகி விசாலமான இடையே கரிய கண்மணி விளங்கப் பெற்று, இடையிடையே சில ரேகைகள் பரவப் பெற்று இனியனவாகியும் நீண்டனவாகியும், இன்பம் நிறைந்த இரண்டு பெரிய தாமரை மலர்கள் (திருக்கண்கள்), துன்பம் நிறைந்த அடியவனாகிய என்னையும் மகிழ்ச்சியுடனே ஒருதரம் கடாட்சித்து, கடத்தற்கரிய பிறவிக் கடலைக் கடக்கும்படி பண்ணின.

தலைவி இரங்கல்

கலிநிலைத் துறை

பண்கொண்ட வேய்ஊது செவ்வாய்
அரங்கேசர் பைம்பொன்னி நாட்டு
எண்கொண்ட பேராசை தந்தார்
மறந்தார்கொல் இசைவண்டுகாள்
விண்கொண்ட மலைமீது விண்மாரி
பொழிகின்ற விசைபோலஎன்
கண்கொண்ட மலைமீது கண்மாரி
பொழிகின்ற கார்காலமே. 80

Koviloor Digital Library

இசைபாடுகின்ற வண்டுகளே! இசைகளைக் கொண்ட வேய்ங்குழலை, (கிருஷ்ணாவதாரத்தில்) ஊதிய சிவந்த வாயினையுடைய ரங்கநாதரது குளிர்ந்த காவிரி சூழ்ந்த நாட்டில் என்னை முழுவதும் கொண்ட மிக்க ஆசையைத் தந்து சென்றவர், ஆகாயத்தை அளாவிய மலையின் மேல் வானம் மழையைப் பெய்கின்ற வேகம் போல எனது கண் பொருந்திய முலைகளின் மேலே கண்ணீர் மழையைச் சொரிகின்ற மழைக்காலத்தை மறந்தாரோ? மறவாராயின் முன்னமே வந்திருப்பார் என்றபடி.

கைக்கிளை - ஊர் வினாதல்

கட்டளைக் கலித்துறை

காரக மோநம் வடதிரு
வேங்கடக் கார்வரையோ
நீரக மோநெடு வானக
மோதுயில் நீடுபணிப்
பேரக மோதென் திருவரங்
கப்பெருங் கோயிலென்னும்
ஊரக மோஇடம் தண்காவில்
நின்ற ஒருவருக்கே? 81

குளிர்ச்சி பொருந்திய சோலையில் நின்ற யான் கண்ட தலைமகளுக்கு வசித்தற்கிடமாவது மேக மண்டலமோ? நமது வடக்கின் கண் உள்ள திருவேங்கடம் என்னும் பெரிய மலையோ? நீரின் இடமோ? பெரிய தேவலோகமோ? தூக்கம் மிக்க பாம்புகளின் பெரிய இடமாகிய நாகலோகமோ? தென் திருவரங்கம் பெரிய கோயில் என்கிற ஊரினிடமோ?

வஞ்சித் துறை

ஒருநயம் பேசுவன்
திருவரங் கேசர்தாள்
மருவுமின் நாசமாம்
கருமவன் பாசமே. 82

Koviloor Digital Library

உலகத்திரே! ஒரு நல்லவார்த்தை சொல்வேன்; கேளுங்கள். அது என்னவென்றால் திருவரங்கநாதரது திருவடிகளைச் சேருங்கள் என்பதே. அதனால் உண்டாகும் பயன் என்னை எனில், வினைகளாகிய வலிய பந்தங்கள் அழிந்து போய்விடும்; மோட்ச முண்டாகும்.

தலைவி இரங்கல்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

பாசமாம் அடியார்பால் நேசமாம் அடிகளும்
பைம்பொனார் ஆடையும் செம்பொன்மா மேனியும்
ஆசையாம் மலருளாள் வாசமார் அகலமும்
அஞ்சலென்று அருள்செயும் கஞ்சமும் கருணையின்
தேசுலா வதனமும் மாசிலா முறுவலும்
சீரிதாய் எழுதுகத் தூரிநா மமுமெனக்கு
ஈசனார் திருவரங்கேசனார் திகிரியும்
இலகுவெண் சங்குமே உலகம்எங் கெங்குமே. 83

எல்லா உலகங்களிலும் எல்லா இடமும் எனக்குத் தலைவராகிய திருவரங்க நாதரது தம்பக்கல் அன்புள்ள அடியார்களிடத்தில் கருணையுள்ள திருவடிகளும், பசும்பொன் மயமான பீதாம்பரமும், செவ்விதாய் அழகிய பெரிய கரிய திருமேனியும், மிக்க காதலையுடைய தாமரைப் பூவில் உறைகின்ற திருமகளுக்குத் தங்கும் இடமாகப் பொருந்திய திருமார்பும், தன்னை அடைந்தாரை அஞ்சற்க என்று சொல்லிப் பாதுகாக்கின்ற தாமரை மலர் போன்ற அபய அஸ்தமும், அருளினது ஒளி விளங்குகின்ற திருமுக மண்டலமும், மறுவில்லாத புன்சிரிப்பும், சிறப்பினை உடைத்தாம்படி கஸ்தூரியால் எழுதப்பட்ட திருநாமமும் (திலகமும்) சக்கரமும், விளங்குகின்ற வெண்மையாகிய சங்கமுமேயாகும்.

Koviloor Digital Library

இடமணித்து என்றல்

வஞ்சி விருத்தம்

எங்கணும்நி றைந்துறையும் எம்பிரான்
கொங்கணுகி வண்டுமுரல் கோயில்சூழ்
உங்கள்வரை எங்கள்வரை ஒன்றியே
மங்கைஉன கொங்கைகளை மானுமே. 84

எல்லா விடத்திலும் அந்தர்யாமியாய்த் தங்கி வசிக்கின்ற நம்பெருமாளது வண்டுகள் தேனுக்காக நெருங்கி ஆரவாரிக்கின்ற திருவரங்கத்தைச் சூழ்ந்த உங்களது மலையும் எங்களது மலையும் நெருங்கி, பெண்ணே! உனது தனங்களை ஒத்திருக்கும்.

நாரையை நோக்கித் தலைவி இரங்கிக் கூறல்

கலிநிலைத் துறை

மானார் கேசன் மேலார்
மாலாய் வாழ்கோயில்
தேனார் காவிற் பூஆ
ராயும் தேனேபோல்
நானா போகத்து இன்பம்
கண்டார் நான்வாடப்
போனார் வாராது ஏதோ
ஓதாய் போதாவே! 85

பெருநாரையே! கங்கை மகள் பொருந்திய சடைமுடியினையுடைய உருத்திரன் முதலிய தேவர்கள் பேரன்பு கொண்டு வந்து தங்குகின்ற திருவரங்கத்தில் தேன் நிறைந்த சோலையில் மலர்கள் தோறும் ஆராய்ந்து இனிதாய்த் தேன் உண்ணுகின்ற வண்டுகளைப் போலப் பலவகைப்பட்ட போக சுகங்களை அனுபவித்தவரும் நான் வாட்டம் அடையும்படி பிரிந்து போனவருமாகிய தலைவர், மீண்டும் வாராமை யாது காரணத்தாலோ? சொல்லு.

Koviloor Digital Library

மதங்கு

அறுசீர் ஆசிரிய விருத்தம்

போதள னக்குஎளி தானார்
போதவ னுக்குஅரி தானார்
நாதர்அ ரங்கர்தி ருத்தாள்
நாடிஅ ரங்கில்ந டக்கின்
ஓதும்ம தங்கிந டித்தால்
உள்ளமது அங்கிஅ ரக்காம்
வேதம்அ றைந்திட வல்லீர்
விரையம றைந்துவி டீரே. 86

இரண்டு கைகளிலும் வாளை எடுத்துச் சுழற்றிக் கொண்டு தானும் சுழன்று ஆடுவாள் ஓர் இளமாதின் அழகு நிகுதியை ஒருவன் பாராட்டிக் கூறுவதாகச் செய்யுள் செய்வது மதங்கு. மதங்கு-ஆடல் பாடல் வல்ல பதினாறு வயதுப் பெண்.

வேதம் ஓத வல்லவர்காள்! அடியனாகிய எனக்கு மிகவும் எளிமை யானவரும் தாமரை மலரில் தோன்றிய பிரமனுக்கு அருமையானவருமாகிய ரங்கநாதரது அடிகளைச் சேவிக்க விரும்பி, அங்குள்ள சபையில் நீங்கள் செல்லுமிடத்து, அங்குச் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற மதங்கியானவள் நடனம் செய்தால், அதனைக் காண்பவரது மனமானது நெருப்பிலிட்ட அரக்குப் போலக் கரைந்து உருகிப்போம். ஆகையால் விரைவாக மறைந்து செல்லுங்கள்.

பாண்

பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்

விடாது பூம டந்தை மார்வி
ரும்ப ஆயர் மாதர்தோள்
வியந்து முன்ந யந்த வர்க்கு
விற்கும் எங்கள் கொங்கைதான்

Koviloor Digital Library

அடாத தன்று பாண இன்னம்
அங்ஙன் அன்றி இங்ஙனம்
அரங்கர் அன்பு கூர இன்ப
மாக அல்ல அல்லவே
எடாது இருக்கின் வாய்தி றக்கும்
எங்கள் ஐயன் உச்சிதோய்
எண்ணெய் பட்ட மெய்யில் இட்ட
முத்தும் உத்த ரீயமும்
படாமு கந்தி றந்து அசைந்து
மழலை வாயின் மணமறாப்
பசுந ரம்பு புடைப ரந்து
பால்சு ரந்த முலையுமே. 87

பரத்தையரைப் புணர்தற் பொருட்டுத் தலைமகளைப் பிரிந்து சென்ற தலைமகனால் தலைமகளது கருத்தை அறிந்து, அவளைச் சமாதானப் படுத்தி, அவளிடம் தான் வருவதற்குப் பேசி வருமாறு அனுப்பப்பட்ட பாணனுக்குத் தலைவி வெகுண்டு கூறியது இது. 'பாணனொடு வெகுளுதல்' என்னும் துறை.

பாணனே; திருமகளும் நிலமகளும் சிறிதும் விட்டுப் பிரியாமல் விரும்பிக் கூடியிருக்கவும், அவர்களை விட்டு இடைப் பெண்ணான நப்பின்னையினது தோள்களை முன்னே கிருஷ்ணாவதாரத்தில் அதிசயித்து விரும்பிக் கூடிய தலைவர்க்கு விலைக்கு விற்கின்ற எங்களது தனம் தகாத தன்று. இன்னமும் அவ்வாறல்லாமல் இவ்வாறு எடுத்துப் பால் கொடாமல் இருந்ததால் வாய்திறத்து அழுகின்ற எங்கள் குழந்தையினது உச்சியிற் பொருந்திய எண்ணெய் படப்பெற்ற எங்கள் உடம்பில் இடப்பட்ட முத்துமாலையும் மேலாடையும் அக் குழந்தையால் மேலாடை சிறிது வாங்கப்பட்டு அசைந்து வாயினது வாசனை நீங்கப் பெறாமல் பச்சை நரம்புகள் புறத்தே பரவப்பெற்றுப் பாலைச் சுரக்கின்ற தனங்களும் அரங்கர் அன்பு மிகும்படி இன்பமாகத் தக்கனவே யாகும்.

பாணன் - பாடுபவன்.

Koviloor Digital Library

தலைமகள் இளமைக்குச் செவிலி இரங்கல்

கட்டளைக் கலித்துறை

முலைகொண்ட பால்மணம் வாய் மாறிற்
றில்லை அம் மொய் குழலோ
அலைகொண்டது இன்னம் என் கையணை
யே அலை ஆழிவற்றச்
சிலை கொண்ட செங்கை அரங்கேசர்
தாள் கொண்ட தேசமெல்லாம்
விலை கொண்ட வாள்விழி யாள் சென்ற
வாறுஎங்கள் வெஞ்சுரமே? 88

தலைவி தலைவனுடன் சென்றனளாக, அதனை அறிந்த செவிலி, "பேதைப் பருவத்தாளான இவட்குத் தலைவனுடன் போக்கிற்கு இசையும் முதுக்குறைவு வந்தவாறு என்னோ!" என்று இரங்கிக் கூறியது இது. முதுக்குறைவு - பேரறிவு; பெண் பருவம் அடைதல்.

இச்சிறு மகளுக்கு இன்னம் தாய் முலையிற் கொண்ட பாலினது வாசனை வாயினின்றும் நீங்கிற்றில்லை. அழகிய நெருங்கிய கூந்தலோ அலைந்து கொண்டேயிருக்கிறது (மயிர்முடி கூடிற்றில்லை). என் கையே படுக்குமிட மாயிருக்கின்றது. இங்ஙன மிருக்கவும் அலைகளையுடைய கடல் வற்றிப் போம்படி கோதண்டத்தை எடுத்த சிவந்த திருக்கையையுடைய ரங்கநாதரது திருவடியால் அளந்து கொள்ளப்பட்ட உலக முழுவதையும் தனக்கு விலையாகக் கொண்ட வாள் போன்ற கூரிய கண்களையுடைய இவள் கொடியபாலை வழியில் தலைவன் இருக்குமிடத்தை நோக்கி அவனுடன் போன வகை எவ்வாறோ?

Koviloor Digital Library

தலைமகன் தலைமகளது இயல் கூறல்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

வெஞ்ச மங்கருதும் கஞ்ச னும்எருதும்
வேழமும் பரியும் வீழமுன் பொருதார்
தஞ்சம் என்றவருக்கு அஞ்சல் என்றருளும்
தாயில் அன்புடையார் கோயில் இன்புடையார்
மஞ்சு வண்டினமும் துஞ்சு தண்டலை வாய்
வல்லி யொன்றதிலே எல்லியும் திகழும்
கஞ்சம் உண்டதிலே நஞ்சம் உண்டு அதிலே
கள்ளம் உண்டது என் உள்ளம் உண்டதுவே. 89

கொடிய போரை விரும்புகின்ற கம்சனும் அவனால் கொல்லும்படி ஏவப்பட்ட எருதின் உருவங்கொண்டு வந்த அரிஷ்டாசுரனும், குவலயா பீடமென்னும் பட்டத்து யானையும் குதிரை வடிவாய்வந்த கேசி என்னும் அசுரனும் இறந்து விழும்படி முன்னே கிருஷ்ணாவதாரத்தில் குழந்தைப் பருவத்தில் போர் செய்தவரும், அடைக்கலம் என்று கூறிவந்து சரணடைந்தவர்களுக்கு அஞ்சற்க என்று சொல்லிக் காக்கின்ற உயிர்களிடத்து தாயினும் அன்பினையுடைய வருமாகிய நம்பெருமாளது பெரிய கோயிலின் புறத்தில் பொருந்திய மேகக் கூட்டங்களும் வண்டுக் கூட்டங்களும் தங்குகின்ற சோலையினிடத்தில் கொம்பு ஒன்று (மகள் ஒருத்தி) உண்டு. அதனிடத்திலே இராக்காலத்தும் குவியாமல் மலர்ந்து வியங்குகின்ற தாமரை மலர் (முகம்) உண்டு; அதிலே விஷம் (கண்கள்) உண்டு; அதிலே கள்ளத்தனம் உண்டு, அது என் மனத்தைக் கவர்ந்தது.

இது தலைமகன் பாங்கனிடம் கூறியது.

Koviloor Digital Library

தலைவி இரங்கல்

எண்சீர் ஆசிரிய விருத்தாம்

உண்டுமிழ் வாசமுடன் தண்டலை மாருதம் வந்து
உலவிய சாளரமும் குலவிய வாள்நிலவும்
விண்டலர் பூவணையும் மென்பனி நீர்புழுகும்
வேனிலி லும்முதிரா வேனிலு மாகியவால்
அண்டர் தொ ழும்பெருமாள் அம்புய மின்பெருமாள்
அருமறை யின்பெருமாள் அழகிய நம்பெருமாள்
புண்டரி கங்கமழும் தண்டுறை ஓதிமமே
புன்னைகள் சிந்தலரே இன்னமும் வந்திலரே. 90

தாமரை மலர் மணம் நாறுகின்ற குளிர்ந்த தடாகத்தி னிடத்தேயுள்ள அன்னமே! புன்னை மரங்கள் சொரிகின்ற பூவே! உட்கொண்டு வெளி வீசுகின்ற வாசனையோடு பூஞ் சேலையின்கண் உள்ள இளங்காற்று வந்து வீசுகின்ற பல கணிகளும் விளங்குகின்ற நிலாவின் ஒளியும் விரிந்து மலர்கின்ற புஷ்ப சயனமும் குளிர்ந்த பனி நீரும் கஸ்தூரிப் புழுகும் இருவகை வேனிற் காலத்துள்ளும் இவற்றையுடைய இள வேனிற் காலமும் ஆயின. அங்ஙனமாகவும் தேவர்கள் வணங்குகின்ற சுவாமியும் தாமரை மலரிலுள்ள மின்னற் கொடி போன்ற திருமகளுக்குத் தலைவரும் அறிதற்கரிய வேதங்களாற் புகழப்படுகின்ற இனிய பெருமையை யுடையவருமாகிய நமது அழகிய மணவாளப் பெருமாள் வந்தார் இல்லையே.

தலைவனைப் பிரிந்த தலைவி தென்றற்கு வருந்தி இரங்கல்

வேற்றொலி வெண்டுறை

இன்னிசை வேயினர் மன்னிய கோயிலை எய்தார் போல்
பொன்னினை வால்அவர் போனஇடத்தினில் போகாதோ
மின்னிய முகில்துளி என்றென் மேலெலாம்
வன்னியின் பொறிகளை வழங்கும் வாடையே? 91

Koviloor Digital Library

மின்னுகின்ற மேகங்களின் மழை நீர்த்துளி யென்று பெயர் வைத்து என் உடம்பு முழுவதும் நெருப்புப் பொறிகளை வீசுகின்ற வாடைக் காற்றானது, இனிய இசையினையுடைய வேய்ங்குழலையுடைய நம் பெருமாள் எழுந்தருளியிருக்கின்ற திருவரங்கத்தை அடையாதவர் போலப் பொருள் தேடும் நினைவினால் அத்தலைவர் போன இடத்தினில் போகின்ற தில்லையோ?

கால மயக்கு

அறுசீர் ஆசிரிய விருத்தம்

வாடை யாய்இரு பனியுமாய்
வேனிலாய் வந்தது கார்என்றே
பேடை மாமயில் சாயலாய்
அன்பர்மேல் பிழைகருதிடல் செம்பொன்
ஆடை நாயகன் திருமகள்
நாயகன் அரங்கநா யகன்ஏறும்
ஒடை மாதுஇது மதமிது
பிளிறிய ஒலியிது மழையன்றே. 92

அழகிய மயிற் பேடு போன்ற சாயலையுடையவளே! கூதிர்காலம் கழிந்து, முன்பனி பின்பனி யென்னும் இரண்டு பனிக்காலங்களும் கழிந்து, இளவேனில் முதுவேனில் என்னும் இரண்டு வேனிற் காலங்களும் கழிந்து, மழைக் காலமும் வந்தது என்று எண்ணியே அன்பினையுடைய தலைவர்மீது குற்றம் நினைக்காதே; இது செம்பொன் மயமான பீதாம்பரத்தையுடைய தலைவனும் திருமகள் நாயகனுமாகிய அரங்க நாயகன் ஏறி நடத்துகின்ற முகபடாத்தையுடைய யானை இது, அவ்யானையின் மதநீர்ப் பெருக்கு இது. அவ்யானை வீறிடுகின்ற ஓசை. ஆகையால் இது கார்கால மன்று.

Koviloor Digital Library

தழை

கட்டளைக் கலித்துறை

மழைபோல் மரகதம் போல்எம்பி
ரான்வளர் கோயில் அன்னீர்
பிழைபோம் இவர்க்கிதை யாருரைப்
பார்இவர் பின்வந்தெய்த
தழைபோய் உறைத்த வருத்தம்
பொறாமை கொல் சங்கரன்பால்
உழைபோய் ஒதுங்க முயல்போய்
மதிபுக்கு ஒளித்ததுவே? 93

தழை - மலர்களை யிடையிட்டுத் தளிர்களால் செய்வதோர் உடைவிசேடம். இங்ஙனம் தொடுத்த தழையை ஆடையாக உடுத்திக் கொள்ளுதல் குறிஞ்சி நிலத்து மகளிர் இயல்பு.

கார்மேகம் போலும் நீல மணி போலும் நம் பெருமாள் திருக்கண் வளர்ந்தருளுகின்ற திருவரங்கத்தை ஒத்திருப்பவர் களே! தவறு செய்து போன இத்தலைவருக்கு இவ்வரலாற்றை யாவர் சொல்லுபவர்? (எவருமில்லை). அவ்வரலாறு என்னையெனில் இவர் தொடர்ந்து வந்து பிரயோகித்த தழையானது சென்றுபட்ட வருத்தத்தைப் பொறுக்க மாட்டாமையினால் அன்றோ சிவனிடத்தில் மானானது சென்று ஒளிக்க, முயலானது போய் சந்திரனிடத்திற் சேர்ந்து மறைந்துவிட்டது.

சந்திரனிடத்துள்ள களங்கத்தை முயல் என்பது கவிமரபு.

தலைவி இரங்கல் (கார்காலம்)

எண்சீர் ஆசிரிய விருத்தம்

ஒளிக்கும் இரு சுடர்க்கவளம் விழுங்கும் பேழ்வாய்
உரும்முழக்கத்து இந்திரவில் ஓடை நெற்றித்
துளிக்கும்மழை மதக்கொண்மூக் களிற்றை மின்னல்
தோட்டிமா ருதப்பாகர் துரத்தும் காலம்

Koviloor Digital Library

அளிக்குலமும் களிக்குமயில் குலமும் பாடி
ஆடுபொழில் திருவரங்கர் அணையாக் காலம்
விளிக்கும்அலைக் கருங்கடலும் ஒறுக்கும் காலம்
வினையேற்கு விழிகள்துயில் மேவாக் காலம். 94

பருவங் குறித்துச் சென்ற தலைமகன் கார்காலம் வந்த அளவிலும் மீண்டு வாரானாக, தலைவி அக் கார்காலத்தைக் கண்டு இரங்கிக் கூறியது இது. முன் இரண்டு அடிகளில் உருவக அணி காண்க.

விளங்குகின்ற சூரிய சந்திரர்களாகிய கவளங்களை விழுங்குகின்ற பிளவுபட்ட வாயையும் இடையாகிய முழக்கத்தையும் இந்திர தனுசாகிய முகபடாத்தை யணிந்த நெற்றியையும் பெய்கின்ற மழை நீராகிய மதநீரையும் உடைய மேகமாகிய யானையை மின்னலாகிய அங்குசத்தால் காற்றாகிய பாகர்கள் செலுத்துகின்ற காலம்.

வண்டுகளின் கூட்டமும் களிக்கின்ற மயில்களின் கூட்டங்களும் முறையே பாடி ஆடுகின்ற சோலையையுடைய திருவரங்க நாதர் வந்து சேராத காலம்; அதனால் ஆரவாரஞ் செய்கின்ற அலைகளையுடைய கரிய கடலும் நோய் செய்கின்ற காலம்; தீவினையுடைய எனக்கு கண்கள் தூக்கம் பொருந்தாத காலம்.

தலைவி இரங்கல் (இளவேனிற் காலம்)

அறுசீர் ஆசிரிய விருத்தம்

மேவலர்வாழ் தென்னிலங்கை மலங்கவொரு
காலிருகால் விற்கு னித்துஎய்
ஏவலர்வாழ் திருவரங்கத்து எமையிருத்திப்
போனவர்வாட் டில்லை போலும்
கோவலர்வாய்க் குழலோசைக்கு ஆநிரைகள்
செவியேற்கும் குறும்புன் மாலைப்
பூவலரின் மணம்பரப்பி இளவேனில்
வரவந்த பொதியத் தென்றல்! 95

Koviloor Digital Library

தலைமகனைப் பிரிந்த தலைமகள் இளவேனிற்காலம் வரக்கண்டு இரங்கிக் கூறியது, இது,

இளவேனிற் காலம் வர அப்போது இடையர்கள் வாயினால் ஊதுகின்ற வேய்ங்குழலினது ஒலிக்குப் பசுக் கூட்டங்கள் காது கொடுத்துக் கேட்கின்ற சிறிய புல்லிய மாலைப் பொழுதில் மலர்ந்த மலர்களின் வாசனையை வீசிக்கொண்டு வந்த மலய மலையினின்றும் வருகின்ற தென்றற் காற்று, அரக்கர்கள் வாழ்கின்ற தெற்கிலுள்ள இலங்கா பட்டணம் கலங்கும்படி ஒருதரம் கோதண்டத்தின் இரு கோடிகளையும் வளைத்து எய்த அம்பில்வல்ல எம்பெருமாள் வாழ்கின்ற திருவரங்கத்தில் என்னைத் தனியே விட்டுப் பிரிந்து போனவர் போனநாட்டில் இல்லை போலும்.

தோழி இரங்கல்

கட்டளைக் கலித்துறை

தென்றலைக் குங்குமச் சேற்றைப்
பொறாள்சிறி யாள்பெரிய
துன்றலைக் குந்துடிக் கும்என்செய்
வாய்துய ரால்அழைத்த
வன்றலைக் குஞ்சரம் காத்தாய்
இலங்கை மலங்கவளைத்து
அன்றலைக் கும்சரத் தாய்அரங்
காஅண்டர் ஆதிபனே. 96

முதலை கவர்ந்த வருத்தத்தால் ஆதிமூலமே என்று கூப்பிட்ட வலிய தலையையுடைய கஜேந்திராழ்வானைப் பாதுகாத்தவனே! இலங்கை கலங்கும்படி வில்லை வளைத்து அந்நாளில் இராமாவதாரத்தில் அலையச் செய்த அம்புகளையுடையவனே! அரங்கனே! தேவர் தலைவனே! சிறிய என்மகள் தென்காற்றையும் குங்குமப் பூவோடு கலந்த சந்தனக் குழம்பையும் பொறுக்கமாட்டாள்; நீண்டு உயர்ந்த நெருங்கிய அலைகளுக்கும் வருந்துவாள். என்ன பரிகாரம் செய்ய வல்லாள்?

Koviloor Digital Library

தலைவி கூற்று
கட்டளைக் கலிப்பா

அண்டர் போற்றும் திருவரங் கேசனார்
அணிய ரங்கத் திருமுற்றம் எய்தினால்
பண்டு போன வளையாழி வாங்குவேன்
பாவி யாது பராமுகம் பண்ணினால்
தண்டும் வாளும் சிலையும் இருக்கவே
சங்கும் ஆழியும் தாரும்என் பேன்அவை
தொண்ட ருக்குஒற்றி வைத்தோம்என் றோதினால்
துவள மாலையைத் தொட்டுப் பறிப்பெனே. 97

தேவர்கள் எல்லாம் வணங்கித் துதிக்கின்ற திருவரங்க நாதரது அழகிய அங்கமாகியது திருமுன்றிலை யான் அடைந்தால் முன்னே கவர்ந்து கொண்டு போன சங்கு வளைகளையும் மோதிரத்தையும் மீளவும் பெற்றுக் கொள்வேன். அவர் அவற்றைக் கொடுத்தருளாமல் அலட்சியம் செய்தால் அவ்வளையாழிகளுக்கு ஈடாக உமது பஞ்சாயுதங்களுக்குள்கதையும், வாளும், வில்லும் இருக்கவே சங்கையும் சக்கரத்தையும் கொடும் என்று சொல்வேன் அவற்றை அடியார்களுக்கு ஈடாக வைத்துவிட்டோம் (திரு இலச்சினையிட்டு வைத்து விட்டோம்) என்று சொன்னால் திருத்துழாய் மாலையைத் திருமேனி தீண்டிப் பிடுங்கிக் கொள்வேன்.

கலிநிலைத்துறை

தொட்டுண்ட தயிர்வெண்ணெய்க்கு அன்று ஆய்ச்சி
உரலோடு சூழ்ந்து கட்டக்
கடுண்டு கழலவிரகு அறியாமல்
இருந்து அழுத கள்வன் யாரே?
கட்டுண்டான் அரங்கனெனக் கட்டுரைப்பார்
ஆனாலும் கங்கைசூடி
மட்டுண்ட கொன்றையான் மலர்மேலான்
அறிவரிய வடிவன் அன்றே? 98

எடுத்துப் புசித்த தயிருக்கும் வெண்ணெய்க்குமாக அந்நாளில் (கிருஷ்ணாவதாரத்தில்) இடைச்சி (யசோதை.

Koviloor Digital Library

உரலோடு பிடித்துச் சுற்றிக் கடை கயிற்றால் கட்டிவிட, கட்டப்பட்டு, விலகிப்போக உபாயத்தைத் தெரியாமல் அங்கேயே அழுது கொண்டிருந்த கள்ளத்தனம் உடையவன் யார்? நம் பெருமாள் அன்றோ?.

அரங்கன் கட்டுப்பட்டான் என்று உறுதிப்பட இழித்துச் சொல்லுவாரானாலும் அவன் கங்கா நதியைச் சடையில் தரித்து வாசனையைக் கொண்ட தேன்நிறைந்த கொன்றைப் பூமாலையையுடைய உருத்திரனும் தாமரைப் பூவில் தங்குகின்ற பிரமனும் அறிதற் கரிய வடிவத்தை உடையவன் அன்றோ?

எம்பெருமானுடைய பரத்துவமும் சௌலப்பியமும் இங்குப் பேசப்படுகின்றன.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

வடியாத பவக்கடலும் வடிந்துமூல
மாலை கடந்து அப்பாற்போய் வைகுந்தம் சேர்ந்து
அடியார்கள் குழாம்கூடி உனதடிக்கீழ்
அடிமைசெயும் அக்காலம் எக்காலம்தான்?
கொடியாடும் மணிமாட அயோத்திமூதூர்
குடிதுறந்து திருவரங்கம் கோயில்கொண்ட
நெடியானே அடியேனான் முயற்சியின்றி
நின்னருளே பார்த்திருப்பன் நீசனேனே. 99

கொடிகள் அசைகின்ற இரத்தினங்கள் இழைத்த மாளிகைகளையுடைய அயோத்தியென்ற பழைய நகரத்தில் தங்குதலைவிட்டு, திருவரங்கத்தை இருப்பிடமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற பெரியோனே!

வற்றிப் போகாத பிறவிப் பெருங்கடலும் வற்றப் பெற்று மூலப் பிரகிருதியைத் தாண்டி, அதற்கு அப்புறஞ் சென்று ஸ்ரீ வைகுண்டம் அடைந்து, தொண்டர்களது கூட்டத்தோடு சேர்ந்து, உன்னுடைய திருவடியின் கீழ் கைங்கரியம் செய்திருக்கின்ற அக்காலம் எப்பொழுதோ? உனது அடியவனும் கடைப்பட்டவனுமாகிய நான் பிரயத்தனம் சிறிதும் இல்லாமல் உனது திருவருளையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

Koviloor Digital Library

கட்டளைக் கலித்துறை

நீசச் சமணர்க்குஞ் சூனிய
வாதர்க்கும் நீதியற்ற
பூசல் பவுத்தர்க்கும் சைவர்க்கும்
யார்க்கும் புகலுகின்றேன்
நாசப் படாவுயிர் எல்லாம்
முதல்தந்த நாதன்கண்டீர்
ஆசற்ற சீரரங் கத்துஆதி
மூலத்து அரும்பொருளே. 100

கீழ்மையை யுடைய சமணர்களுக்கும் நாஸ்திகவாதி களுக்கும் நியாய மில்லாத வாதஞ் செய்கிற பௌத்தர் களுக்கும் சைவர்களுக்கும் மற்றைப் புறச் சமயத்தவர் யாவர்க்கும் சொல்லுகின்றேன். அழிவில்லாத சீவன்களை யெல்லாம் ஆதியிற் படைத்த தலைவன் குற்றமில்லாத திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஆதிமூலமாகிய அறிதற்கரிய பரவஸ்துவே: அறியுங்கள்.

நேரிசை வெண்பா

அரும்புண்ட ரீகத்து அடியிணைக்குளென் நெஞ்சம்
இரும்புண்ட நீராவது என்றோ – விரும்பி
அறம்திருந்தும் கோயில் அரங்கா உனைநான்
மறந்திருந்தும் மேற்பிறவா மல்? 101

எல்லாத் தருமங்களும் திருத்தமாகச் செய்யப்படுகின்ற திருவரங்கம் பெரிய கோயிலில் திருவுள்ளம் உகந்து எழுந்தருளியிருப்பவனே! உன்னை நான் மறந்திருந்தாலும் இனிப் பிறவியெடாதபடி பெறுதற்கரிய தாமரை மலர் போன்ற உன்னுடைய உபயதிருவடிகளுக்கு எனது மனம் பழுக்கக் காய்ச்சிய இரும்பு உட்கொண்ட நீர் போல மீண்டு வாராமல் லயமடைவது எந்நாளோ?

தரவு கொச்சகக் கலிப்பா

பிறவியெனும் கடலழுந்திப்
பிணிபசியோடு இந்திரியச்
சுறவம் நுங்கக் கொடுவினையின்
சுழல் அகப்பட்டு உழல்வேனோ?

Koviloor Digital Library

அறமுடையாய் என்னப்பா!
அரங்கா! என் ஆருயிர்க்கு
உறவுடையாய் அடியேனை
உயக்கொள்வது ஒருநாளே. 102

இது உருவக அணி, இதனால் திருமாலாகிய தோணி யொன்றே பிறவிக் கடலினின்று மீண்டும் கரையேறுவதற்கு ஏற்ற உபாயமாம் என்றவாறு.

எல்லாத் தருமங்களையும் உடையவனே! எனது சுவாமியே! அரங்கா! எனது அரிய ஆத்துமாவுக்கு உறவினன் ஆனவனே! பிறப்பென்கிற பெரிய கடலில் மூழ்கி நோயும் பசியும் பஞ்சேந்திரியங்களுமாகிய சுறாமீன்கள் விழுங்கும்படி கொடிய இருவினைகளாகிய நீர்ச் சுழியில் உட்பட்டுச் சிக்கிக் கொண்டு சுழலக் கடவேனோ? அடியேனை உஜ்ஜீவிக்கும்படி ஆட்கொள்வதாகிய ஒரு தினமும் உளதாகுமோ?

எழுசீர் ஆசிரிய விருத்தம்

ஒருபொருள் அல்லேன் இருவினை உடையேன்
உனதுதொண் டெனும்துறை குளித்துன்
பெருகுதண் ணளியின் பாசந்தொட்டு இழிந்து
பெரியதோர் முத்தியான் பெற்றேன்
திருவும்மா மணியும் சங்கமும் ஏந்திச்
செய்யதா மரைபல பூத்துக்
கருநிற முடைத்தாய் நதியொரு தரங்கம்
கலந்ததோர் கருணைவா ரிதியே! 103

ஸ்ரீ மகாலட்சுமியையும் (நிதிகளையும்), அழகிய கௌஸ்துப ரத்தினத்தையும் (பெரிய ரத்தினங்களையும் பாஞ்ச சன்னியத்தையும் (சங்குகளையும்) தரித்துச் சிவந்த பல தாமரை மலர் போன்ற திரு அவயவங்கள் விளங்கப்பெற்று, கருநிறத்தை யுடையதாய் அலைமோதுகின்ற காவேரி யாற்றினிடம் சேர்ந்ததாகிய ஒப்பற்ற அருட்கடலே! ஒரு பொருளாக மதிக்கப்படாதவனும் இரண்டு வினைகளையும் உயைடவனும் ஆகிய யான் உனது கைங்கரியமாகிய வழியில் பிரவேசித்து உனது மிக்க குளிர்ந்த திருவருளாகிய கயிற்றைப் பிடித்துக் கொண்டு இறங்கிப் பெரியதொரு பரமபதத்தைப் பெற்றேன்.

Koviloor Digital Library

ஒன்றுக்கும் பற்றாதவனாய் இருவினைகளையும், உடைய யான் உனக்கு அடிமைபூண்டு உனது தண்ணளியையே பற்றாகக் கொண்டு முத்திரையைப் பெற்றேன் என்பதாம்.

கட்டளைக் கலித்துறை

வாரி அரங்கம் வருதிருப்
பாவைக்கும் மண்மகட்கும்
சீரியர் அங்கண் வளர்திருக்
கோலமும் தென்திருக்கா
வேரி அரங்க விமானமும்
கோயிலும் மேவித்தொழார்
பூரியர் அங்கவர் கண்ணிரண்டு
ஆவன புண்ணிரண்டே. 104

திருப்பாற் கடலினிடத்திலின்றும் தோன்றிய திருமகளுக்கும் கடலாற் சூழப்பட்ட நிலமகளுக்கும் சிறந்த கணவராகிய நம் பெருமாள் அழகாகத் திருக்கண் வளர்ந்தருளுகின்ற திருக்கோலத்தையும் அழகிய திருக் காவேரியின் மத்தியிலுள்ள ஸ்ரீரங்க விமானத்தையும் பெரிய கோயிலையும் விரும்பி வணங்காதவர்கள் கீழ் மக்களாவர்; அத்தன்மையுடைய அவர்களது இரண்டு கண்களும் இரண்டு புண்களேயாம். (கண்கள் அல்லவாம்).

நேரிசை வெண்பா

புண்ணார் உடற்பிறவி போதுமெனக் கும்உனக்கும்
எண்ணா திருந்தது இனிப்போதும் – கண்ணா!
குழற்காளாய்! தென்னரங்கக் கோயிலாய்! நின்பொற்
கழற்குஆளாய் நின்றேனைக் கா. 105

கிருஷ்ணனே! வேய்ங்குழலையுடைய காளை போன்றவனே! தென் திருவரங்கம் கோயிலையுடையவனே! இனி, எனக்கும் மாமிசம் நிறைந்த உடம்பையெடுத்துப் பிறக்கும் ஜன்மம் போதும்; உனக்கும் என்னை நினையாமலே யிருந்தது போதும், இனியாயினும் உனது அழகிய திருவடிகளுக்கு அடிமையாய் நின்ற என்னை ரட்சித்து அருள்.

காளாய் - காளை என்பதன் விளி.

Koviloor Digital Library

அறுசீர் ஆசிரிய விருத்தம்

காவிரிவாய்ப் பாம்பணைமேல் கருமுகில்போல்
கண்வளரும் கருணை வள்ளல்
பூவிரியும் துழாய்அரங்கர் பொன்னடியே
தஞ்சமெனப் பொருந்தி வாழ்வார்
யாவரினும் இழிகுலத்தோர் ஆனாலும்
அவன்கண்டீர் இமையா நாட்டத்
தேவரினும் முனிவரினும் சிவன் அயன்என்று
இருவரினும் சீரி யோரே. **106**

எம்பெருமானது திருவடிகளே தஞ்சமென்ற உறுதியை யுடைய சாத்துவிகர்கள், அகங்கார மமகாரங்கள் மண்டி நிற்கப் பெற்ற தேவர் முதலியோரினும் உயர்ந்தவர் என்றவாறு.

உபய காவேரி மத்தியில் சேஷ சயனத்தில் காள மேகம் போலத் திருக்கண் வளர்ந்தருளுகின்ற திருவருளையுடைய வரையாது கொடுப்பவராகிய பொலிவு மிக்க திருத்துழாய் மாலையையுடைய ரங்கநாதரது அழகிய திருவடிகளையே அடைக்கலமாகக் கொண்டு சரணமடைந்து வாழ்பவர்கள் எல்லோரினும் தாழ்ந்த குலத்தில் தோன்றியவராயினும் அவரன்றோ இமையாத கண்களையுடைய தேவர்களினும் முனிவர்களினும் சிவனும் பிரமனும் என்கிற இரண்டு பேரினும் சிறப்பினை யுடையோராவர்.

எண்சீர் ஆசிரிய வண்ண விருத்தம்

மழைமுகில் எனவே பணாமு கம்திகழ்
வரியரவு அணையேறி வாழ்அ ரங்கர்தம்
எழில்பெறும் இருதா ளிலேக லம்பகம்
எனுமொரு தமிழ்மா லைதான் அணிந்தனன்
குழலிசை அளிமே வுகூரம் வந்தருள்
குருபரன் இருபா தபோது அடைந்தவன்
அழகிய மணவா ளதாசன் என்பவன்
அடியவர் அடிசூ டிவாழும் அன்பனே! **107**

Koviloor Digital Library

இது தம்மைப் பிறர்போல நாந்தி (முன்னுரை, வாழ்த்து) கூறியது. இவ்வாறே நம்மாழ்வார் முதலியவரும் கூறுதல் காண்க.

படங்களோடு கூடிய ஆயிர முகங்கள் விளங்குகின்ற புள்ளிகளையுடைய திருவனந்தாழ்வானாகிய சயனத்தில் கார்காலத்து மேகம் போலப் பள்ளிக்கொண்டு அருளுகின்ற ரங்கநாதரது அழகு பெற்ற உபய திருவடிகளிலே கலம்பகம் என்கிற தமிழா லாகியதொரு மாலையை (பிரபந்தத்தை)ச் சூடினான். யாவரென்னின் வேய்ங்குழலின் இசை போலும் பாட்டிசையையுடைய வண்டுகள் விரும்பி மொய்க்கின்ற கூரம் என்னும் பதியில் திரு அவதரித்த சிறந்த ஆசாரியராகிய ஆழ்வானது உபய திருவடித் தாமரைகளை அடைந்தவனும் அடியார்களது திருவடிகளைத் (தலைமேல் வைக்கும்) மாலையாகக் கொண்டு சூடிவாழ்கின்ற பக்தனுமாகிய அழகிய மணவாளதாசன் என்கிற திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

'குருபரன் இருபாத போது அடைந்தவன்' என்பதற்கு கூரத்தாழ் வானது உபய பாதங்களாகிய பராசரபட்டர், வேதவியாசபட்டர் என்னும் இரண்டு திருக்குமாரர்களை ஆசிரியராக அடைந்தவன் என்றவாறு.

திருவரங்கக் கலம்பகம் முற்றிற்று.

✪ ✪ ✪

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
25758

Koviloor Digital Library

Koviloor Digital Library

நாலாயிர திவ்ய பிரபந்தம்
தமிழ்விடுதூது
முத்தொள்ளாயிரம்
நந்திக் கலம்பகம்
நாலடியார்
நன்னூல் காண்டிகையுரை
நம்பியகப் பொருள்
தொல்காப்பியம்
நாச்சியார் திருமொழி
மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
இரட்சண்ய மனோகரம்
குயில் பாட்டு
சேக்கிழார் பிள்ளைத் தமிழ்
பதினெண் கீழ்க்கணக்கு
திருப்புகழ்
வளையாபதி குண்டலகேசி
கண்ணன் பாட்டு
பாஞ்சாலி சபதம்
சிலப்பதிகாரம்
சீவகசிந்தாமணி
திருமுருகாற்றுப்படை
தண்டியலங்காரம்
ஒழிவிலொடுக்கம்
தொடையதிகாரம்
யாப்பருங்கலக்காரிகை
குணங்குடி மஸ்தான் சாகிப் பாடல்கள்
கால்டுவெல்லின் திராவிட ஒப்பிலக்கணம்
தேம்பாவணி
சங்க இலக்கியம்
குடும்ப விளக்கு —விளக்கவுரையுடன்
நேதாஜியின் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்
காவடிச்சிந்து
ஐம்பெருங் காப்பியக் கதைகள்
உடை தயாரித்தல்
மீனாட்சியம்மை குறம்

முல்லை நிலையம்
9, பாரதி நகர் முதல் தெரு,
தி. நகர், சென்னை—600 017.